பக்கங்கள்: முப்பத்திரண்டு +06

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 01 ஞாயிற்றுக்கிழமை (17.07.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 233



06
தேவையை நிறைவேற்ற யார் வருவார்?



09
உள்ளே போனால் உண்மை புரியும்



25
அரசியல் ஆகிவிட்ட கைதியின் காதல்



29
சச்சினின் சதம்; சதம் கடக்க வரவேற்கிறேன்

# முடிந்தால் ௬ மாதத்துள் தீர்வை முன்வையுங்கள்

## சரவணபவன் எம்.பி.அரசுக்கு சவால்





யாழ்ப்பாணம், ஜூலை 17

தமிழர்களை மிக மோசமான பிச்சைக்காரர் நிலைமைக்குள் பிடித்துத் தள்ளியது மஹிந்த ராஜபக்ஷ அரசுதான். முள்ளிவாய்க்காலிலும், பின்னர் தடுப்பு முகாம்களிலும் அடைத்து வைத்து அவர்களிடம் இருந்த எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டு அவர்களைப் பிச்சைக்காரர்கள் ஆக்கிய இந்த ஜனாதிபதியின் சகோதரர்தான் சொல்கிறார் பிச்சைக்காரன் தன் புண் ஆறாமல் பார்த்துக்கொள்வது போல சில அரசியல் கட்சிகளும் தமிழர் பிரச்சினை தீர்ந்து விடாமல் இருப்பதில் அக்கறையாக இருக்கிறார்கள் என்று.

இனப் பிரச்சினை தொடர வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் விரும்பவில்லை;அரசுதான் விரும்புகிறது. எங்கே உங்களால் முடிந்தால் இன்னும் ஆறே மாதங்களுக்குள் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்போம் என்று இந்தத் தேர்தலில் மக்களுக்கு வாக்களித்து அதனை நிறைவேற்றுங்கள் பார்க்கலாம். நான் சவால் விடுகிறேன், நீங்கள் அப்படிச் செய்தால் நான் அரசியலை விட்டே ஒதுங்குகிறேன்.

- இவ்வாறு ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவான். (31 ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்ற விசாரணைகள் அவசியம் அமெரிக்காவில் அழுத்தம் அதிகரிப்பு

வோஷிங்டன், ஜூலை 17

சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட 'சிறிலங்காவின் கொலைக்களம்' என்ற ஆவணப்படத்தைப் பார்த்த பின்னர், இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணைகள் அவசியம் என்று அமெரிக்க நாடாளுமன்ற (31 ஆம் பக்கம் பார்க்க)

## சம்பந்தன், மனோ கணேசன் இன்று முதல் வடக்கில் பிரசாரம்

### கிளிநொச்சியில் முதலாவது கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோர் இன்று கிளிநொச்சி வருகின்றனர்.

இன்று மாலை 4 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பணிமனையில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் இவர்கள் உரையாற்றுவர்.

கூட்டமைப்பின் கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேந்திரன், இரா செல்வராசா, கீ.லோகேஸ்வரன், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஆகியோரும் உரையாற்றுவர்.

கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி (31 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் இந்திய உதவியுடன் வீடு அமைக்கும் பணி ஆரம்பம்

### அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 17

இந்திய அரசின் நிதி உதவியில் வடக்கில் அமைக்கப்படவுள்ள 50 ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்கு முன்னோடியான 'லைட் புறொஜெக்ட்' யாழ். மாவட்டத்தில் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இந்திய அரசின் வீட்டுத் திட்டம் இந்த மாதம் ஆரம்பிக்கப்படும் என்று இந்தியத் தூதரகம் தெரிவித்திருந்தது. அது தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்திய அரசின் நிதிப் பங்களிப்புடன் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் 50 ஆயிரம் வீடுகள் அமைப்ப (31 ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் அடக்குமுறை, வன்முறைகளுக்கு மத்தியில் நீதி, நியாயமான தேர்தல் நடக்க வாய்ப்பில்லை

## ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ கிளிநொச்சியில் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 17

அரசின் அடக்கு முறைகளுக்குள்ளும், வன்முறைகளுக்குள்ளும் நீதியான நியாயமான தேர்தல் நடக்கும் என்று நாங்கள் நம்பவில்லை. இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க கிளிநொச்சியில் வைத்து நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நடைபெற இருக்கின்ற தேர்தல் ஜனநாயாக வழியில் பரப்புரைகளை நடத்தவோ அல்லது கூட்டங்களை நடத் தவோ இலங்கையில் சகல இடங்களிலும் எங்களுக்கு அனுமதிகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆளும் அரசாங்கமானது கடந்த நாடாளுமன்றத் தேர்த லிலோ, மாகாண சபைத் தேர்தலிலோ எதிலுமே நீதியான தேர்தலை நடத்தவில்லை. அந்த வகையில் தான் இந்தத் தேர்தலும் எங்களுக்கு நம்பிக்கையீனத்தை தருகின்றது.

சகல ஒடுக்குமுறைகளுக்கும் அநீதிகளுக்கும் எதிராக மக்கள் சக்தியை கட்டியெழுப்புகின்ற வகையிலே தான் நாங்கள் இந்தத் தேர்தலிலே போட்டியிடுகின் றோம். அத்துடன் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும். கைது செய்யப்பட்டு, மறைமுகமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து கைதிகளின் பெயர் விவரங்களையும் வெளியிட வேண் டும். யுத்தத்தின் போது ஏற்பட்ட அழிவுகளுக்கும் இழப்புகளுக்கும் இந்த அரசு உரிய நட்ட ஈடுகளை வழங்க வேண்டும். (31 ஆம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானம் காணப் படும் சாத்தியம்.

# திறப்புவிழா என்ற பெயரில் பிரசாரம் செய்யும் டக்ளஸால் பிரசாரக் கூட்டம் நடத்த முடியுமா?

## சவால் விடுகிறார் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூலை 17

அரச அனுசரணையுடன் கால்கோள் விழா, திறப்பு விழா என்ற பெயரில் தனது பிரசாரங்களை நடத்தும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது கட்சியின் பெயரால் ஒரு தனியான தேர்தல் பிரசாரக் கூட்டத்தை நடத்த முடியுமா?

அமைச்சர்களையும், ஜனாதிபதியையும் அழைத்து வந்து பூச்சாண்டி காட்டும் டக்ளஸின் இரட்டை வேடத்தை மக்கள் புரிந்து கொண்டனர். மக்கள் முன் தனியாக செல்வாரா? என்று சவால் விடுகின்றார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன்.

நேற்று முன்தினம் மாலை பளைபஸ்நிலையத்தில்நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே இந்த சவாலை விடுத்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:


டக்ளஸ் தேவானந்தா பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்து பொய்யான வாழ்க்கை வாழ்பவர்.

தனது சொந்த தமிழ் மக்களைப் பற்றி, தமிழ் ஊடகங்களைப் பற்றி, தமிழ் கட்சிகளைப் பற்றி அரசுக்கும் ஜனாதிபதிக்கும் தவறான மொழி பெயர்ப்புக்களை, தப்பான கருத்துக்களை வழங்கும் ஓர் இடைத்தரகராகவே செயற்பட்டு தன்னையும் தன் பதவிகளையும் காத்துக் கொள்பவர்.

டக்ளஸின் வீணை இன்று வீணாகப் போய்விட்டது. தன்னை இழந்துவிட்டார். தன் கட்சியின் சின்னத்தை இழந்துவிட்டார். கட்சியின் தலைவன் என்ற அடையாளத்தை இழந்துவிட்டார்.

தென்பகுதி சிங்களக் கட்சியில் ஜனாதிபதியின் கட்சியில், இரவல் சின்னமான வெற்றிலை சின்னத்தில் வாக்கு கேட்கின்றார். அமைச்சர் டக்ளஸினால் தன் கட்சியின் பெயரை சொல்லக் கூட முடியவில்லை. தன் சொந்த கட்சியின் வீணை அடையாளத்தில் வாக்கு கேட்க முடியவில்லை.


தன்னை, தன் சுய அடையாளத்தை இழந்துவிட்ட அமைச்சர் நம் தமிழ் மக்களை சிங்களக் கட்சிக்கு அடிமைகளாக்க முனைகின்றார். கடந்த 60 வருடங்களாக சாத்வீக வழியிலும், போராட்ட வழியிலும் நமது அடிப்படை உரிமைகளுக்காக, தமிழ் தேசியத்துக்காக பல லட்சம் உயிர்களைக் காணிக்கையாக்கி உள்ளோம். நமக்காக உயிர்த் தியாகம் செய்த அந்த ஜீவன்களின் ஆத்ம சாந்திக்காக அஞ்சலி செலுத்தக் கூட அனுமதி மறுக்கப்படுகின்றது. கல்லறைகள் சிதைக்கப் பட்டுள்ளன. தமிழர்களின் அடையாளங்கள் தரைமட்டமாக்கப் படுகின்றன. இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் டக்ளஸ் தேவானந்தா சிங்களத் தலைவர்கள் புடை சூழ வந்து வாக்குப் பிச்சை கேட்கின்றார். தமிழர்களின் தன்மானப்பிரச்சினைகளை பிச்சைக் காரனின் காலில் உள்ள புண் என்று கிண்டல் அடிக்கும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு ஊர் ஊராக காவடி தூக்குகின்றார்.



தமிழர்கள்கொல்லப்படவில்லை என்று சாட்சி கூறுகின்றார். தமிழர்கள் சுதந்திரமாக வாழ்கின்றனர் எனப் படம் காட்டுகின்றார்.

பொய்மையின் முழு அவதாரமாக அமைச்சர்களின் வேசத்துடன் இராணுவத்தின் பக்கபலத்துடன் பவனிக்கும் டக்ளஸின் பொய்யான வாக்குறுதி அளிக்கும் அற்ப சொற்ப சலுகைகளுக்காகவும் சிங்களக் கட்சியின் வெற்றிலை சின்னத்துக்கு வாக்களித்தால் அது தமிழ் இனத்துக்கு தமிழ் சமூகத்துக்குச் செய்யும் மாபெரும் துரோகமாகும்: நாம் தன்மானம் உள்ள தமிழர்கள் என்பதை நிரூபிக்க ஒரே ஒரு தமிழ் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களிக்க வேண்டும். பச்சிளைப் பள்ளி தமிழர்களின் பூமி. அதைப் பாதுகாக்க வேண்டும் என்றார் சரவணபவன் எம்.பி. (ஐ-2)

## ஆடிவேல் பவனி நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூலை 17

நல்லூர் ஸ்ரீ பால கதிர்காமம் தேவஸ்தான ஆடிவேல் ரத பவனி நேற்று சனிக்கிழமை ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசைகளைத் தொடர்ந்து மு.ப. 10 மணிக்கு ஆரம்பமானது.

ஊர்வலத்தில் முதலில் வேலாயுதமும் அதைத் தொடர்ந்து இந்திர லோகத்து ஐராவதம் யானை பூரண கும்பம் எடுத்துவர, இடும்பன் நவவீரர்களைத் தாங்கிய ஊர்தியும் அதைத் தொடர்ந்து ஆடிவேல் ரதமும் பருத்தித்துறை வீதிவழியாக வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தை மு.ப. 11.30க்கு வந்து சேர்ந்தது.

வேல் ரத பவனி வந்த பருத்தித்துறை வீதியில் பொதுமக்கள் தமது வீடுகளில் பூரண கும்பம் வைத்து வழிபாடுகள் செய்தனர். ஊர் வலத்தில் பக்தர்களும் கலந்துகொண்டனர். (ஐ-7)

## வான் மோதி சிறுமி காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

'ஹைஏஸ்' வான் மோதியதால் தலையில் அடிபட்டு கடும் உட்காயங்களுக்குள்ளான சிறுமி சங்கானை வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் சங்கரத்தையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த க. கலைவாணி (வயது - 11) என்ற சிறுமியே கடும் காயங்களுக்குள்ளான வராவார்.

தனியார் கல்விநிலையம் ஒன்றுக்குச் சென்றபோதே இந்த விபத்து இடம்பெற்றது. வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ-4)

## எரிபொருள் நிலையம் நேற்றுத் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் புறாப்பொறுக்கியில் அமைக்கப்பட்ட உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தை பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று மு.ப. 10 மணிக்கு நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர்கள், இராணுவ அதிகாரிகள், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முக்கிய அதிகாரிகள், கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

குறிப்பிட்ட எரிபொருள்நிலையத்தின் கட்டடப் பணிகள் ஏற்கனவே முடிவடைந்த போதும் அது நீண்டகாலமாகத் திறந்து வைக்கப்படாமல் இருந்தது.

இந்த நிலையில் நேற்று இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் அமைச்சரால் நாடா வெட்டித் திறந்து வைக்கப்பட்டது. (319)

## ஜெய்ப்பூர் நிறுவனத்தின் ஆண்டு விழா நேற்று



யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் 24 ஆவது ஆண்டு நிறைவு தினவிழா நேற்று சனிக்கிழமை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

நிறுவனத் தலைவர் டாக்டர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வரவேற்புரையை திருமதி ஏ.ஏ.அலோசியஸ் நிகழ்த்தினார்.

அதனைத்தொடர்ந்து பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உரை நிகழ்த்தினார்.

இதன் பின்னர் மாற்று வலுவுடையோர் மற்றும் நிறுவன ஊழியர்கள் பங்குகொண்ட 'இழப்புக்கள் இல்லாத இழப்புக்கள்' எனும் தலைப்பிலான இசை நாடகம் மற்றும் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

அதனைத்தொடர்ந்து விளையாட்டு மற்றும் கலை நிகழ்வுகளில் பங்குபற்றியவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (த-319)

# நிகழ்வுகள்

### அழகியல் கண்காட்சி

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரி நடத்தும் அழகுக் கலைக்காட்சி இன்றும், நாளையும் முற்பகல் 10 மணி முதல் 4.30 மணி வரை இல: 128, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியின் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வுக்கு யாழ். கல்வி வலய ஓய்வுபெற்ற மனைப்பொருளியல் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் செல்வி யோகேஸ்வரி தம்பிராசா கலந்து கொள்வார்.

### விளையாட்டு விழா

சுழிபுரம், ஜூலை 17

வலிமேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் சங்கானைக் கோட்ட சுழிபுரம் III குடும்ப முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா நாளை நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.குகநேசன் கலந்துகொள்வார். (ம-28)

### நினைவுப் பேருரையும் கல்விக் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், ஜூலை 17

முன்னாள் அதிபர் மணியம் கணபதிப்பிள்ளையின் நான்காம் ஆண்டு நினைவாக நினைவுப் பேருரையும் கல்விக் கௌரவிப்பும் இன்று காலை 8.30 மணி முதல் தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

மணியம் கணபதிப்பிள்ளை ஞாபகார்த்த நிதியத்தின் தலைவர் ராஜ் எஸ். குகன் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் கிழக்கு மாகாண செயற்பாட்டு பிரதம முகாமையாளர் கே.பி. ஆனந்த நடேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

தரம் 5 மாணவர்கள் கௌரவிப்பு, ஆசிரியர் சேவை நலன் கௌரவிப்பு, பல்துறைசார் விருது வழங்கல் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறும். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரியில் நேற்றுப் பிரசாரம்



சாவகச்சேரியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், கூட்டமைப்பு பிரமுகர் எஸ். அருந்தவபாலன் ஆகியோர் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# தேர்தல் முறைகேடுகளை பதிய வசதி

யாழ்ப்பாணம், ஜூலை 17

எதிர்வரும் 23ஆம் திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் விதிமுறைகளுக்கு விரோதமாக நடைபெறும் நிகழ்வுகள் தொடர்பான முறைப்பாடுகள் ஏற்கும் மத்திய நிலையமொன்று இராஜகிரியவிலுள்ள தேர்தல் திணைக்களத்தில் இயங்கி வருகின்றது.

இந்த நிலையத்தில் தேர்தல் திணைக்களத்தினதும், பொலிஸ் திணைக்களத்தினதும் அலுவலர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்து அரசியல் கட்சிகளினதும் செயலாளர்களின் முகவர்களும், பவ்ரல் மற்றும் தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையம் (CMEV) என்பனவற்றின் முகவர்களும் மத்திய நிலையத்தில் கடமையாற்றவுள்ளனர்.

**இதற்கான முறைப்பாடுகளை செய்யும் நிலையங்கள்:**

* தேர்தல் முறைப்பாட்டு மத்திய நிலையம் - இராஜகிரிய
தொலைபேசி 011-2877611 தொலைநகல் : 011 2877612, 011-2877613

* தேர்தல் முறைப்பாட்டு மத்திய நிலையம் - யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021-3211620 தொலைநகல் : 021 222 4699

* தேர்தல் செயலகம் - இராஜகிரிய
தொலைநகல் - 011-2868445, 011- 2868367, 011-2868368
தொலைபேசி - 011-2868441, 011-2868442, 011-2868443.

மேற்படி இலக்கங்களினூடாக உண்மையான விடயங்களை உள்ளடக்கியதாக முறைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் நிகழ்வு நடந்த இடம், நேரம் அதனோடு தொடர்புடைய நபர்கள், வாகனங்களின் இலக்கங்கள் என்பவற்றுடன் கூடிய தமது பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் என்பவற்றையும் சமர்ப்பிக்க வேண்டுமென்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார். (ஜ-15)

# வடக்கில் முதலீடு செய்வதற்கு 5 வெளிநாட்டு கம்பனிகளுக்கு அனுமதி

## அமைச்சர் பஸில் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ். மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்பவும், இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளையும் ஏற்படுத்தும் வகையிலும் அச்சுவேலியில் பெரும் தொழிற்சாலை ஒன்று உருவாக்கப்படும். மேலும் ஐந்து வெளிநாட்டு கம்பெனிகள் தொழிற்சாலைகளை வடபகுதியில் அமைப்பதற்கும் ஜனாதிபதி அங்கீகாரம் அளித்துள்ளார் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று காரைநகர் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசங்களில் பல்வேறு பாதை சீர்திருத்தப் பணிகளுக்கான அடிக்கற்களை நட்டதுடன், பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள், புலமைப் பரிசில்கள், விவசாயிகளுக்கான விவசாய உபகரணங்கள், நீர் தாங்கிகள் மற்றும் சைக்கிள்கள், வீட்டு உபகரணங்கள் என்பவற்றையும் கையளித்தார். இந்த வைபவத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் -

சில அரசியல் கட்சிகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இலங்கைக்கு எதிராக பிரசாரங்களைச் செய்தும் எத்தனை தடைகளை ஏற்படுத்தினாலும் அவை எல்லாவற்றையும் உடைத்து எறிந்து விட்டு வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் மூலம் வடபகுதி மக்களுக்கான அபிவிருத்திப் பணிகள் தொடரும்.

யாழ்ப்பாணத்தில் ஐந்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தொழிற்சாலைகளை அமைக்க ஜனாதிபதி அங்கீகாரம் அளித்துள்ளார்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இங்கே 14 பாடசாலைகளும் 100 கோயில்களும் அபிவிருத்தி செய்யப்படும். அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக இங்கு பெரிய அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. 40 வருடங்களில் செய்யப் படாதவற்றை 48 மணித்தியாலயங்களில் செய்து முடித்துள்ளேன். 14 பாதைகளை திறந்து வைத்துள்ளேன்.

சங்குபிட்டி, தொண்டைமானாறு பாலங்கள் குறிப்பிடத்தக்கன. இவை அனைத்தும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளின் பேரிலேயே கிடைத்தவை.

எனவே நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் உங்களுக்கு சேவை செய்பவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். அரசுடன் இணைந்து செயல்படுபவர்களைத் தெரிவு செய்தால்தான் அபிவிருத்திப் பணிகள் தொடரும். மாறாக அபிவிருத்திப் பணிகளை விமர்சனம் செய்பவர்களுக்கு வாக்களித்தால் அபிவிருத்திப் பணிகள் அனைத்தும் தடைப் பட்டுவிடும்.

எனவே நீங்கள் எல்லோரும் வெற்றிலை சின்னத்துக்கே வாக்களிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ. (ஜ-02)



# சந்தியடிச் சோமு

## மெண்டு துப்புறத்துக்குத் தானே வெத்தில

சங்கதி தெரியும்தானே! சொந்த இடத்துக்கு போகலாமென்று சொல்லிப்போட்டாங்கள். கனகாலமாக் காத்திருந்த அலுவல் எண்டு போட்டு வீடு பாக்கப் போனனான் பாருங்கோ. அதுதான் சந்திப் பக்கம் வரேலாமல் போயிட்டுது.

அதுக்கிடையில சோமண்ணைய நாங்கள் நிப்பாட்டிப் போட்டம் எண்டு சில சில் லெடுப்புக்கள் கதையள் விட்டவையாம் எண்டும் கேள்விப்பட்டன். அதைக்கேட்டு பலர் உண்மையோ எண்டு எனக்கு ஒரே அலைபேசிச்சினம்.

அந்த விசாரிப்புக்களில வினயம் இல்லை. ஆனால் மக்களுக்குத் தாங்கள் செய்யிறதெல்லாம் சேவை எண்டு கொண்டு பிஸினஸ் செய்யிறவையள் சிலர்தான் பொருமுகினம். சரி அவையள விடுங்கோ, எங்கட இனத்தில இப்பிடியான ஈனப் பிறப்புக்களுக்கும் கோடாரிக் காம்புகளுக்கும் குறைச்சலே என்ன?

விசாரிப்புக்களில இருந்த கரிசனையைப் பாத்துப் போட்டு வளவத் துப்புரவு செய்யிற வேலையையும் அப்பிடியே போட்டிட்டு வந்திட்டன்.

''அபிவிருத்தி அபிவிருத்தி எண்டு வாய்கிழிய கத்தி சனத்தை வெருட்டி மாலைய வாங்கி திரியிர பெரியய்யாமார் எல்லாருக்கும் இனிமேல் நான் ஒரு நல்ல வகுப்பெடுக்க வேண்ணும் எண்டு இருக்கிறன்'' எண்டு நான் சந்தியில கடுப்பாக, அதைக் கேட்டுக் கொண்டிருந்த கடைக்காரத்தம்பி சொன்னான். ''சோமண்ணை கண்டபடி கதைக்காதைங்கோ. உந்த பெரியய்யா கூட்டமெல்லாம் சைக்கிள்ள வேட்டிய மடிச்சுக்கட்டிக்கொண்டு திரியுதுகள். உங்கட கதையள் அதுகளின்ர காதில கேட்டால் உங்கள ஜனநாயக விரோதியென்று சுட்டுப் போடுங்கள்'' எண்டு எச்சரிச்சான்.

அவன் சின்னப் பொடியன்தானே அவனுக்கு உயிர்ப் பயம் இருக்கும். கட்டையில போற காலத்தில எனக்கென்ன பயம்? நான் கேட்டன், ''இருபத்திரெண்டு வருசத்துக்குப் பிறகு என்ர சொந்த வீட்டுக்கு விட்ட அபிவிருத்தி எண்டு சொல்லுற இந்த .......யள நான் மாலை மரியாதையோட கும்பிட வேணும் எண்டு சொல்லுறியோ?'' எண்டு. பொடி கப்சிப்.

''தமிழ் நாட்டில இருக்கிற அரசியல்வாதிகள் மாதிரி, தேர்தல் எண்டோன ஊருக்க சைக்கிள் ஓட்டியும், ஓடிப்போய் தண்ணித் தொட்டியையும் குச்சொழுங்கை குறுணி ஒழுங்கையையும் திறந்து வைச்சிட்டால் கருணாநிதி மாதிரி அரசியல் நடத்தலாம் எண்டு இவையளுக்கு நினைப்பு. பத்தாததுக்கு எங்கடயள் சிலதும் அதுக்கு வால்பிடிப்பு.''

''வளவும் வாய்காலுமா என்ர வீடு எவ்வளவு விசாலம். இத்தின வருசமா பிடிச்சு வைச்சிருந்தது இவங்கள் தானே? என்ன கோதாரிக்கு என்ர வீட்ட இவ்வளவு நாளும் போக விடாமல் மறிச்சு வைச்சவங்கள்? வீட்டுக்க எருக்கல முளைச்சு மரமா பெருத்து கூரையப் பிச்சுக்கொண்டு வளர்த்திருக்குது. அதைப்பாக்க வயிறு பத்தி எரியுது. பொத்திப் பொத்தி என்ர பிள்ளையள் பேரனுகளுக்கு எண்டு நான் வச்சிருந்த சொத்தெல்லாத்தையும் 20 வருசமா காடு மண்ட விட்டு நாசமாக்கிப் போட்டு. இப்ப வந்து, மக்களுக்கு மீட்டுத் தாறமாம் மீட்டு... எண்டு வாய் கூசாமல் சொல்லுறாங்கள். அவையளின்ர எந்தக் கச்சைக்க கிடந்து மீட்டவை எண்டு தெரியேல்ல...''

எண்டு மூச்சு விடாம நான் சீற, அதக் கேட்டுக் கொண்டிருந்த கம்பஸ் வாத்தி, ''எனக்கு உதக் கேட்க தமிழற்ற வரலாறுதான் நினைவுக்கு வருது. கடந்த இருபத்திரெண்டு வருசத்தில எங்கட மண்ணில தேவையில்லாததுகள் வில்லங்கத்துக்கு வீல்சேர் போட்டு குந்தி இருக்குதுகள் எண்டத உங்கட வீட்டுக்க வளர்ந்து நிக்கிற எருக்கல குறிமீடாக சொல்லுது'' எண்டார்.

எனக்கு ஒண்டுமா விளங்கேல்ல. அந்தாள் படிச்ச மனிசன் எதையாவது சொன்னா அதில உள்ளர்த்தம் இருக்கும். எண்டாலும் எனக்கு நெஞ்சு பொறுக்குதில்ல, அங்காலயும் இங்காலயும் பாத்துப் போட்டு, ''இத்தின வருசத்துக்குப் பிறகு என்ர நிலத்தத் தரிசு நிலமாகவும் என்ர விசாலமான வீட்ட குடியிருக்க முடியாத பாம்புப் புத்தாவும் எனக்குத் திருப்பித்தந்த அபிவிருத்தி எண்டு உவங்கள் வாய் கூசாமல் சொல்ல, வேட்டிய மடிச்சுக்கட்டிக் கொண்டு ஓம் ஓம் எண்டு பல்லிளிக்கிற எங்கடயள என்னெண்டு சொல்லுறது....?''

''நாங்கள் கொஞ்சம் அசந்தாலும் நாங்கள் உங்களுக்கு விடியலக் காட்டுவம் எண்டு சொல்லிச் சொல்லியே நல்லா காதில பூவும் சுத்தி தலையில மிளகாயும் அரைப்பாங்கள்'' எண்டு வெப்பியாரத்தக் கொட்டிப்போட்டு திரும்பிப் பாத்தா, நாலைஞ்சு பேர் நோட்டீஸுகளோட நிக்கினம்.

ஒருத்தர் கொண்டு வந்து என்னட்டையும் ஒண்டை நீட்டினார். வாங்கிப் பாத்தா கூட்டமைப்புக்காரற்ற. அப்பாடா... எண்டு பெருமூச்சு விட்டிட்டு, ''என்ன உங்களயும் அலைய விட்டுட்டாங்களோ'' எண்டு கேட்டன். அந்தாள் சொல்லிச்சு, ''கூட்டங்கள் வச்சா அடாவடிக்கு ஆள் அனுப்புறாங்கள் அதுதான் வீடு வீடா வெளிக்கிட்டனாங்கள். அதுக்கும் இனி என்னென்னத்தைச் செய்வாங்களோ தெரியாது. முந்தி வேட்டுக்கு பயப்பிட்டாங்கள். இப்ப அதவிட ஓட்டுக்கு பயப்பிடுறாங்கள்'' எண்டு.

இதைக்கேட்டிட்டு கதிரண்ணை சொன்னார், ''பயபிட்டாப் பறவாயில்லை வடக்கின்ர ஜனநாயகத்தக் கண்டு பயத்தில வயித்தால போறமாதிரியெல்லே திரியிறாங்கள். எதிர்கட்சிக் காரங்கள சனத்திட்ட போக விடக்கூடாதென்று போட்டு ஆயுதம் ஆளணி போதாக்குறைக்கு அரச இயந்திரங்கள் எல்லாத்தையும் பயன்படுத்திறதோட புலனாய்வு துறையும் எல்லே இப்ப சேந்திருக்காம். அவையளிட்ட இருந்து முன்னால் போராளிமார் கனபேருக்கு வெற்றிலைக்கு வேலை செய்யச்சொல்லி கட்டளையள் வந்திருக்காம். அதுகள் பாவம் விழி பதுங்கி நிக்குதுகள்'' எண்டு முடிச்சார்.

''இவையள் முக்குற முக்கப் பாத்தா மூலம் தள்ளும் போலக் கிடக்கு'' எண்டபடி கந்தையர் திடீரெண்டு பீடிகை போட்டார். ''ஏன் அண்ணை... என்ன சொல்லுறியள்'' எண்டு நான் கேட்க, ''பெரிசில இருந்து சின்னது வரைக்கும் தேர்தல் நடமுறையெல்லாத்தையும் ஒட்டு மொத்தமா மீறி எப்பிடியாவது வெல்ல வேணும் எண்டு நிக்கிறதச் சொன்னன்'' எண்டார்.

''தேர்தலுக்கான மந்திரி படையெடுப்பு, ஒரு தந்திர வேலை எண்டு சனம் பேசிக் கொள்ளுது. தமிழ்நாட்டுச் சனத்துக்கே எல்லாம் விளங்கி கலைஞர் குடுத்த காசுகளையும் வாங்கிப்போட்டு எதிரா போட்ட நிலைமை இங்க மட்டும் வராமலே போகப்போகுதோ'' எண்டார் பென்சனியர். அங்க தேர்தல் கமிஷன் உயிரோட இருந்துது; இங்க அது செத்துப் போயெல்லே கிடக்கு பிறகென்னெண்டு சனத்தின்ர விருப்பம் சாத்தியமாகும்? சனத்தை வெருட்டி வீட்டுக்க வைச்சுப் போட்டு கள்ள ஓட்டு போடுறதுதான் வீராதி வீரர்களின்ர திட்டமென்று ஊரெல்லாம் பேச்சாக் கிடக்கு ...'' எண்டு கனகண்ணையும் தன் பங்குக்கு இழுத்தார்.

''நாங்கள் வாயையும் ........யும் பொத்திக் கொண்டு இருந்தால் அவங்கள் தாங்கள் நினைச்சதச் செய்யத்தானே பாப்பாங்கள். எல்லாருமா வெளிக்கிட்டு போய் ஓட்டு மொத்தமா எங்கட கருத்த சொல்ல எத்தின பேர் தயாரா இருக்கிறம்..? அப்பிடிப் போய்க் கேட்டாத்தான், பத்துப் பொலிசக் காவலுக்குப் போட்டு சங்கிலியன் சிலையச் சுக்கு நூறா உடைச்சுப் போடுறது மாதிரியான இழி செயலுகள் நிக்கும்'' எண்டார் கம்பஸ்வாத்தி.

''அப்ப நீங்கள் போவியளோ...?'' இது பென்சனியர். ''ஓம்! வாங்கோ இந்தா இப்பவே போவம்...'' வாத்தி சன்னதம் வந்த கணக்கா சுவர்க் குந்தில இருந்து குதிச்சுது. பிறகு அந்தாளச் சமாதானப்படுத்திறதே பெரும்பாடாப் போட்டுது.

''பழைய சிலையை எடுத்துக் கொண்டுபோய் மியூசியத்தில வைச்சிருக்க வேண்டியதுதானே ஏன் அதச் சுக்கு நூறா உடைச்சவங்கள்..?'' எண்டு கதிரண்ண கேக்க, ''சிலையா எண்டாலும் தமிழன் வீரமா நிக்கக்கூடாது எண்ட தெற்குத் திமிர்தான் காரணம்'' எண்டார் கம்பஸ் வாத்தி சூடு குறையாமல்.

''இருந்து பாருங்கோ... அவங்கள் எல்லாத்தையும் தாங்கள் நினைச்சபடிக்குச் சாதிச்சுக் கொண்டு போகப் போறாங்கள்'' எண்டு அந்தாள் தொடர்ந்தும் சீற, நான் மெல்ல அந்தாளின்ர முதுகில தட்டிப் போட்டுச் சொன்னன், ''சேர்! என்ர சொந்த இடம்தான் வெத்திலைச் செய்கைக்குப் பேர் போன இடம். நாங்கள் இதம் பதமான கொடி வச்சு பக்குவம் பரிகாரமா அத வளக்கிறது மெண்டு துப்புறத்துக்குத்தானே தவிர, வச்சுப் பூசிக்கிறதுக்குக் கிடையாது. அப்பிடியே சாமிப்படம் முன்னால வச்சாலும்கூட அதுகின்ர இயல்பில சுருங்கிச் சுருண்டு போயிடும். கவலைப்படாதேங்கோ...'' எண்டு போட்டு [illegible]டன். என்ர கருத்துக்கு ஒரு எக்காளச் சிரிப்பைப் பதிலாத் தந்திட்டு எல்லாரும் அவையளின்ர வீடுகள நோக்கி நடக்கத் தொடங்கிட்டினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கின் வசந்தம்



## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

மகிந்த சிந்தனையின் "வடக்கின் வசந்தம்" வேலைத்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பின்வரும் வேலைத்திட்டங்கள் 16.07.2011 அன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ச அவர்களினாலும் பாரம்பரிய கைத்தொழில், சிறு தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களினாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.





**1. நீர்ப்பாசனம்**

- **உவர் நீர்த்தடுப்பணைக்கான பின்வரும் வேலைத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.**

| இல. | பிரிவு | வேலையின் விபரம் | மதிப்பீடு ரூ. (மில்) | நீளம் (கி.மீ.) |
|---|---|---|---|---|
| 1. | நெடுந்தீவு பிரதேச சபை | நெடுந்தீவு உவர் நீர்த்தடுப்பணை புனரமைப்புத் திட்டம் | 23.0 | 5.0 |
| 2. | காரைநகர் பிரதேச சபை | வேணொன் உவர் நீர்த்தடுப்பணை புனரமைப்புத் திட்டம் | 29.7 | 5.5 |
| 3.. | வேலணை பிரதேச சபை | புங்குடுதீவு மடத்துவெளி உவர் நீர்த்தடுப்பணை புனரமைப்புத் திட்டம் | 13.0 | 3.0 |









**2.கடற்போக்குவரத்து சேவைகள்**

- நெடுந்தீவு இறங்குதுறை ஆழமாக்கல் நிர்மாணப் பணிகள் ரூ. 9 மில்லியன் மதிப்பீட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
- ஊர்காவற்றுறை இறங்குதுறை கட்டுமான வேலைகள் ரூ. 7 மில்லியன் மதிப்பீட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
- குறிகட்டுவான் இறங்குதுறைக்கான பாதை புனரமைப்பு ரூ. 7 மில்லியன் மதிப்பீட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
- நெடுந்தீவு - குறிகட்டுவான் இடையிலான "வடதாரகை" என்னும் புதிய படகு சேவையானது ரூபா 80 மில்லியன் செலவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



**3. நீர் வழங்கல் சேவைகள்**

- வேலணை பிரதேச சபை பிரிவில் மண்டைதீவுக்கான குடிநீர் விநியோகத்திட்டம் ரூ.10 மில்லியன் மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் 2000 மக்கள் பயனடைவர்.
- நெடுந்தீவு குழாய் நீர் விநியோகத்திட்டப் புனரமைப்புப் பணிகள் ரூ. 12 மில்லியன் மதிப்பீட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

**4. உள்ளூராட்சித் திணைக்கள சேவைகள்**

வடக்கு கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 26.17 மில்லியன் மதிப்பீட்டில் பின்வரும் வீதிப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

- நெடுந்தீவு யாகப்பர் கோயில் - களமுனை வீதி
- காரைநகர் ஊரி முருகன் கோயில் வீதி
- ஊர்காவற்றுறை பிரதேசசபை பிரிவிலுள்ள நெருஞ்சிமுனை வீதியும் குறுந்தூர பேரூந்து போக்குவரத்து சேவையும்



**5. மின் விநியோகம்**

வேலணை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவுகளில் ரூ. 22 மில்லியன் மதிப்பீட்டில் பின்வரும் மின் விநியோக நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

- நெருஞ்சிமுனை மின் விநியோகத் திட்டம்
- மண்கும்பான் மின் விநியோகத் திட்டம்

**6. சமுர்த்தி உதவித் திட்டப் பயன்கள்**

யாழ்ப்பாண மாவட்டத்தில் சமுர்த்தி திட்டத்தின்கீழ் நெடுந்தீவு, வேலணை,ஊர்காவற்துறை மற்றும் காரைநகர் பிரதேசங்களை சேர்ந்த சமுர்த்தி திட்ட பயனாளிகளுக்கு பின்வரும் உதவிகள் வழங்கப்பட்டன.

- மலசல கூடங்கள் அமைப்பதற்கான மூலப்பொருள்கள்
- பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள்
- ரூபா 50,000ற்கு மேற்பட்ட இலகு கடன் வசதிகள்
- "திரிய பியச" வீட்டுத்திட்டத்தின்கீழ் ரூபா 100,000 பெறுமதியான சான்றிதழ்கள்
- பாடசாலை மாணவர்களுக்கான "சிப்தெற" புலமைப் பரிசில் சான்றிதழ்கள்
- வாழ்வாதார உதவிகள்
- மனைப் பொருளாதார அபிவிருத்தி உதவிகள்



**7. மீள் எழுச்சித் திட்டப் பயன்கள்**

நெடுந்தீவு, காரைநகர், வேலணை பிரதேச செயலர் பிரிவுகளில் விவசாய, மீன்பிடி மற்றும் கல்வித்துறைகள் தொடர்பான பல்வேறு வேலைத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

- விவசாயிகளுக்கு ரூபா 3.73 மில்லியன் பெறுமதியான 40 நீர்ப்பம்பிகளும் 35 தெளிகருவிகளும் வழங்கப்பட்டன.
- மீனவர்களுக்கு ரூபா 0.8 மில்லியன் பெறுமதியான வலைகளும், மீனவர் சங்கங்களுக்கு ரூபா 0.3 மில்லியன் பெறுமதியான தளபாடங்களும் வழங்கப்பட்டன.
- பாடசாலை மாணவர்களுக்கு ரூபா 0.55 மில்லியன் பெறுமதியான 30 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.



(சி/1735)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசு சிந்தைகொள்வது எப்போதோ?

★ காணாமற்போயுள்ள எமது பிள்ளைகளை, கணவர்மாரை மீட்டுத் தாருங்கள்.

★ புனர்வாழ்வு முகாம்களில் வைத்து புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வரும் முன்னாள் போராளிகள் என்று முத்திரை குத்தப்பட்டுள்ள - கருதப்படும் - எமது பிள்ளைகள், கணவர்மாருக்கு விடுதலை பெற்றுத்தர உதவுங்கள்.

★ தொண்டு நிறுவனங்களால் அல்லது அரசாங்கத்தினால் வழங்கப்படும் உணவுப் பொருள்கள் மற்றும் அடிப்படை வசதிகளுக்கு நாங்கள் நன்றி உடையவர்களாக உள்ளோம். ஆனால், அவற்றால் மட்டும் நாம் எவ்வாறு மனநிறைவு காணமுடியும்?

★ மீண்டும் மீண்டும் உறவுகளைப் பிரிந்து துன்பப்படும் நிலை எமக்கு வேண்டாம்.

இரக்கமுள்ள எவர் இதயத்தையும் தொடும் விதத்தில், மனம் தளர்வடைந்த நிலையில் இந்தக் கோரிக்கைகளை விடுத்தவர்கள் வன்னி மாவட்டத்தில் நிர்க்கதிக்கு ஆளாகிய பெண்கள்.

மன உளைச்சல் மற்றும் மன விரக்தியின் எல்லைக்கு வந்திருக்கும் அவர்கள் தென்னிலங்கையிலிருந்து தம்மைத் தேடிவந்த சுதந்திரத்துக்கான பெண்கள் குழுவிடம், தமது வெறுமையையும் விரக்தியையும் கண்ணீர் சிந்தியவாறு கொட்டித் தீர்த்திருக்கிறார்கள்.

ஒரு பெண்ணின் உள் மனதை மற்றொரு பெண்ணால் மட்டுமே அறிய முடியும்; பாம்பின் காலை பாம்பு அறிவது போல. தமக்குள் உள்ள கவலைகளையும், பிரிவினால், இயலாமையினால் வரும் வேதனைகளையும், நாளாந்தம், மணிக்கு மணி, நிமிடத்துக்கு நிமிடம் உண்டாகும் வெறுமையையும் மற்றொரு பெண்ணிடமே முழுதாக மனம் திறந்து வெளிப்படுத்தும் இயல்பும் பெண்களிடம் உண்டு.

தாம் பெற்றெடுத்துத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்த பிள்ளைகளையும், அன்புக் கணவர்களையும் பிரிந்து, அவர்கள் என்ன நிலையில் எத்தனை வேதனைகளைத் தாங்கி வாழ்கிறார்களோ என்று ஏங்கித் தவித்து, உண்ணாமல் உறங்காமல், வாடி வதங்கும் தாய்மாரும், மனைவியரும் தென்னிலங்கையிலிருந்து வந்த பெண்களிடம் தமது துயரங்களையும் இயலாமைகளையும் மனம் திறந்து வெளிப்படுத்தி உள்ளனர்.

கிளிநொச்சி, வட்டக்கச்சி, கல்மடு, முள்ளியவளை உட்பட வன்னியின் பல பிரதேசங்களுக்கு சுதந்திரத்துக்கான பெண்கள் அமைப்பு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட பெண்களைச் சந்தித்திருக்கிறது.

ஆதரவற்றவர்களாகவும் அபலைகளாகவும் அரசாங்கத்தினால் மாற்றப்பட்ட அவர்களின் நிலையை, மனிதநேயத்துடன் கேட்டறிந்த சுதந்திரத்துக்கான பெண்கள் அமைப்பினர் வன்னிப் பெண்களின் நிர்க்கதியான வாழ்க்கை நிலையை சிங்கள ஊடகங்களுக்கும் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். அது மட்டுமன்றி சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் கவனத்துக்கும் கொண்டுவந்திருக்கின்றனர்.

இவற்றுக்கு மத்தியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தாம் திரட்டியுள்ள தகவல்களில் இருந்து மட்டும் 12,000 பேர் காணாமல் போயுள்ளதாகவும், பலர் தம்மிடம் தாமாக வந்து பதிவுகளை மேற்கொண்டதாகவும் குறிப்பிட்ட பெண்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆனால், புனர்வாழ்வு முகாம்களில் 4,500 பேர் மட்டுமே தங்க வைக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சு தகவல் வெளியிட்டிருக்கிறது. அரசாங்கம் கூறுவது சரியான புள்ளிவிவரமானால் எஞ்சிய எண்ணாயிரம் பேருக்கு நிகழ்ந்தது என்ன? அவர்கள் எங்குற்றுள்ளார்கள்?

சுதந்திரத்துக்கான பெண்கள் அமைப்பு தெரிவிக்கும் புள்ளி விவரம் தவறானதென அரசாங்கம் எடுத்த எடுப்பில் மறுப்புத் தெரிவிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. எதற்கும் இதுவரை நாடாளுமன்றத்திலோ மற்றும் வேறெந்த வகையிலுமோ காணாமல் போனோர் குறித்த புள்ளி விவரங்கள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டதாக இல்லை.

புனர்வாழ்வு அமைச்சு, சிறைச்சாலை சீரமைப்புகள் அமைச்சு மற்றும் வேறு எந்த அமைச்சும், போரின்போதும், அதற்கு முன்னரும், பின்னரும் காணாமல் போனோர் குறித்த புள்ளி விவரங்களை உத்தியோகபூர்வமாக வெளியிடாதிருப்பதற்கான காரணம் மூடு மந்திரமாகவே உள்ளது.

போர்க் குற்றச்சாட்டு என்றதும் துள்ளி எழுந்து மறுப்புரை செய்யும் அரசினால் இறுதிப் போரின்போது, வடக்கு, கிழக்கில் காணாமல் போனோர் எண்ணிக்கையை மதிப்பீடு செய்வதற்கு வளக்குறைவா, என்ன?

ஆனால், காணாமல் போனவர்களை இறந்தவர்களாகக் கருதி மரணச் சான்றிதழ் வழங்குவதற்கான சட்ட விதிகள் நிறைவேற்றப்பட்டு விட்டன. எது எப்படியோ, காணாமல் போனவர்களின் எண்ணிக்கையை உத்தியோகபூர்வமாக வெளியிட வேண்டிய முழுப் பொறுப்பும் அரசினுடையதே.

போர் முடிந்து இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன. அரசு நடத்திய மனிதாபிமான நடவடிக்கையில் மக்கள் இறக்கவில்லை என்று ஒரு போது கூறப்பட்டது. அதில் 7,000 பேர்கள் இடையில் சிக்குண்டு மரணமானார்கள் என்று இன்னொருபோது கூறப்பட்டது.

எல்லாமே மூடு மந்திரமாக இருப்பதாகவே கருத்து நிலவுகிறது. இது விடயத்தில், இல்லை இல்லை விவகாரத்தில், அரசு தேவையான விவரங்களை வெளியிடுவது எப்போது? என்றாயினும் அது தெரிவித்தாகவேண்டிய முக்கிய விடயம். மக்கள் - இந்த நாட்டின் தமிழ்ப் பிரசைகள் - குறித்து மனச்சாட்சியுடனும் நீதியுடனும் செயற்படுகிறது என்பதனை வெளிப்படுத்துவதற்கு அரசு விரைவில் சிந்தைகொள்ளும் என்று எதிர்பார்க்கலாமா? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

## மீள்குடியமர்த்தப்பட்ட வடக்கு மக்கள்

# இராணுவ அ.அட்டையைப் பயன்படுத்துவதற்கு தேர்தல் ஆணையாளருடன் 'பவ்ரல்' பேசும்

கொழும்பு, ஜூலை 17

வடக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் இராணுவத்தினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளை மீண்டும் பயன்படுத்தி வாக்களிப்பில் கலந்துகொள்ள அனுமதி வழங்குவது தொடர்பாகத் தேர்தல்கள் ஆணையாளருடன் கலந்துரையாடவுள்ளதாக 'பவ்ரல்' அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்த அமைப்பின் நிறைவேற்று அதிகாரி ரோஹண ஹெட்டியாராய்ச்சி இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:

வடக்கில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று ஜே.வி.பியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் குற்றஞ்சாட்டியுள்ளன. இது தொடர்பாக அரசும் தேர்தல் ஆணையாளரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேர்தல் கண்காணிப்பாளர்கள் என்ற வகையில் தேர்தல் அமைதியாக இடம்பெற வேண்டும் என்பதே எமது விருப்பம். தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக அரசோ, எதிர்க்கட்சிகளோ மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தேர்தல்மீது வடக்கு மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை இழக்கச் செய்யக்கூடாது.

யுத்தம் முடிவடைந்து ஒருசில வருடங்களுக்குள்ளேயே தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் சுதந்திரமும் வடக்கு மக்களுக்கு இருக்கவேண்டும். இந்த சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் பாதிக்கும் வகையில் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் அமையக்கூடாது.

கிளிநொச்சியில் தொடர்ந்தும் மீள்குடியமர்வு இடம்பெறுகின்றது. அது இன்னும் முடிவடையவில்லை. இவர்களில் தேசிய அடையாள அட்டைகள் இல்லாத பலரும் உள்ளனர். அவர்கள் தற்காலிக அடையாள அட்டைகளைப் பயன்படுத்தலாம். தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கும் நடவடிக்கை இந்த மாதம் 13 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளதால் அதிகம் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்த மக்களுக்கு இராணுவத்தினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளை இந்த மக்கள் ஒருதடவை வாக்களிப்புக்குப் பயன்படுத்தினர்.

தேசிய அடையாளஅட்டை இல்லாதவர்கள் இந்த இராணுவ அடையாள அட்டைகளைப் பயன்படுத்த அனுமதி வழங்குவது தொடர்பாக நாம் தேர்தல்கள் ஆணையாளருடன் கலந்தாலோசிக்கவுள்ளோம் - என்றார்.

(த-சி)

# குடாநாட்டில் குடியமர்ந்த முஸ்லிம்களுக்கு எந்தவித உதவிகளும் வழங்கப்படவில்லை

## ஈரானியத் தூதரக அதிகாரியிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 17

முஸ்லிம் அமைச்சர்களோ நாடாளுமன்ற உறுப்பினர்களோ வெளிநாடுகளில் இருந்து வரும் பிரமுகர்களோ வடபகுதியில் மீள்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களின் வாழ்வாதாரத்துக்குத்தேவையான அடிப்படை வசதிகள் எதனையும் செய்துதர முன்வரவில்லை என யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த ஈரானியத் தூதரகத்தின் இஸ்லாமிய கலாசாரப் பொறுப்பாளர் மஹ்திஜி. ருக்னியிடம் யாழ். முஸ்லிம் மக்கள் முறையிட்டனர்.

யாழ். மாநகரசபை உறுப்பினர் மௌலவி ஜனம் எம். சுபியானுடன் ஈரானியத் தூதரக அதிகாரியும், ஏனைய முஸ்லிம் பிரமுகர்களும் பொம்மைவெளி உட்பட முஸ்லிம் மக்கள் குடியமர்ந்துள்ள பகுதிகளுக்கு நேற்றுக் காலை சென்று அந்த மக்களின் தற்போதைய நிலை குறித்து நேரடியாகக் கேட்டறிந்தார்கள்.

மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களுக்கு எந்தவித உதவிகளும் கிடைக்காமையால் இங்கு குடியமர்ந்த 2 ஆயிரத்து 500 மக்களில் 250 பேர்கள் மட்டுமே தற்சமயம் இங்கு தங்கியுள்ளதாகவும், ஈரானிய இஸ்லாமியக் குடியரசு முஸ்லிம் மக்களின் தேவைகள் குறித்து பரிசீலித்து வீடு மற்றும் தொழில் திட்டங்களுக்கு உதவ வேண்டும் எனவும் முஸ்லிம் மக்கள் இந்தக் குழுவினரிடம் கேட்டுக்கொண்டனர். (த-7)

# நயினாதீவில் இந்த முறை தமிழ்ப் பொலிஸார் கடமை

## திருட்டுச் சம்பவங்கள் இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 17

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயப் பெருந்திருவிழாவின் போது இந்த முறை அதிக எண்ணிக்கையான தமிழ்ப் பொலிஸாரே கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

பொலிஸார் அதிகளவில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டமையால் திருட்டுச் சம்பவங்கள் தடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தேர்த்திருவிழா அன்று இரு பெண்களின் சங்கிலிகளை அறுக்க முற்பட்ட திருடர்கள் இருவர் அந்தப் பகுதியில் கடமையில் இருந்த பொலிஸாரிடம் வகையாக மாட்டிக் கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழ்-ஆண் பொலிஸார் வேட்டிகளுடனும், தமிழ்ப் பெண் பொலிஸார் சேலை அணிந்தும் ஆலயச் சூழலில் கடமையில் ஈடுபட்டமையால் திருட்டுச் சம்பவங்கள் தவிர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-26)

# பொதுசன மாதாந்த உதவிப்பணம் அடுத்த மாதத்திலிருந்து அதிகரிப்பு

நவாலி, ஜூலை 17

வறிய நிலையிலிருந்த பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெற்று வருபவர்களின் கொடுப்பனவு எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திலிருந்து சமூகச் சேவைகள் திணைக்களத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நூறு ரூபா பணத்தினை இதுவரை பெற்று வந்த நபர் இனி இருநூற்றைம்பது ரூபாவையும், நூற்று ஐம்பது ரூபாவுக்கு மேல் பெற்றவர்கள் ஆகக் கூடியது 50 ரூபா வரையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மிக நீண்டகாலமாக இந்தப் பணம் அதிகரிக்கப்படாமலே இருந்து வந்தது. தற்போது இந்தத் திடீர் அதிகரிப்பினால் ஓரளவேனும் ஆறுதல் கிடைத்துள்ளதாக அதனைப் பெறுபவர்கள் தெரிவித்தனர். (த-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையை நிறைவேற்ற யார் வருவார்?



## எதிர்பார்ப்பில் காத்திருக்கும் கிளிநொச்சி சிறுவர் இல்லம்

1950 இல் சமய - சமூக பணிகளை நிறைவேற்ற யோகர் சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்டதே மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லம். கிளிநொச்சி ஜெயந்திநகரில் இயங்கும் மகாதேவா ஆச்சிரமத்தில் போரினால் பாதிக்கப்பட்ட 134 பெண் சிறுவர்களும் 136 ஆண் சிறுவர்களும் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். எனினும் இட நெருக்கடி மற்றும் நிதி நெருக்கடிகளுக்கு மத்தியிலே ஆச்சிரமத்தின் நாள்கள் நகர்கின்றன.

''இந்த ஆச்சிரமம் புதுமுறிப்பில் செயற்பட்டு வந்தது. தற்போது அது முற்றாக அழிவடைந்துள்ளது. தாய் - தந்தையரை இழந்த சிறார்களையே நாம் இயன்ற வரை இங்கு பாதுகாத்து வருகின்றோம். இங்கு 134 பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கான வசதிகள் போதுமானதாக இல்லை. இட வசதி இல்லாததனால் உணவுச்சாலை, நூலகம் போன்றவற்றைப் பெண் பிள்ளைகள் தங்குவதற்கான பிரதேசமாக மாற்றியிருக்கின்றோம்.'' என்கிறார் ஆச்சிரமத்தின் தலைவர் தி.இராசநாயகம்.

தமக்கு உடனடியாகக் கட்டட வசதி தேவையாக உள்ளது என்று கூறும் இராசநாயகம் கட்டடத்துக்கான காணி தம்மிடம் உள்ளதால் நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான உதவிகளே தேவை என்கிறார்.

கட்டடத்தின் தேவை குறித்து அரச, அரச சார்பற்ற மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அன்புள்ளங்கள் எனப் பல தரப்புகளிடமும் கோரிக்கைவிட்டு பல மாதங்கள் கழிந்துவிட்டன. ஆனால் இதுவரை உதவிகள் கிடைக்கவில்லை. இதனால் பெண் பிள்ளைகளுக்கு இருப்பிடம், கல்வி, பொழுது போக்கு விடயங்களை போதியளவு வழங்குவது சிரமமானதாக உள்ளது என்கிறார் அவர்.

**வன்னியில் கிட்டத்தட்ட 960 சிறுவர்கள் தாய் - தந்தையரை இழந்துள்ளனர். 4,600 பிள்ளைகள் தாய் அல்லது தந்தையில் ஒருவரை இழந்துள்ளனர். இவர்களின் சொற்ப எண்ணிக்கையானோரே உறவினர்களால் பராமரிக்கப்படுகின்றனர். பலர் தொண்டு நிறுவனங்களாலும் சிறுவர் பராமரிப்பு இல்லங்களாலும் பாதுகாக்கப்படுகின்றனர்.**

''இன்றைய சிறுவர்கள் எதிர்காலத் தலைவர்கள், எதிர்காலக் கல்விமான்கள், தொழில் வல்லுநர்களாக வரக்கூடியவர்கள். எனவே அவர்களை உரிய முறையில் வளர்த்தெடுக்கவேண்டும்'' என்கிறார் இராசநாயகம்.

இல்லங்களில் ஒரு சிறுவனை வைத்துப் பராமரிக்க குறைந்தது நாள் ஒன்றுக்கு 150 ரூபா தேவை. மகாதேவா ஆச்சிரமத்தில் உள்ள 270 சிறுவர்களுக்குமான ஒரு நாள் செலவு 40 ஆயிரம் ரூபா. ஒரு சிறுவனுக்கு ஒரு மாதச் செலவு 4,500 ரூபா. ஒரு சிறுவனுக்கு ஒரு வருட செலவு 54,000 ரூபா என்று பட்டியலிடப்படுகிறது.

வகுப்பு ஒன்று முதல் ஜி.சீ.ஈ. உயர் தரம் வரை பாடசாலைக் கல்வியை மட்டுமல்லாது கணினி அறிவு, விளையாட்டு, பொது அறிவு, தொழில்நுட்ப அறிவு, மேலதிக அறிவையும் சிறுவர்களுக்கு இன்று ஊட்ட வேண்டி இருக்கிறது.

இதற்கு இன்னும் நிதி வளம் தேவையாக இருக்கிறது. அத்துடன் விடுதி மேற்பார்வையாளர்கள், ஆசிரியர்கள், கணக்காளர், சிறுவர் அபிவிருத்தி அலுவலர், களஞ்சிய அலுவலர்கள், சமையலாளர்கள், தொழிலாளர்கள் எனப் பெருமளவிலானோரின் பணியும் ஒரு சிறுவர் இல்லத்தைப் பராமரிக்கத் தேவையாக உள்ளது.

''இவற்றை எல்லாம் ஈடுசெய்ய வெளிநாடுகளிலும் உள்நாடுகளிலும் உள்ள தொண்டுமனம் படைத்தோர் உதவிகளை வழங்க வேண்டும்'' என்று கேட்கிறார் இராசநாயகம்.

**நவாலியூர் செ.ரமேஷ்**

இந்த மகாதேவா ஆச்சிரமத்துக்கு உதவ முன்வருவோர் ஆச்சிரமத்தின் கிளிநொச்சி - இலங்கை வங்கிக் கணக்கிலக்கமான 9991351 மூலம் உதவிகளைச் செய்ய முடியும். மேலதிக விவரங்கள் தேவைப்படின் 0773868566 எனும் எண்ணுடன் தொடர்பு கொண்டு பேசவும் முடியும்.


**உடன் தேவை**

உணவகத்துக்குச் சமையல் வேலை தெரிந்த ஆண், பெண் றொட்டி தயாரிப்பவர், சப்ளையர்கள் உடன் தேவை. தங்குமிட வசதி உண்டு.

**எஸ்.கே. உணவகம்,**
கண்டி வீதி, சாவகச்சேரி. தொ.பே- 0775591366

**வேலையாள் தேவை**

எமது அச்சகத்திற்கு பைண்டிங் தெரிந்த பெண் பிள்ளை தேவை. பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: திருவள்ளுவர் அச்சகம்
(யாழ்.மாநகர சபை அருகில்)
இல. 593, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

**காணவில்லை**

கடந்த 15.07.2011 அன்று எமது வீட்டு வளவில் நிறுத்திவைக்கப்பட்ட கீறோ கொண்டா மோட்டார் சைக்கிள் [CD 100 DELUXE-Black] காணவில்லை. கண்டவர்கள் தயவு செய்து ச.சபாகரன், காரைக்கால் சிவன்கோவிலடி, இணுவில் கிழக்கு என்னும் முகவரியுடன் அல்லது T.P 0779596606 எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.



**விமான பயணச் சீட்டுக்கள்**

சகல நாடுகளுக்கும் துரிதகதியில் விமான ரிக்கற்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள.
தொடர்புகளுக்கு: 071 3267826, 0771673393

**ஆசிரியர் தேவை**

இலவசக் கல்வி நிலையத்துக்கு விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்கள் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை.
(சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்).
மகாமாரி கல்வி நிலையம்
புளியங்கூடல், ஊர்காவற்றுறை.
0771726644, 0217429705

**பணிநிலை வேண்டுகை**

தற்போது அமோகமாக விற்பனையில் இருக்கும் எமது வெளியீடான அர்ச்சுனா, இனிது இனிது சஞ்சிகைகளின் விற்பனையினை மேலும் சந்தைப்படுத்துவதற்கு துடிப்பும் ஆர்வமுமுள்ள இளைஞர், யுவதிகள் தேவை.

தகைமை:
★ O/L, A/L போதுமானது
★ சிறந்த பேச்சாற்றல்

தகுதிகேற்ற சம்பளம் மற்றும் ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் நாளை (18.07.2011) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நேரில் வரவும்.

உதயன்,
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 5677222

**BIT @ ESOFT**
The Leader in Professional ICT Education

புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன இன்றே இலங்கையின் முதல்தர நிறுவனமான எம்முடன் இணையுங்கள்

Call @ 077 3099308
021 2224142

ESOFT Computer Studies
No. 166/3, Navalar Road,
Jaffna

சாவகச்சேரி 021 2270...
கிளிநொச்சி 021 2285444

1996 - 2011
வாழ்க்கையில் ஒரு தடவை மட்டுமே கிட்டும் மகத்தான வாய்ப்பு

**1000 பேருக்கான கல்வி வாய்ப்பு**
**தேசிய வேலைத்திட்டம்**








2010 - க.பொ.த. சா/த பரீட்சைக்குத்தோற்றிய மற்றும் 2011 - க.பொ.த. உ/த பரீட்சைக்குத் தோற்றிய 25 வயதுக்குக் குறைந்த மாணவர்கள் கற்கை நெறிக்காக விண்ணப்பிக்க இயலும்.

★ எமது நிறுவனம் 15 வருட சேவையை நிறைவு செய்வதை முன்னிட்டு இலங்கை மாணவர்களுக்கான இக் கல்வித் திட்டம் வழங்கப்படுகிறது. பொது அறிவு மற்றும் பொது உளச்சார்புப் பாடங்களில் போட்டிப் பரீட்சையொன்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.
★ சகலருக்கும் கற்கும் வாய்ப்பு உறுதிப்படுத்தப்படுகிறது. குறைந்த புள்ளிகள் பெறும் மாணவர்களும் நிச்சயமாக அனுமதிக்கு உரிமைகோர இயலும்.
★ பரீட்சைத் திகதிக்கு முன்னரே உங்களால் பரிசீலிக்கப்படும் உங்களது தேர்ச்சிக்கமைவாக உங்களுக்கான கற்றல் பிரிவு குறித்த விவரங்களை அறிந்து கொள்ளுங்கள்.

முழுப்பெயர் :-
விலாசம் :-
தேசிய அடையாள அட்டை இல. :-
கைத்தொலைபேசி இல. :-
மாவட்டம் :-
சு.சொல்:-
தொ.பே.இல :-
கையொப்பம் திகதி

மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாக உங்களது விண்ணப்ப பத்திரத்தைத் தயாரித்து நிர்வாகக் கட்டணமாக ரூபா 390/= (மீளளிக்கப்படாத)க்கான காசுக்கட்டளையுடன் ரூபா 15/= பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட உங்களது விலாசமிடப்பட்ட தபால் உறையொன்றையும் இணைத்து கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். 'கணக்காளர், பாத் அக்கடமி,' என்றபெயருக்கு கொழும்பு சர்வகலாசாலைத் தபால் நிலையத்தில் பெறத்தக்க வகையில் உங்களது காசுக்கட்டளை பெறப்பட்டிருத்தல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'கல்வி வாய்ப்பு 1000' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
சான்றிதழ், டிப்ளோமா, உயர்தர மற்றும் உயர்தேசிய டிப்ளோமா மற்றும் பட்ட விருது வரை தெரிவு செய்ய இயலும்.
சகல பாடத்திட்டங்களும் தரமானவையாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை என்பதுடன் பாடத் திட்டங்களை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு வெளிநாட்டு சர்வகலாசாலைகளில் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் வாய்ப்பு உண்டு.
**விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி - 2011 ஓகஸ்ட் 31 ஆம் நாள்**
பாடத்திட்டங்கள் தொடர்பாகவோ மற்றும் பாடங்கள் ஆரம்பிக்கப்படும் திகதி தொடர்பாகவோ மேலதிக விவரங்களை 0772 017101/0772578567/0777 558966 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

BRITISH COUNCIL · TOEFL · City & Guilds · BIT · FIT · edexcel · CTH · abe

www.patheacademy.org
PATHE
**பாத் அக்கடமி உயர் கல்விக்கான மக்கள் கல்விக்கூடம்**
லிபர்டி பிளாஸா (இரண்டாவது மாடி, அறை இல. 2/1)
இல.250, ஆர்.ஏ.டிமெல் மாவத்தை, கொள்ளுப்பிட்டி. தொ.பே.இல. 2575861, தொலைநகல்: 5377751


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் ஆறு வருடங்களுக்கு மஹிந்த ராஜபக்ஷதான் ஜனாதிபதி

## தண்ணீர்த் தொட்டியைத் திறந்து வைத்து பஸில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 17

இன்னும் ஆறு வருடங்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்து ஜனாதிபதியாக பதவி வகிப்பார். தற்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் நாம் ஆட்சி செய்து வருகின்றோம். இந்த நல்லாட்சியைத் தொடர்வதற்கு அரசின் சார்பாக உள்ள உள்ளூராட்சி வேட்பாளர்களுக்கு வாக்களியுங்கள். இதுவே யாழ். அபிவிருத்திக்கு தக்க தருணம் .

இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்றுத் தெரிவித்தார்.

12 மில்லியன் ரூபா செலவில் யுனிசெப் நிதியுதவியுடன் தேசிய நீர்வழங்கல் சபையால் அமைக்கப்பட்ட 5 தண்ணீர் தாங்கிகள் திறப்பு விழா மண்டைதீவில் இடம்பெற்றது. இதில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைந்து மண்டைதீவு மகாவித்தியாலய தண்ணீர் தொட்டியைத் திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடமாகாணத்தில் வேலையற்ற இளைஞர் - யுவதிகளின் பிரச்சினையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்மொழிந்துள்ளார். விரைவில் வடபகுதியில் 5 பாரிய முதலீட்டுத் தொழிற்சாலைகளை அமைக்கவுள்ளேன்.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் அமைக்கப்படவுள்ள தொழிற்சாலை மூலம் வடபகுதி இளைஞர்களுக்கு பெரும்பாலான வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பேன்.

கடந்த 30 வருட காலப் போரில் தமிழர்கள் இரண்டு பரம்பரையினரை வடக்கில் இழந்துள்ளனர். இந்த அவலம் இனியும் தொடரக்கூடாது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வடக்கில் பெரிய சிறுவர் வைத்தியசாலை, மண்டைதீவுக்கான வைத்தியசாலை, மின்சாரம், குடிதண்ணீர், வீதி அபிவிருத்தி குறித்து முழுமையாக கவனம் செலுத்தி அபிவிருத்திக்கு வித்திடுமாறு என்னைப் பணித்துள்ளார்.

சொற்ப காலத்தில் இங்குள்ள மீனவர்களின் அபிவிருத்திக்கு மீன்பிடி படகுகள், வலைகள், துறைமுக அபிவிருத்தி, நங்கூர வசதி மற்றும் வெளிச்ச வீடுகளை வழங்கி உதவுவேன் என்றார் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ. (த-302)

# பருத்தித்துறையில் குடிதண்ணீர் திட்டம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

பருத்தித்துறை குடிதண்ணீர் விநியோகத் திட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை புலோலியில் ஆரம்பித்து வைக்கப்படும்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இணைந்து இன்று காலை அடிக்கல் நட்டு இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பார்கள்.

வல்லிபுரம் பிரதேசத்தில் இருந்து கொண்டுவரப்படும் நீர் புலோலி பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள பாரிய நீர்தாங்கி மூலம் பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறை பிரதேசங்களைச் சேர்ந்த 22 ஆயிரம் மக்களுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-302)

# சில தமிழ் ஊடகங்களால் வடக்கு அபிவிருத்தி பாதிப்பாம்

## அழுகிறார் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 17

சில தமிழ் ஊடகங்களின் செயற்பாடுகள் காரணமாக வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த மாகாணத்தில் இடம்பெறும் அபிவிருத்திச் செயற்பாடுகளைக் குழப்பும் வகையில் சில தமிழ் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

மண்டைதீவில் நேற்று நடைபெற்ற தண்ணீர் தாங்கிகளைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் புனரமைக்கப்பட்ட நீர் குழாய்களை மீளக் கொண்டு சென்று விட்டனர் எனத் தவறான செய்திகள் தமிழ் ஊடகங்களில் வெளிவருகின்றன.

அபிவிருத்தி இடம்பெறுகின்றது. மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. எனவே ஊடகங்கள் குறிப்பாக தமிழ் ஊடகங்கள் மெய்யான தகவல்களைப் பரப்பி வளர்ச்சிக்கு உதவ வேண்டும். தவறான செய்திகளை வெளியிட்டு அபிவிருத்தியைத் தடை செய்ய வேண்டாம்.

மண்டைத்தீவு மக்கள் நீண்ட காலமாக மின்சாரம், குடிதண்ணீர், வீதி அபிவிருத்தி, ஆஸ்பத்திரி மற்றும் உயர் பாதுகாப்பு விடயம் தொடர்பில் அல்லலுறுவதை நான் அவதானித்துள்ளேன். இதற்கு விரைவில் தீர்வு எட்டப்படும்.-என்றார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் ஹிஸ்புல்லா, தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் தலைவர், உபதலைவர், பிராந்திய ஆணையாளர், எந்திரி பா.தயேந்திரகுமார், யாழ்.கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத்திட்டப் பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன், பிரதிப் பொது முகாமையாளர் டிலிப் குணவர்த்தன, உபதலைவர் காமினி நவரட்ணா, ஆளுநர்களான ஜீ.ஏ.சந்திரசிறி, மொஹான் விஜயவிக்கிரம, வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் யுனிசெப் நிறுவனஅதிகாரி பி.தயாபரன், கிராம அதிகாரிகள், பொது அமைப்புகள், நீர்வழங்கல் சபை அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-302)

## இந்து அமைப்புக்களின் கண்டனங்களுக்கு மத்தியிலும்

# ஆனைக்கோட்டையில் நேற்று ஆடுகள் வெட்டிச் சரிக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 17

நல்லை ஆதீனம், இந்து சமயப் பேரவை போன்ற இந்து அமைப்புகள் கடும் கண்டனங்களை வெளியிட்டு வருகின்றன போதிலும் நேற்று ஆனைக்கோட்டை காத்தவராயர் ஆலயத்தில் 60 இற்கும் மேற்பட்ட ஆடுகள் வெட்டிக் சரிக்கப்பட்டன.

அத்துடன் அளவெட்டியில் உள்ள ஆலயம் ஒன்றிலும் ஆடுகளை வெட்டிச் சரிக்கும் படலம் நேற்று நடைபெற்றுள்ளது.

இந்தச் செயற்பாடுகள் உடன் நிறுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்து நல்லை ஆதீனம், இந்து சமயப் பேரவை உட்பட இந்து அமைப்புக்கள் அண்மையில் கண்டன அறிக்கைகளை வெளியிட்டிருந்தன.

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் நவாலி முத்துமாரி அம்மன் ஆலயத்திலும், பண்டத்தரிப்பு, பிரான்பற்று ஆலயத்திலும், கீரிமலை கவுணாவத்தை ஆலயத்திலும் இவ்வாறு ஆடுகளை வெட்டிச் சரிக்கும் நிகழ்வுகள் நடைபெற்றன. கவுணாவத்தையில் மட்டும் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆடுகள் வெட்டிச் சரிக்கப்பட்டன. இதனையடுத்துப் பல இந்து அமைப்புக்கள் இந்தச் செயற்பாட்டைக் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டிருந்தன.

எனினும் இந்த ஆடுகளை வெட்டிச் சரிக்கும் படலம் முற்றுப் பெறவில்லை. நேற்று ஆனைக்கோட்டையிலும் அளவெட்டியிலும் இந்தச் செயற்பாடுகள் நடைபெற்றன. (த)

# 'கற்பூர தீபம்' நாடகம் முதலிடம்

சுன்னாகம்,ஜூலை 17


மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இல்லங்களுக்கு இடையில் நடைபெற்ற நாடகப்போட்டியில் கந்தையா ஸ்ரீ கந்தவேளின் எழுத்துருவில் எஸ்.ரி.குமரன், எஸ்.ரி. அருள்குமரன் ஆகியோரது நெறியாள்கையில் வாகீசர் இல்ல மாணவர்களது நடிப்பில் இடம்பெற்ற 'கற்பூர தீபம்' எனும் நாடகம் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாம் இடத்தை சுந்தரர் இல்ல மாணவர்களின் 'கண்கெட்ட பிறகு' என்னும் நாடமும் மூன்றாம் இடத்தை மாணிக்கர் இல்ல மாணவர்கள் வழங்கிய 'தர்மம் தலைகாக்கும்' என்னும் நாடகமும் நான்காம் இடத்தை சம்பந்தர் இல்ல மாண வர்கள் வழங்கிய 'மாறுமா மானிடம்' எனும் நாடகமும் பெற்றுக் கொண்டன.

சிறந்த நடிகராக 'கற்பூரம்' எனும் நாடகத்தில் ஓய்வு பெற்ற அதிபர் முருகேசுவாக நடித்த யூட்சகான் தெரிவுசெய்யப்பட்டார்.

கல்லூரி அதிபர்எஸ்.சிவஞேஸ்வரன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நாடக விழாவில் பிரதம விருந்தினராகக் கல்லூரியின் ஓய்வுபெற்ற நூலக ஆசிரியை செல்வி இ.சுப்பையாப்பிள்ளையும், சிறப்பு விருந்தினராகப் பாடசாலையின் பழைய மாணவனும் வர்த்தகருமான ம.மனோகரனும் கலந்து கொண்டனர். (த-38)

## ஊருக்கு உபதேசம்...




*உனக்கில்லை:* தேர்தல் பிரசார சுவரொட்டிகள், 'கட்டவுட்டுக்கள்' என்பவற்றை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு யாழ். வந்த பிரதித் தேர்தல் ஆணையாளர் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார். இதனை அடுத்து அவற்றை உடன் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்திருந்தார். எனினும் தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக அகற்றப்படாமல் காணப்படும் அரச தரப்பின் 'கட்டவுட்' (த-2)

# மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் குடிசைகள் காற்றினால் சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

தற்போது வீசும் கடும் சுழல் காற்றுக் காரணமாக மணியம் தோட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

இந்தச சுழல் காற்றினால் இந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மீளக்குடியமர்ந்த மக்களின் கொட்டகைகள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. குடிசைகள், கூரைகள் சேதமடைந்துள்ளமையால் மணியந்தோட்டத்தில் குடியமர்ந்துள்ள மக்கள் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவித்தனர். (த-26)

# பச்சிலைப்பள்ளி மேற்கில் மீள்குடியமர்வு எப்போது?

தென்மராட்சி,ஜூலை 17

பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேச மக்கள் தமது சொந்தக் காணிகளில் மீள்குடியமர விடிவு கிடைக்குமா? என வினவுகின்றனர்.

இந்தப் பகுதிகளில் மீள் குடியமர்வுக்காக வெடி பொருள்கள் அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக அரச அதிகாரிகளும் அரசியல் வாதிகளும் அறிக்கை விடுகின்ற போதிலும் இதுவரை எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் முகமாலை, கிளாலி, வேம்பொடுகேணி, இத்தாவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களின் மக்கள் மீள்குடியமர்வு தொடர்பாக ஆதங்கம் தெரிவித்தனர்.

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாக இடம்பெயர்ந்தோர் சங்கத்தினர் மேற்கொண்ட முயற்சிகள் பொய்த்துவிட்டதால் தேர்தலுக்குப் பின்னர் மீளக்குடியமர்வு தொடர்பாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.(ஐ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வோதய பொருளாதார வியாபார அபிவிருத்தி சேவைகள் (கரண்டி) லிமிடட்

# சீட்ஸ் (கரண்டி) லிமிடட்.

சீட்ஸ் என்பது மைக்றோ பினான்ஸ் தொழில் வளர்ச்சி சேவைகள் மற்றும் பயிற்சி துறைகளில் சேவைகள் வழங்கும் முன்னோடி நிறுவனமாகும். பின்வரும் பதவிக்கு தகுதி, உத்வேகம், சுயமுயற்சி மற்றும்

## உதவிப் பிராந்திய முகாமையாளர்
### (வடக்கு மற்றும் கிழக்கு)

தகைமைகளும் அனுபவங்களும்

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வர்த்தகம்/முகாமைத்துவம்/ கணக்கியல் துறைகளில் பட்டம் பெற்றிருத்தலுடன்.
- நிதி நிறுவனம் ஒன்றில் நிறைவேற்று உத்தியோகத்தர் தரத்தில் 5 வருட அனுபவம் பெற்றிருத்தல் அல்லது.
- கணக்கியல்/முகாமைத்துவத்தில் டிப்ளோமாவுடன் நிதி நிறுவனம் ஒன்றில் நிறைவேற்று உத்தியோகத்தர் தரத்தில் 8 வருட அனுபவம்.

**வயது : 45 வருடங்களுக்கு கீழ்**
**சம்பளம் : பேசித் தீர்மானிக்கபடும்**

## கிளை முகாமையாளர்
### யாழ்ப்பாணம்

தகைமைகளும் அனுபவங்களும்

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வியாபார முகாமைத்துவம்/ பொருளியல் அல்லது கணக்கியல் முகாமைத்துவத்தில் பட்டம் பெற்றிருத்தல் அத்துடன் ஏதாவது ஒரு வணிகநிறுவனம் அல்லது நிதிநிறுவனங்களில் 3 வருட அனுபவம். அல்லது
- க.பொத. (உயர்தரத்துடன்) ஏதாவது ஒரு வணிகநிறுவனம் அல்லது நிதிநிறுவனத்தில் 5 வருட அனுபவம் தொடர்பு.

**வயது : 40 வருடங்களுக்கு கீழ்**
**சம்பளம் : பேசி தீர்மனிக்கப்படும்**

**பொதுவானவை**

- ஆங்கிலம, சிங்களம், தமிழ் ஆகியவற்றில் சிறப்பான தொடர்பாடல் திறமை (பேச்சு மற்றும் எழுத்து)
- ஒத்துபணிபுரியும் தன்மை, நல்ல ஒருங்கிணைப்பு திறமை கொண்டிருத்தல். மற்றும் கணினி அறிவு
- நபர்களுக்கிடையில் நல்ல உறவு பேணும் திறமை
- ஏனைய பகுதிகளில் பணி புரிவதற்கு ஆர்வம்.

உறவினர் அல்லாத சிபார்சு செய்யக்கூடிய இரண்டு நபர்களின் விபரங்களுடன் (ஒருவர் தொழில் சார்ந்தவர்) முத்திரை அளவிலான 2 புகைப்படங்களுடன்(கலர்) விண்ணப்பபடிவத்தை (இந்த விளம்பரம் வொளியாகி 7 நாட்களுக்குள் கிடைக்கும் படியாக அனுப்பப்படல் வேண்டும்)

பிரதான நிறைவேற்று அதிகாரி : முகாமைத்துவப் பணிப்பாளர்

**சர்வோதய பொருளாதார வியாபார அபிவிருத்திச் சேவைகள் (கரண்டி)லிமிட்டட்**

அர்த்தர்ம கேந்திரம்,இல.45, ராவத்தாவத்தை வீதி,
மின்னஞ்சல்: recruitment@seeds.lk
இணையத்தளம்: www.seeds.lk தொ.பே.இல: 011-5444666

தயவு செய்து விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடது மேல் மூலையில் அல்லது மின் அஞ்சலின் மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்.

## வடக்கு, கிழக்கு மற்றும் மலைநாட்டு மாணவர்களுக்கான புலமைப்பரிசில்

வறுமைக்கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களில் இருந்து பல் கலைக்கழக அனுமதிபெற்று வறுமை காரணமாகக் கல்வியைத் தொடரமுடியாத மாணவர்களுக்குக் கல்வியை தொடர்வதற்கான புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. தகுதியுடைய மாணவர்கள் சமூகத்தில் உயர்பொறுப்பு வகிக்கும் பெரியோர்கள் மூவரின் சிபார்சுக் கடிதத்துடன் தங்களது விவரங்களுடன் பதிவுத்தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

கடிதத்தின் மேல் மூலையில் புலமைப் பரிசில்களுக்கான விண்ணப்பம் என்பதைக் குறிப்பிடவும்.

**பணிப்பாளர்,**
கடவுளின் குழந்தைகள் அறக்கொடை நிதியம்,
140, கோயில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## Project Field Officer

கிளிநொச்சி அல்லது அதனை அண்மித்த பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட Project Field Officer தேவை.

வறுமைக்கோட்டின் கீழ்வாழும் குடும்பங்களின் பாடசாலை செல்லும் சிறார்களுக்காக எமது NGO மூலமாக உதவிகளை வழங்குவதற்கு, வதிவிடங்களிலிருந்தும் பாடசாலைகளிலிருந்தும் தகவல்களைத் திரட்டித் தரவுகளைச் சேகரித்து உதவிகளை வழங்குதல் இந்த Officer இன் தலையாய கடமையாகும். தமிழ் மொழியில் அறிக்கை தயாரிக்கும் திறன் அவசியம். G.C.E A/L அல்லது அதற்கு மேற்பட்ட தகுதிகளைக் கொண்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 49cc மோட்டார் சைக்கிள் செலுத்தத்தெரிந்தவர்களாய் இருத்தல் வேண்டும். வன்னி மக்களுக்குச் சேவை செய்ய வேலைக்கேற்ப ஊதியம் வழங்கினாலும் சேவைமனப்பான்மையுடன் நேரத்தைக் கருத்திற் கொள்ளாது பணியாற்ற விருப்பம் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். உங்களது சுயவிவரக்கோவையைத் தமிழில் அச்சடிக்கப்படாத சொந்தக் கையெழுத்தில் பதிவுத் தபால் மூலம் உடனடியாக அனுப்பி வைக்கவும்.

கடிதத்தின் மேல் மூலையில் Project Field Officer எனக்குறிப்பிடவும்.

பணிப்பாளர்,
கடவுளின் குழந்தைகள் அறக்கொடை நிதியம்,
140, கோயில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## பெண் உதவியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் ஓரளவு சுயமாக இயங்கக்கூடிய பெண் ஒருவருக்கு பெண் உதவியாளர் தேவை. 0777413990 (5923)

## காணியுடன் வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி, பல்கலைக்கழகத்துக்கு அருகில் பலாலி வீதியை முகப் பாகக் கொண்ட 6 அறைகளைக் கொண்ட வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. புதிய வியாபார நிலையம் கட்டுவதற்கு உகந்தது.

**தொடர்பு: 112580118, 0777374423**

## சேவை

கனடா, UK, நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, இத்தாலி, மலேசியா போன்ற நாடுகளுக்கு எல்லா வகையானVisa ஒழுங்குகளும் செய்து தரப்படும். அத்துடன் Refuse Visa, pending Visaக்களையும் நம்பிக்கையுடன் காலதாமதம் இன்றி செய்து தரப்படும்.

**No.257, Galle Road, Colombo-6.**
**0772484403/ 0112363880.**
**Canadianvisa2010@yahoo.com.**

## தேவை

யாழ். நகரில் இயங்கும் வர்த்தக நிறுவனத்துக்கு வாகனத்தில் சென்று பொருள்கள் ஒழுங்கமைப்பதற்கு ஒழுங்கமைப்பாளர் தேவை. (Merchandiser) தகுதி அடிப்படையில் தெரிவுசெய்யப்படும்.

தொடர்பு:- 021 4923902

## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கில் பயன்தரு மரங்களுடன் 5¾ நிலப் பரப்பில் அமைந்த வீடும், வீட்டுப் பாவனைப் பொருள்கள் Love birds கூடு விற்பனைக்குண்டு. (5916)

தொடர்பு:-0776172707,0773644405

## காணி விற்பனைக்கு

கொக்குவில் பழைய புகையிரத நிலையத்திற்கு அண்மையில் புகையிரத பாதை ஓரமாக, மருத்துவக் கல்லூரி, கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு ஒரு கிலோ மீற்றருக்கு உட்பட்ட தூரத்தில் நாலு பரப்பு ஐந்து குளி காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 0212229020

## விசா சேவை

UK Student Visiting வீசாவில் செல்வதற்கான சகல ஏற்பாடுகள் and Sponsorship என்பன.

தொடர்பு-0725223808

## மணமகள் தேவை

திருகோணமலையில் வதியும் யாழ். இந்து கௌரவ குடும்பம் 1970, 5'5'' மூலம், 7 இல் செவ்வாய் கிரக பாவம் 101, முகாமைத்துவ பட்டதாரி மணமகனுக்கு பெற்றோர் செவ்வாய் குற்றம் கிரக பாவம் 88 க்கு மேற்பட்ட படித்த மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

*தொடர்புகளுக்கு: 0773169659, 0784525545*

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அத்தியடி, அம்பலவாணர் வீதியில் அமைந்துள்ள 2,4 பரப்புக் காணிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0779239334

## கார் விற்பனைக்கு

325xxxx தொடரிலக்க Ambassidor Bullet Proof A/C Power Steering German கார் விற்பனைக்குண்டு

தொடர்பு- 0775177177, 0771140885

## மாதாந்தக் கொடுப்பனவு

நவலி, ஜூலை17

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களின் ஜூலை மாத கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

உரியவர்கள் தமது தபாலகங்களுக்கு சென்று கொடுப்பனவை பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ம-100)

**SHAMROCK-யாழ்**

**A/L 2013**

*PHYSICS "MECHANICS" Tues 5, Thur 3.30p.m.
S.சசி B.Sc
*Bio-Wed, Fri 4 p.m.
R.குகானந்தன் B.Sc
*CHE:-Tues, Fri.6.15 a.m.
M.A.நிரோஜன் B.Sc
*C/Ma:- Wed 4.30 p.m.
Sat, Sun 5.30 p.m.
G.கண்ணன் B.sc

# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு வியாகேசு
### (நீர்வேலி தெற்கு)



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு வியாகேசு 15.07.2011 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற நடராசா - தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சிவக்கொழுந்துவின் அன்புக்கணவரும், ஆதவன் (கனடா), விக்கினேஸ்வரமூர்த்தி, பவானி, வதனி, (கனடா), கலைவாணி (கனடா), பாபு (கனடா), சிவாஜி(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சியாமினி (கனடா), விஜயராணி, அனுராஜ், உதயகுமார் (கனடா), குகதாசன் (கன்டா), நித்தியகலா ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற கலைக்ஷி மற்றும் திவ்யா, சேரன், மாறன், தாரணி, தனுஷன், லக்ஷனா, மதுசன், சகானா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பூதத்தம்பி, சண்முகம், சிவபாலன் மற்றும் முத்துப்பிள்ளை, பார்வதி, சத்தியதேவி, கணபதிப்பிள்ளை (அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வலிங்கத்தின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.07.2011 செவ்வாய்க் கிழமை கனடாவில் நிகழவுள்ளன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''தேவாலய வீதி''*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.* (5920)

தகவல்:
**சே.அனுராஜ் (மருமகன்).**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்:
11.07.1930

மறைவு:
17.06.2011

அமரர்
## பொன்னுத்துரை சண்முகசுந்தரம்

கட்டிய மனைவியைக் கண் கலங்காமல் காத்திட்ட
பெற்றெடுத்த பிள்ளைகளை பூப்போல் வைத்திருந்த
எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

17.06.2011 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் நேரடியாகவும் ஊடகங்கள் ஊடாகவும் ஆறுதல் அளித்த அனைத்து உள்ளங்களுக்கும் உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

'ராமா பகாங்',
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் (5912)(39)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே போனால் உண்மை புரியும்

## வன்னி நிலை பற்றிய ஒரு குமுறல் குரல்

முருகு கணபதி



முள்ளிவாய்க்கால் வரை முன்கொண்டு செல்லப்பட்ட போரில் வடக்கின் வளம் மிக்க கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் இரண்டும் முழுமையாக அழிவடைந்தன.

இந்த மாவட்டங்களில் அரச இயந்திரங்கள் போருக்குப் பின்னரான அபிவி ருத்திக்கு முன்னுரிமை கொடுப்பதாக இப்போது பரப்புரை நடக்கிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்கும் சில அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் மொத்த மாவட்டமும் வளர்ச்சி பெறுவதான தோற்றப்பாடு ஏற்படுத்தப் படுகின்றது, ஆனால் உண்மை என்ன?

வன்னியில். செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டிய கல்வி, சுகாதாரம், உட்கட்டுமானம், வீதி அபிவிருத்தி, வீட மைப்பு, குடிதண்ணீர் போன்ற முக்கிய திட்டங்களை போரைக் காரணம் காட்டி கடந்த 30 வருடங்களாக இலங்கை அரசுகள் புறந்தள்ளின.

தற்போதும் அந்த நிலையில் பெரும் மாற்றமில்லை. கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, குடிதண்ணீர் போன்ற துறைகளில் வளர்ச்சி மேம்பாடு என்பது இங்கு இல்லை. வடக்கையும் தெற்கையும் இணைக்கும் ஏ-9 வீதி மட்டுமே புனர மைக்கப்படுகின்றது. அதனை வைத்துக் கொண்டு நாம் அபிவிருத்தி இலக்கை அடைந்து விட்டோம் எனக் கூற முடியாது.

வன்னியில் உண்மையில் என்ன நடக்கிறது என்பதை அரச உயர் அதிகாரி ஒருவரே இப்படி விளக்குகின்றார்.

அரசின் முக்கிய பதவிகளில் இருப்பவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் அபிவிருத்திக்காக முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கின்றார்கள். ஆனால் அவை யாவற்றுக்கும் நிதி கிடைப்பது என்பது அரிது.

போருக்கு பின்னர் இரண்டு ஆண்டுகள் கழிந்து விட்டன. இன்னும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மக்கள் தறப்பாளின் கீழே இருக்கின்றார்கள். குழந்தைகள், மாணவர்கள், கர்ப்பிணிகள், தாய்மார்கள், வயோதிபர்கள் , நோயாளிகள், ஊனமுற்றவர்கள் போன்றவர்களும் அடிப்படை வசதிகள் ஏதுமேயற்ற நிர்க்கதி நிலையிலேயே வாழ்கின்றார்கள்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் தாயை இழந்தவர்கள், தந்தையை இழந்தவர்கள், தாய்- தந்தையை இருவரையும் இழந்தவர்கள். முக்கியமான பாதுகாவலர்களை இழந்தவர்கள்.

இவ்வாறான மக்கள் எவ்வாறு ஒரு வேளை உணவை உண்பது? தொழிலைத் தேடி வருமானம் உழைக்கும் குடும்பத்தவர்களை இழந்த குடும்பங்கள் இன்னும் நிர்க்கதியாக உள்ளன.

ஒருவேளை உணவைக்கூட உண்ண முடியாத அவல நிலையில் இன்று பிள்ளைகள் அந்தரிக்கின்றன. அவர்களுக்கு உரிய உணவு கொடுக்க முடியவில்லையே என்று நினைத்துத் தாய்மார் உள நெருக்கீட்டுக்கு உள்ளாகின்றார்கள்.

போஷாக்கான உணவு, பால்மா வகைகள், உடுப்பதற்கான உடுபுடைவைகள் எதுவும் அற்ற ஏதிலிகளாக வன்னியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அலைந்து திரிகின்றனர். அண்மையில் வெளிவந்த ஐ.நா. அறிக்கையே இதனை உறுதிப்படுத்தும். இந்த மாவட்டங்களில் 63 வீதமானோர் வறுமைக்கோட்டுக்கும் கீழேயே வாழ்கிறார்கள். அதிலும் கிளிநொச்சியில் 17 வீதத்தினர் பட்டினி நிலையிலேயே உள்ளனர்.

பாடசாலையில் வழங்கப்படும் மதிய நேர சத்துணவை மட்டுமே உண்டு வாழும் மாணவர்களே இன்று இரு மாவட்டங்களிலும் அதிகமாக உள்ள்னர்.

உள்ளூராட்சித் தேர்தலுக்காக இப்போது அமைச்சர்கள் வடக்கே படையெடுக்கிறார்கள். ஏ -9 வீதியை விலகி உள்ளே சென்றால் வன்னியின் உண்மை நிலை அவர்களுக்குத் தெரியவரும்.

உண்மையான அபிவிருத்தி என்பது என்ன? மின்சாரம், குடிதண்ணீர், உட்கட்டுமானத் தேவை, வைத்தியசாலை எங்கு தேவை? அமைச்சர்களும் கொழும்பில் ஏசி அறைகளில் தங்கி வேலை பார்க்கும் அதிகாரிகளும் ஏ-9 வீதியை விட்டு உள்ளே சென்று பார்க்கட்டும். அப்போது உண்மை தெரியும்.

எனவே அரச இயந்திரங்களும், அதிகாரிகளும் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உண்மையான அபிவிருத்தி பற்றிப் பேசி இன்னும் 3 ஆண்டுகளில் புதிய வடக்கு பிரதேசங்களை (கிளிநொச்சி, முல்லைத்தீவு) உருவாக்க முன்வரவேண்டும். அதை விடுத்து வாக்கு வேட்டைக்காக மட்டும் அபிவிருத்தி அபிவிருத்தி என்று மக்களை ஏமாற்றுவது ஈனப் பிழைப்புக்குச் சமம்.

இப்படி மூச்சு விடாமல் சீறிய அந்த அதிகாரி, ''எனது பெயரை மட்டும் தயவு செய்து போட்டு விடாதீர்கள். பின்னர் இந்த வேலையும் போய் விடும்'' என்றார் மன்றாட்டமாக. இதுதான் உண்மை நிலை. களத்தின் யதார்த்தம். ✱

**பாடசாலையில்
வழங்கப்படும் மதிய நேர
சத்துணவை மட்டுமே
உண்ட பின்னர் வாழ்ந்த
மாணவர்களே இன்று
இரு மாவட்டங்களிலும்
அதிகமாக உள் ளனர்.**

# மனிதன் எங்கு தோன்றினான்

''உலகின் முதல் மனிதன் மேற்கு ஆசியாவில் தான் தோன்றினான்'' என, இஸ்ரேல் நாட்டு விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இதுநாள் வரையில், கடந்த இரண்டு லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஹோமோ சேப்பியன் என்ற இனத்தில் இருந்துதான் நவீன மனிதன் தோன்றினான் என்றும், முதன்முதலில் ஆபிரிக்காவில் தோன்றிய இந்த ஹோமோ சேப்பியன் இனத்தவர் படிப்படியாக, ஐரோப்பா, மேற்கு ஆசியா மற்றும் இதர ஆசியப் பகுதிகள் நோக்கி இடம் பெயர்ந்தனர் எனவும், வரலாற்று அறிஞர்களால் நம்பப்பட்டு வந்தது.

சமீபத்தில், இஸ்ரேல் நாட்டில் உள்ள பென் - குரியான் விமான நிலையம் அருகில் இருக்கும் குகை ஒன்றில் (குசேம்), அந்த நாட்டு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, நான்கு லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஆதிமனிதனின் உடல் படிவங்களை கண்டெடுத்துள்ளனர்.

இதுகுறித்து டெல் அவிவ் பல்கலை விஞ்ஞானிகள் தெரிவிக்கையில், நான்கு லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஹோமோ சேப்பயன்களின், உடல் படிவங்கள் 'குசேம்' குகையில் கிடைத்துள்ளன. மனித பல் போன்றுள்ள இந்த படிமம் மத்திய 'ப்ளைஸ்தோகின்' காலத்தை சேர்ந்தது.


இதை ஆய்வு செய்ததில், உலகின் முதல் மனிதன் மேற்கு ஆசியாவில் தான் தோன்றினான் என தெரிய வந்துள்ளது. மேலும், மேற்கு ஆசியாவில் இருந்து தான் உலகின் பிற பகுதிகளுக்கும் பரவியுள்ளான் என்று தெரிவித்தனர்.

ஆபிரிக்காவில் தான் முதல் ஹோமோ சேப்பியன் தோன்றினான் எனவும், உலகின் தாய்வீடு ஆபிரிக்கா எனவும் கூறப்பட்டு வந்த நிலையில், இஸ்ரேல் நாட்டு விஞ்ஞானிகளின் புதிய முடிவுகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

இதன் மூலம், நவீனகால மனிதனின் தோற்றம் குறித்த வரலாறு திருத்தி எழுதப்படும் என தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பவுணுக்கு
24 Kt - 44,000/=
22 Kt - 37,500/=
**Per Gold Sovereign**
**Interest from 1%**
அதி கூடிய அடகு தொகைக்கு வட்டி
வீதம் 1% இருந்து




365 நாள்களும் சேவையைப் பெறலாம்
SWARNAMAHAL FINANCIAL SERVICES
Pawning Service அடகுச் சேவை
0772 268 723
சுவர்ணமஹால் பினான்ஸியல் சேர்விஸஸ் லிமிட்ட்
SES
இல. 338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே: 021 222 0245
Conditions Apply

## விழிவெண்படல நோயாளர் தெரிவு

வடமராட்சி, ஜூலை 17

விழிவெண்படல நோயாளர்கள் தெரிவு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இடம்பெற வுள்ளது.

இவர்களுக்கான சிகிச்சைகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் இடம்பெறவுள்ளன.

எனவே குறித்த நோயாளர்கள் இதில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் ஆ.கேதீஸ் வரன் தெரிவித்துள் ளார்.

ஜப்பான் அம்பா நிறுவனத்தின் நிதி உதவியுடன் இந்தச் சிகிச்சை மேற்கொள்ளப்பட வுள்ளமை குறிப் பிடத்தக்கது.

(ம-236)

**கோழிக் குஞ்சு விநியோகம்**

தரமான No.1 Prima பேட்டுக்குஞ்சுகள் புறொயிலர் கோழிக்குஞ்சுகள்
Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில்
21.07.2011 காலை விநியோகிக்கப்படும் முன்பதிவு செய்யவும்.

★ சூட்டிபாம் சென்ரர் - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
★ நெல்லிபடி பல்பொருள் விற்பனை நிலையம் - 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பருத்தித்துறை -0771392593
★ நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி - 0776225944

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். 021 222 6944

தற்போது வெங்காயம், மிளகாய், பூசனிக் குடும்பப் பயிர்கள் மற்றும் அனைத்து மரக்கறிப் பயிர்களிலும் அலங்காரத் தாவரங் களிலும் சாற்றினை உறிஞ்சிப் பல்வேறு சேதங்களை ஏற்படுத்தும் அழுக்கணவன், செதிற்பூச்சி (மாவுப்பூச்சி), பனிப்பூச்சி, வெண்ஈ மற்றும் இலைத் தத்திகளை முற்றாக அழித்திடும் ஒரே ஒரு

புதிய பரம்பரைக்கான
மிகச் சிறந்த பீடை நாசினி

அக்டரா® 25 டபிள்யூ.ஜி.
தயமெதொக்சாம் 25% (நிறையளவு) டபிள்யூ.ஜி







CIC சி.ஐ.சி. இல்லம்
199, கிங்ஸ் வீதி, கொழும்பு 02
பாவனை முறை: 16 லீற்றர் நீரிற்கு 05 கிராம் சிறிய பக்கற் ஒன்று போதுமானது. பீடைகொல்லிகள் அபாயகரமானவை. அவதானமாகப் பாவிக்கவும்.


**பெண் வேலையாள் தேவை**
கொழும்பில் சிறிய உத்தியோகத்தர் குடும்பம் ஒன்றுடன் தங்கிச் சமையல் செய்வதற்கு பெண் வேலையாள் தேவை.
தொடர்பு:- 0777413990
(8870 (19.01))

**German Swiss மொழிகள்**
தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது. Embassyயில் கேட்கப்படும் examக்கு ஏற்றவாறு கடந்த examமில் சித்தி அடையாதவர்களுக்கும் தகுந்த முறையில் CD மற்றும் Book விளக்கத் துடன். 10, Palaly Rd, Jaffna. T.P:- 0771604823.

**கார் விற்பனைக்கு**
யப்பான் தயாரிப்பிலான மிற் சுபிசி லான்சர் கார் 14 சிறி 99 xxxx விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0773575390
(C/1798)

**காணி விற்பனைக்கு உண்டு**
தெல்லிப்பழை வீதியில் உள்ள சிறு விளானில் பிரதான வீதி அருகில் 34 பரப்புக் காணி வெட்டுக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: மத்தேசு அருளப்பு - 0779037518
பெரியவிளான், ஆத்தியோலை. T.P.0779459186

ஆகக் குறைந்த IDD கட்டணங்கள் தற்போது
Hutch இடமிருந்து....



| நாடுகள் | கட்டணம் |
|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 1.40 |
| கனடா | 1.40 |
| இந்தியா | 1.50 |
| சிங்கப்பூர் | 2.90 |
| சீனா | 1.90 |
| ஐக்கிய இராட்சியம் | 1.50 |
| அவுஸ்திரேலியா | 1.70 |
| ஜேர்மனி | 2.90 |
| பிரான்ஸ் | 2.90 |
| இத்தாலி | 2.90 |
| சுவிட்சர்லாந்து | 2.90 |
| நோர்வே | 2.90 |
| சைப்ரஸ் | 2.90 |
| தாய்லாந்து | 2.90 |
| மலேசியா | 2.90 |
| தென்கொரியா | 2.90 |
| யப்பான் | 3.00 |

*வரி உள்ளடக்கப்படவில்லை

www.mudra.lk

www.hutch.lk
0785 785 785
HUTCh

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்மை மீள்குடியமர்த்துமாறு வலியுறுத்தி பரவிப்பாஞ்சான் மக்கள் உண்ணாவிரதம்

கிளிநொச்சி, ஜூலை 17

கிளிநொச்சியின் அதியுயர் பாதுகாப்பு வலயப்பகுதியாக உள்ள பரவிப்பாஞ்சான் நாலாம் வாய்க்கால் பகுதிகளைச் சேர்ந்த 52 குடும்பங்கள் தமது சொந்தக் காணிகளில் மீளக்குடியமர்வு செய்யக்கோரி உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளன.

கிளிநொச்சி நகரின் பல பகுதிகளில் மீள்குடியமர்வு நடைபெற்றுள்ள போதிலும் இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் பரவிப்பாஞ்சான் மற்றும் நாலாம் வாய்க்கால் ஆகிய பகுதிகளில் ஏற்கனவே வாழ்ந்த 52 குடும்பங்கள் இதுவரை மீளக்குடியமர்வு செய்யப்படவில்லை.

இந்த நிலையில் மேற்படி 52 குடும்பங்களும் தமது மீள் குடியமர்வு தொடர்பாகப் பல தடவைகள் பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்தும் இதுவரை எதுவித பயனும் கிடைக்கவில்லை.

இதனால் கடந்த 14 ஆம் திகதி காலை 9 மணிமுதல் 10.45 மணிவரை பரவிப்பாஞ்சான் பகுதிக்குச் செல்லும் வீதியில் ஒன்றுகூடி உண்ணா விரதப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இதனையடுத்து அந்தப் பகுதிக்கு வந்த இராணுவப் பொறுப்பதிகாரி, இதனைத் தம்மிடம் கேட்க வேண்டாம். பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொள்ளுங்கள் எனத் தெரிவித்ததையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அலுவலகத்துக்குச் சென்று கடிதம் ஒன்றையும் கையளித்துள்ளனர். இதனையடுத்து ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டு இவர்கள் கலைந்து சென்றனர்.

தாங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாடகை வீடுகளிலும் உறவினர் வீடுகளிலும் பெரும் இன்னல்கள் மத்தியில் வாழ்ந்து வருவதாகவும் சொத்துக்களையும் உறவுகளையும் இழந்து தமது சொந்தக் காணியில், சொந்த மண்ணில் வாழவோ அல்லது அதனைச் சென்று பார்க்கவோ முடியவில்லை எனவும் கண்ணீர் மல்கத் தமது ஆதங்கங்களை வெளிப்படுத்தினர். (க - 6)

# வட்டுவாகல் சப்த கன்னியர் ஆலய வருடாந்த பொங்கல் விழா நாளை

முல்லைத்தீவில், ஜூலை17

முல்லைத்தீவில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான அருள்மிகு வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலயப் பொங்கல் பெருவிழாவானது நாளைய தினம் திங்கட்கிழமை நடைபெறவிருக்கின்றது.

கடந்த நான்காம் திகதி பாக்குத் தெண்டலுடன் திருவிழா ஆரம்பமானது. 11 ஆம் திகதி இந்து சமுத்திரத்தில் தீர்த்தம் எடுக்கப்பட்டு நாளைய தினம் திங்கட்கிழமை பொங்கல் பெருவிழாவாகக் கொண்டாடப்பட இருக்கின்றது.

மதுரையிலிருந்து இப்பிரதேசத்துக்கு சப்த கன்னியர் தான் தோன்றி ஈஸ்வரிகளாக எழுந்தருளியதாகக் கூறப்படுகின்றது.

தெய்வ கடாட்சம் பொருந்திப் புதுமைகள் புரிந்து வரும் இவ்வாலயத் திருவிழாவானது இந்தப் பிரதேச வாழ் மக்களால் கொண்டாடப்படும் பெருந்திருவிழாக்களுள் ஒன்றாகக் கருதப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாளைய தினம் காலை 5.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகும் திருவிழாவில் மாலை 7.00 மணிக்கு மடப்பண்டம் எடுக்கப்பட்டு, கச்சு நேர்தல், வளர்ந்துக்கு நூல்கட்டுதல், வளர்ந்து நேருதல், பொங்கல், விசேட பூசை, ஊஞ்சலாட்டுதல், பாண்டிவிளையாட்டு, சிலம்பாட்டம், யானை ஏற்றம், பரியளம் வெளிவிடுதல், பிரசாதம் வழங்குதல் போன்ற சடங்குகள் நடைபெறும்.

இத்திருவிழாவில் கலந்து கொண்டு அருள்மிகு சப்தகன்னிமாரின் அருள் கடாட்சத்தைப் பெறுமாறு ஆலய பரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-555)

## பயனுள்ள பயணம்...



ஆர்வத்துடன் மாணவர்கள்: கல்விச் சுற்றுலாவொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த அக்கராயன் மகாவித்தியாலய மாணவ, மாணவிகள் யாழ்ப்பாணப் பொது நூலகத்தைப் பார்வையிட்டனர். (410)

# போக்குவரத்து நெருக்கடிக்குள் தவிக்கும் மாங்குளம் புதிய கொலனி மக்கள்

முல்லைத்தீவு, ஜூலை 17

நீர்பாசனத் திணைக்களத்துக்கு வடக்குத் திசையில் அமைந்துள்ள மாங்குளம், புதிய கொலனி மக்கள் வழக்கமாகப் பயன்படுத்திய பாதை மூடப்பட்டுக் கிடப்பதால் இங்கு வாழும் குடும்பங்கள் பெரும் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு சுமார் 40 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்கள் யுத்தத்துக்கு முன்னர் ஏ-9 வீதியிலிருந்து சுமார் 300 மீற்றர் உள் வாங்கியிருக்கும் சிறு வீதியைப் பயன்படுத்தியே பிரதான வீதிக்கு வருவது வழக்கம், இந்த வீதி கிரவலால் அமைக்கப்பட்டிருந்தது.

தற்போது இந்தச் சிறு வீதி மூடப்பட்டுள்ளதால் இங்கு வாழுகின்ற மக்கள் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். மேலும் இந்தப் பாதைக்குப் பதிலாகக் காட்டுப்பாதையொன்றையே மக்கள் பயன்படுத்துகின்றனர்.

இந்தப் பாதையூடாகவே பேராற்றில் இருந்து மணல் அள்ளிச் செல்லும் வாகனங்களும் தினமும் பயணிக்கின்றன. இதனால் இந்தப் பாதை மோசமாகச் சேதமடைந்துள்ளது.

அத்துடன் மழை காலங்களில் பாதை முழுவதும் சேறாக மாறிவிடுவதால் நடக்கக் கூட முடியாத நிலையில் காணப்படுகின்றது.

மிகவும் பின்தங்கிய இந்தக் கொலனி மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியே செல்வதற்குரிய பாதை வசதிகள் இல்லாது மிகவும் சிரமப்படுவது மிகவும் வேதனையாகவுள்ளது.

உரியவர்கள் தமது அவல நிலையை உணர்ந்து தாம் முன்பு பாவித்த ஒழுங்கையைப் பாவிப்பதற்கு உதவ வேண்டும் என்பதே இவர்களின் வேண்டுதலாகவுள்ளது. (க)

# கிளிநொச்சியில் அவசரக் கூட்டம்

கிளிநொச்சி, ஜூலை 17

கிளிநொச்சி மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசரக் கூட்டம் ஒன்று இன்று நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 9 மணியளவில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெறும்.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்துத் தொண்டராசிரியர்களும் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-426)

# கிராம சேவகரின் முயற்சியால் முதியோர் அ. அட்டைகள்

நாவற்குழி, ஜூலை 17

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் குமுழமுனை மத்தி கிராம அலுவலர் எஸ்.தெய்வேந்திரம்பிள்ளை மீளக்குடியமர்ந்த முதியோர் 25 பேருக்கு முதியோர் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

அடையாள அட்டை எதுவுமே இல்லாத முதியோர்கள் இக்கிராம அலுவலரின் முன் மாதிரியைப் பாராட்டியுள்ளனர்.

யுத்தம் மற்றும் இடப்பெயர்வுகளால் தேசிய அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள் பிரதேச செயலகத்தில் இவ்விதம் முதியோர் அடையாள அட்டை வழங்கப்படுவதனால் நன்மை பெற்று வருகின்றனர்.

மீளக்குடியமர்ந்த பிரதேசங்களிலுள்ள ஏனைய கிராம முதியோரும் தமது கிராம அலுவலர்களும் இதுபோன்று முதியோர் அடையாள அட்டையைப் பெற்றுத்தர வேண்டுமென எதிர்பார்க்கின்றனர்.

முத்திரை அளவிலுள்ள வர்ணப் புகைப்படங்கள் இரண்டைப் பிரதேச செயலகத்துக்கு எடுத்துச்சென்று சமூக சேவைகள் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு படிவத்தை நிரப்பிக் கொடுத்தால் 2 தினங்களுக்குள் இந்த அடையாள அட்டையைப் பெறமுடியும்.

இந்த அடையாள அட்டை தேர்தல் வாக்களிப்பின் போதும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

இதனை வைத்திருப்போர் அரச திணைக்களச் சேவைகள், வங்கிச் சேவை, நீதிச்சேவை, பொதுப்போக்குவரத்துச் சேவை என்பவற்றில் முன்னுரிமையைப் பெற்றுக்கொள்ள முடியும். (க-121)

# அனர்த்த முகாமைத்துவ நிபுணர் கிளி., முல்லைத்தீவுக்கு வருகை

முல்லைத்தீவு, ஜூலை 17

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அனர்த்த முகாமைத்துவப் பிரிவுகளின் செயற்பாட்டை வலுவூட்டும் பொருட்டு இத் துறைசார் நிபுணர் எஸ். மரியதாசன் இந்தப் பிரதேசங்களுக்கு மிக விரைவில் செல்லவுள்ளார்.

ஒக்ஸ்பாம்-பிரித்தானியா நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இந்த மாவட்டங்களைச் சேர்ந்த 14 அரச அதிகாரிகளுக்கு இந்த வருடம் மே மாதம் வவுனியாவில் மூன்று நாள் செயலமர்வு நடைபெற்றது.

அதில் இப்பிரதேசங்களின் அனர்த்தங்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பான விடயங்கள் சிறப்பு நிபுணர் எஸ். மரியதாசனால் வழங்கப்பட்டது.

இதில் பயிற்சி பெற்ற அரச அதிகாரிகள் இந்தப் பிரதேசங்களில் எவ்வாறு செயல்படுகின்றனர் என்பதை மீளாய்வு செய்வதும் அவர்களுக்கு உதவுவதும் இவரது நோக்கமாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு உதவி இணைப்பாளர் ஒருவர் உள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கென இந்தப் பிரிவுக்கு ஓர் அதிகாரிகளும் இல்லை. இதனால் அனர்த்தம் ஒன்று ஏற்படும்போது சிறந்த ஒருங்கிணைப்பை மேற்கொள்வது கடினமாகவே உள்ளது.

இந்த மாவட்டங்களில் அரச அதிகாரிகள் இதில் பயிற்சி பெற்றுள்ளதால் எதிர் காலங்களில் சிறந்த பணிகளை மேற்கொள்ள முடியுமெனக் கூறப்படுகிறது.

ஒக்ஸ்பாம் நிறுவனம் இந்த மாவட்டங்களின் அனர்த்தங்களைக் குறைப்பது தொடர்பில் வழங்கிய பயிற்சியை சமூக ஆர்வலர்கள் பாராட்டியுள்ளனர். (க-121)

# கிளிநொச்சி வீதிகளில் இராணுவத்தினர் குவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 17

கிளிநொச்சி நகர வீதிகளில் பெருமளவில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தினர் ஆயுதங்களுடன் காணப்படுவதால் மக்கள் மத்தியில் அச்சமான நிலை காணப்படுகின்றது.

யுத்தம் முடிவடைந்து மக்கள் பெருமளவில் மீள்குடியமர்ந்த நிலையில் இராணுவத்தினர் நகர வீதிகளில் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளமை மக்களின் மனங்களில் இனம் புரியாத பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் மக்களில் சிலர் கிளிநொச்சி நகரப்பகுதிக்கு வருவதைத் தவிர்த்து வருவதாகவும் தெரிகின்றது.

ஏதாவது அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் அதற்குள் ஏன் மாட்டிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமே அதற்குக் காரணமாகும்.

தாம் அச்சமில்லாத நிலையில் வாழும் காலம் விரைவில் வராதா என்ற ஏக்கமும் இங்குள்ள மக்களின் மனங்களில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் நிறுவனம்

(Regd No: 15251)

ACCA

# ACCA

Association of Chartered Certified Accountants

## க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துத்துறை மாணவர்களுக்குமான ACCA கற்கை நெறிக்கான புலமைப்பரிசில் திட்டம் 2011/2012

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் நிறுவனமானது 1984 ஆம் ஆண்டிலிருந்து தொழிற்பயிற்சிகள், ஆங்கிலக் கற்கைகள், தொழில்சார் கற்கைகளைச் சிறப்பாக நடத்தி வருகின்றது. மேலும் நிறுவனம் ACCA இலங்கையுடன் இணைந்து 2009 ஆம் ஆண்டிலிருந்து ACCA கற்கையை சிறப்பாகச் செயற்படுத்தி வருகின்றது. இலங்கையின் முதற்தர நிதி, கணக்கீடு மற்றும் முகாமைக் கற்கையாகக் காணப்படுவதுடன் 150 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்டுக் காணப்படுவதால் அதிகளவான மாணவர்கள் கற்கையில் இணைந்துள்ளதுடன் ACCA வழங்கும் நன்மைகளை அனுபவித்து வருகின்றனர். அத்துடன் மாணவர்களுக்குரிய சர்வதேச தர வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

ACCA ஆனது சான்றுபடுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர்களின் சங்கமாகும். 110 வருடகால அனுபவத்தை உடைய சர்வதேச ரீதியில் முற்றான அங்கீகாரம் பெற்றுத் திகழும் ஒரு நிதியியல் கல்வித் தகைமையாக இது கருதப்படுகின்றது. உலகில் 150,000 அங்கத்தவர்களையும் மற்றும் 450,000 மாணவர்களையும் 90 பிராந்திய மற்றும் கிளைகளினூடாக இயங்கி வருகின்றது. இதனால்தான் உலகில் ஒவ்வொரு 6 நிமிடமும் ஓர் அங்கத்தவர் இத்தகைமையையிட்டு விண்ணப்பிக்கின்றார். இதன் காரணமாக யாழ்ப்பாணத்திலும் பிராந்திய அலுவலகத்தை நிறுவி ACCA தனது கல்விச் செயற்பாடுகளை ACCA தகைமையுடைய விரிவுரையாளர்களைக் கொண்டு மேற்கொண்டு வருகின்றது.

(i) **புலமைப்பரிசில் திட்டம்:** ACCA கற்கை நெறிக்கான க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றுகின்ற அனைத்துத்துறை மாணவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
விண்ணப்பிக்கும் வயதெல்லை 25 இற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) **பரீட்சை முறை:**
இரண்டு பரீட்சை வினாத்தாள்களைக் கொண்டதாகப் புலமைப்பரிசில் பரீட்சை அமையவுள்ளது.
- (i) பொது உளச்சார்பு (1 மணித்தியாலம்)
- (ii) பொது அறிவு (1 மணித்தியாலம்)

(iii) **உறுதிப்படுத்தல்:**
பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி ஒருவர் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் தேசிய அடையாள அட்டையை அல்லது தபாலக அட்டையைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் காண்பித்தல் வேண்டும்.

(iv) **பெறுபேறுகள்:**
பரீட்சையானது ஆவணி மாத இறுதியில் இடம்பெறுவதுடன் புலமைப் பரிசில் திட்டம், பெறுபேறுகள், விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதிகள் மற்றும் விவரங்கள் தபாலூடாக உரியவர்களுக்குச் சேர்ப்பிக்கப்படும். மாணவர்களது வசதி கருதி யாழ்ப்பாணம், அச்சுவேலி, சுன்னாகம், சாவகச்சேரி, கரவெட்டி, வேலணை பிரதேசங்களில் கற்கை நிலையங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(v) **விண்ணப்பிக்கும் முறை:**
மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாக A4 தாளில் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து முடிவுத் திகதிக்கு முன்பாகத் தபாலில் விண்ணப்பிக்க வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ACCA கற்கைக்கான புலமைப்பரிசில் திட்டம் 2011/ 2012 எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(vi) **விண்ணப்பிக்கும் முகவரி:**
**மனிதவள முகாமையாளர்,**
**யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் நிறுவனம்,**
*இல. 92/1, சேர் பொன். இராமநாதன் வீதி,*
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.*

(vii) விண்ணப்ப முடிவு திகதி: **05.08.2011.**

### மாதிரி விண்ணப்பப் படிவம்

அலுவலக உபயோகம்: [ ]

(i) முழுப்பெயர் : ........................................
(ii) முதலெழுத்துடன் பெயர் : ........................................
(iii) தபாலிடல் முகவரி : ........................................
........................................
(iv) பிறந்த திகதி : ........................................
(v) வயது : ஆண்டு [ ] மாதம் [ ] திகதி [ ]
(vi) பால் : ஆண் [ ] பெண் [ ]
(vii) மின்னஞ்சல் முகவரி : ........................................
(viii) தொலைபேசி இல : ........................................
(ix) தேசிய அடையாள அட்டை / தபாலக அடையாள அட்டை இல :
........................
(x) உறவினரல்லாத இருவரது பெயர்கள் : ........................................
........................................

மேலே தரப்பட்ட விவரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையென உறுதிப்படுத்துகிறேன்.

திகதி : .................... ....................
கையொப்பம்.

(சி/1796)


## உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு போட்டிகள்

வரணி, ஜூலை 17

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வரணி பொதுநூலகம் தனது பிரதேசத்தில் இயங்கும் முன்பள்ளி மாணவர்களிடையே கதைகூறுதல், பேச்சு, அபிநய நடனம் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் வரணி இடைக்குறிச்சி சர்வோதய முன்பள்ளி, வரணி வடக்கு கௌரிபாலன் சைவப்பிரகாச முன்பள்ளி, கரம்பைக் குறிச்சி முன்பள்ளி மற்றும் வரணி இயற்றாலை கலைவாணி முன்பள்ளி மாணவர்கள் பங்குபற்றினர். இதற்கான ஏற்பாடுகளை வரணி பொது நூலக பொறுப்பதிகாரி பொ.இரவீந்திரன் செய்திருந்தார். (ம-122)


## விற்பனைக்கு

பேக்கறிக்குத் தேவையான
மா குழைக்கும் இயந்திரம்
விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
THAS PIZZAPIZZA
118, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0212220456, 0773732160

## பதவி வெற்றிடம் Vacancy Notice

அலுவலக உதவியாளர் தேவை
(Office Boy)

தகைமை- G.C.E O/L
நேர்முகப் பரீட்சை -20.07.2011 புதன்கிழமை
மு.ப. 10.00-4.00

Director
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No15,Sirambiyadi Lane,Off Stanley Road, Jaffna.
Wed:www.bchs.lk Tel No:0212224550


# எந்தையோர் யாவருக்கும் இயம்பினோம் இதய நன்றி



மண்ணின் மடியில்:
29.07.1925

விண்ணின் பிடியில்:
22.06.2011

## அமரர் திருவாட்டி வித்துவான் மகேஸ்வரி இராசேந்திரம்

(இளைப்பாறிய ஆசிரியை, செங்குந்த இந்துக்கல்லூரி)

தேயநற் குடியிற் தோன்றி திருவருட் செயலி னாலே
தூயமா வாழ்வு தன்னிற் துய்த்திடு தெய்வ மான
தாயவ ளிகத்தில் நம்மைத் தவிக்கவிட் டிறந்த நாளில்
நேயமோ டநுதா பங்கள் நிகழ்த்திட வந்த பேர்க்கும்

தொலைபன்னி தந்தி யூடும் சொல்குறுந் தகவ லூடும்
நிலமதி லாற்றி நின்ற நீடுறு பணிக ளெல்லாம்
விரிவுற ஆய்ந்து யார்க்கும் விளங்கிடு மாறெ டுத்தே
பரிவுற நன்றி யோடு பகர்ந்திடு செங்குந் தாக்கும்

பெருநிதி யெங்கட் கென்றே பேசும கேஸ்வ ரிக்கும்
அருநிதி யாகு மென்றே அஞ்சலிப் பிரசு ரங்கள்
மின்னஞ்ச லோடு தாயார் வாழ்ந்தநல் வீடு நாடி
அன்புமீ தூர வந்தே அருந்துயர் தீர வார்த்தை

தந்தபேர் கட்கும் நேரில் துயரது பகிர இல்லம்
வந்தபே ரொடும யானம் வந்துநின் றுதவி னோர்க்கும்
கந்தமார் மாலை சூட்டிக் கடிமலர் வளைகள் சாத்தி
வந்தித்தோர் தமக்கும் வேறு வழிவகை யுதவி னோர்க்கும்

பலமைல் தூரம் வந்தே பாசமோ டஞ்ச லித்த
பண்புடை தென்கி ழக்குப் பல்கலைக் கழகத் தார்க்கும்
பந்தமு ளுற்றா ரோடு பழகிடும் அயலி னார்க்கும்
வந்தெம துயர்ப கிர்ந்த வைத்தியர் தாதி மார்க்கும்

இறுதிவேள் வியொடு அன்னார் இன்னுயி ரமைதி காண
உறுதிபூ ணன்பி னோடு உஞற்றிடு பிரார்த் தனைக்கும்
பந்திசேர்ந் தின்போ டுண்ட பண்பினர் அன்பர் நண்பர்
எந்தையோர் யாவ ருக்கும் இயம்பினோம் இதய நன்றி.

எதிர்வரும் 20.07.2011 புதன்கிழமையன்று காலை 6மணியளவில் கொழும்பு முகத்துவாரம் அந்தியேட்டிமடப் புனித தீர்த்தக்கரையில் நடைபெறும் இறுதி நிகழ்விலும் 22.07.2011 வெள்ளிக்கிழமையன்று காலை 11 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் உயிரமைதி வழிபாட்டுப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கலாநிதி இ.செந்தில்நிதி,
30/3-2, நெல்சன் பிளேஸ்,
வெள்ளவத்தை, கொழும்பு - 06

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மற்றும் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்யர்களின் பட்டியலுட் போகாதீர்

இலக்கியக் காட்சி - 94

பொய் சொல்லுதல் எளிது. ஆனால் அந்தப் பொய்யைப் பாதுகாத்தலென்பது இயலாத காரியம். இன்று அரசியல் வாழ்வில் தம்மை இணைத்துக் கொண்டு பொய்யுரைத்தே தம் ஆட்சியைத் தக்க வைக்கத் துணியும் ஆட்சியாளர்கள் பலரை நாடுகள் தோறும் காணுகின்றோம். உண்மை சொல்லுதல் இயலாததாகிப் போகின்றபோது பொய் பிறக்கின்றதெனினும் உண்மையே ஒருவனைத் தவறு செய்யாமற் தடுக்கும் மிகப் பெரிய ஆயுதமாகும். இதனையே திருவள்ளுவர்

*''பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற*
*செய்யாமை செய்யாமை நன்று''*

என்கிறார். பொய் சொல்லத் தூண்டாமற் செய்து அறம் செய்ய வழிகாட்டுகின்ற பண்பே சத்தியத்தின் சிறப்பொளிரும் பண்பென்கிறார் அவர். உண்மையின் மகிமையை உலகுக்கு உணர்த்தியவர் அரிச்சந்திரன். எந்த நிலையிலும் உண்மை பேசுகின்ற உயர்ந்த குணம் அவருடையதாகக் காட்டப்பட்டுள்ளது.

அரிச்சந்திரன் உண்மையின்பால் கொண்ட பக்தியால் நாடிழந்தும், மனைவி பிள்ளையை இழந்தும், மயானத்திலே ஒரு காவற்காரனாகப் பிணங்களை எரிக்கும் பணிக்கு உதவும் தொழிலாளியாகிச் சீரிழந்த போதும் உண்மையை உரைக்கும் பெரும் குணத்தை இழந்துவிடவில்லை. துன்பங்கள், தொல்லைகள் தொடருகின்ற போதும் உண்மையெனும் உயர்ந்த குணத்துக்காகத் தன் உணர்வுகளை நெறிப்படுத்திய அரிச்சந்திரன் பொய் சொல்ல மறுக்கின்ற வரிகளை அரிச்சந்திரபுராணத்திலே காணலாம்.

*''பதி இழந்தனம் பாலனை இழந்தனம் பெற்ற*
*நிதி இழந்தனம் இனி எமக்கு உண்டென நினைக்கும்*
*கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலன் என்றான்*
*மதி இழந்து தன் வாய் இழந்து அருந்தவன் மறைந்தான்''*

எல்லாவற்றையும் இழந்த போதும் பொய் சொல்ல மாட்டேன் என மறுத்துரைத்த அரிச்சந்திரன் சொல்கேட்டு மதி இழந்து வாய்ப்பேச்சிழந்து பின்வாங்குகின்ற விசுவாமித்திர முனிவரைப் பார்க்கின்றோம். இத்தகைய உண்மை பேசும் உயர் குணம் படைத்த அரிச்சந்திரனின் நாடகங்களைப் பார்த்ததனாலும் அவர் தனது அன்னைக்குக் கொடுத்த சத்திய வாக்குகளினாலும் மகாத்மாகாந்தி அவர்கள் சத்தியத்தின் பெருமைக்குள் தன்னையும் சத்தியவானாக்கிக் கொண்டு வாழ்ந்து புகழ்பெற்றார்.

*''தன் நெஞ்சறிவது பொய்யற்க பொய்த்த பின்*
*தன் நெஞ்சே தன்னைச் சுடும்''*

பொய் சொல்லும் போதெல்லாம் மனச்சாட்சி அவனை உறுத்தும். அந்தப் பொய் அவனது அமைதியைக் குலைக்கும். பொய் புகலும் வாய் உண்மை கொள் உள்ளத்தால் வருந்தும். உண்மையை உறங்கவிடாது பொய் எப்பொழுதும் விழித்திருக்கும்.

உண்மையைச் சொல்வதற்குக் கற்பனையோ புத்திக் கூர்மையோ தேவையில்லை. ஆனால் பொய் சொல்வதற்கு கற்பனைத்திறனும் உறுதியான உயர்ந்த நினைவுத்திறனும் வேண்டும். அப்படியில்லையாயின் ஒரு பொய்யை மறைக்க இன்னொரு பொய், அதை மறைக்க மேலும் பொய்கள் என அவை நீண்டு செல்லும். இதனால் சத்தியத்தைக் கைவிட்டுப் பொய்யிலேயே மூழ்கிப் பொய்யன் என்ற கீழ்நிலையினனாக உலவ நேரிடும்.

சத்தியத்தைப் பேணுபவர்கள் சத்தியவான்களாக சத்தியத்தின் ரூபமாக மாறுவது மாத்திரமல்ல அவர்களின் வார்த்தைகள் வலிமை யுடையவனாகிச் சொல்வதெல் லாம் நிகழும். அவர்கள் சொல்வ தெல்லாம் உண்மையாகவே ஏற்றுக் கொள்ளப்படும்- ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதாகி விடுகின்றது. பொய்யை உண்மை போல் சொல்லுதல் என்பது இலகுவான செயல் அல்ல ''பொய்மையும் வாய்மையிடத்துப் புரைதீர்ந்த

*''நன்மை பயக்கும் எனின் ''*

என்கிறார் வள்ளுவர். தேவை ஏற்படுமிடத்து அது நன்மை விளைவிக்கும் எனத் தீர்மானித்தால் பொய் சொல்லலாம் என்கிறார் வள்ளுவர். ஒரு காட்டிலே தவம் செய்த முனிவரின் அருகாக ஒரு மான் வேகமாக ஓடிச் சென்றது. அதனைக் கவனித்தார் முனிவர். அதனைத் தொடர்ந்து ஓடி வந்தான் ஒரு வேடன். ஓடிவந்த வேடன் முனிவரைப் பணிந்து,''ஐயா சாமி இந்தப் பக்கமாக ஒரு மான் ஓடிவந்ததே பார்த்தீர்களா? அது எந்தத் திக்காகச் சென்றது சொல்லுவீர்களா?'' என்று கேட்டான். முனிவர் பொய் சொல்லமாட்டார். ஆனால் முனிவரோ ''பார்த்தது கண்கள்-அவற்றுக்குப் பேசத் தெரியாது, பேசப் போவதோ வாய்- அதற்குப் பார்த்துப் பழக்கமில்லை'' என்றார். வேடனுக்கும் அவரது உண்மை, விளங்கவில்லை. அவனால் அதற்கான விளக்கத்தைப் பெறவும் இயலவில்லை.

உண்மையைப் பேசினால் மானுக்கு ஆபத்து என்பதை உணர்ந்த முனிவர் வேறொரு உண்மையை வேடனுக்கு உரைப்பதைக் காணுகின்றோம்.

மகாபாரதத்தில் வில்லிபுத்தூரர் உண்மையை மறுத்தால் ஏற்படக் கூடிய தீமைகளைப்பற்றிக் கூறுகின்றார்.

*''அண்ணிய கிளையும் இல்லும்*
*அரும்பெறல் மகவும் அன்பும்*
*திண்ணிய அறிவும் சீரும்*
*செல்வமும் திறலும் தேசும்*
*எண்ணிய பொருள்கள் யாவும்*
*இயற்றிய தவமும் ஏனைப்*
*புண்ணியம் அனைத்தும் சேரப்*
*பொய்மையால் பொன்றும் அன்றே''* என்கிறார்.

பொய்மை உரையைத் தனதாகக் கொண்டு வாழ்பவனுடன் சேர்ந்திருக்கும் சுற்றம் அகன்று செல்லும் வீடு மனை மகவு, எல்லாமும் அவர்தம் அன்பும் விலகிச் செல்லும். அறிவு, செல்வம், சிறப்புக்கள், அழகு, எல்லாமே அழியும், பொருள், தவம், புண்ணியம் எல்லாமும் மாயும்.

இத்தனையும் அழியும் நிலையிலேதான் ஒருபொய்மை வாழ்கின்றது என்ற உண்மையை உணர்வது கடினமானதுதான்.

இன்று பொய்மையில் வாழும் பொய்யர்களும் புளுகர்களும் என்றோ ஒரு நாள் உண்மையின் வலிமையை உணராமல் போவதில்லை. சுயநலத்தையும், புகழையும் நோக்கித் துரோகத்தனத்துடன் பொய்யுரைக்கும் யாவரையுமே இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒரு பொழுது; உலகம் அறியும். அவர்களின் துரோகத்தனத்தால் அவர்களின் நாமம் பொய்யர்களின் பட்டியலில் அழியா இடம்பெறும். எனவே பொய்யுரைத்துப் புகழ்சேர்ப்போர் சற்றுச் சிந்திப்பார்களாக. ✱

**தர்மினி பார்த்திபன்**

---

# சித்திரா காத்திருக்கிறாள்




எங்கிருந்தாலும் பிறந்தகத்தில் இருப்பதைப் போன்ற மகிழ்வும் குதூகலமும் வேறெங்குமே கிடைக்கப் போவதில்லை. பிறந்த நாள்தொட்டு ஊர்ந்து நடை பயின்று உலவித் திரிந்த அந்த அழகு பொலிந்த மணற்றரை.

பள்ளி சென்று பாடம் படித்து வந்த நாள்களில் ஓடித்திரிந்து உல்லாசம் கொண்ட பூமி. அந்தப் பூமியின் வனப்பும் வடிவும் அன்றைய நாள்களைப் போல் இன்று இல்லாவிட்டாலும் பிறந்த மண் என்ற ஈர்ப்பில் பூரிக்கும் உள்ளம்.

ஊர் விட்டு ஓடி அலைந்து எங்கெங்கெல்லாமோ துளிர்விட்டு நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மல்லிகா இன்று அவளது மண்ணுக்கு வந்திருந்தாள். உறவென்று சொல்லிக்கொள்ள இப்பொழுது ஊருடன் இருப்பவர் கனகசபை மாமா மாத்திரம் தான். அவரது மனைவி, பிள்ளைகள் கூட இன்று அவருடன் இல்லை. ஒரேயொரு மகளும் மனைவியும் கொழும்பிலே வாடகை வீட்டில். அவர்களுக்கோ ஊரில் இருக்கப் பிடிக்கவில்லை.

மல்லிகாவைப் பல நாள்களின் பின்னர் பார்த்த கனகசபையாருக்கு மனதில் விரிந்ததோ பேரானந்தம். அவளும் அவரது மகள் சித்திராவும் சிநேகிதிகளாய்ப் பறந்து திரிந்த அந்தப் பள்ளிப் பருவக் காட்சிகள் அவர்களின் இளமையான நாள்கள் கனகசபையாரின் மனதில் படமிட்டன.

மல்லிகா கொழும்பிலிருந்து ஊர் வந்து சேர்ந்த பயணத்தில், உளம் சுட்ட காட்சிகளை வேதனையுடன் வெளியிட்டாள். ஊரோடு தன் ஓய்வுக் காலத்தை தனியாகவே ஓட்டும் கனகசபையாருக்கு மல்லிகாவின் பயணக் கதைகள் புதியவைதாம். இவ்வாறு தொடர்ந்த உரையாடல் எங்கெங்கெல்லாமோ சென்று மகள் சித்திரா திருமணத்துக்கு மறுத்துரைக்கும் துயரம்வரை நீண்டது.

சித்திராவுடன் திருமணத்துக்கான பேச்சுத் தொடர்ந்தெழும் போதெல்லாம் அதற்கு மறுப்புத் தெரிவித்தே வந்தாள்.

மல்லிகாவின் நெருங்கிய சிநேகிதியான சித்திராவின் செயற்பாடுகள் குறித்து அவள் அந்தநாள்களில் நிறையவே அறிந்திருக்கிறாள். மல்லிகாவின் மூலம் சித்திராவின் எண்ணங்களில் மாற்றத்தை ஏற்படுத்தலாமா? என்ற நோக்கத்துடனே நீண்ட உரையாடல்; இறுதியில் மீண்டும் ஜேர்மனிக்குப் போவதற்காகக் கொழும்பு திரும்பும் மல்லிகாவின் கைகளில் தனது மனைவிக்கும் மகளுக்கும் ஏதாவது கொடுத்தனுப்பலாமா? என்ற வகையில் தாவிச் சென்றது.

''எப்ப தங்கச்சி கொழும்புக்குப் போறாய்?''என்ற கேட்டபோது [illegible] கனகசபையார் ''போகேக்கை கொஞ்சம் அரிசி மாவும் [illegible]லும் முருங்கைக்காயும் தந்து விடுறன் இவள் சித்திராவிட்டக் கொடுக்க ஏலுமே?'' என்ற வேண்டுதலோடு நிறுத்தினார்.

சித்திராவும் மல்லிகாவும் சிநேகிதிகள் தான். ஒன்றாகப் படித்தவர்கள். அத்துடன் உறவுடன் சேர்ந்தே வளர்ந்தவர்கள். இப்பொழுது இருவருக்குமே வயது நாற்பதைத் தாண்டிக் கொண்டிருந்தது. திருமண வயதைக் கடந்து வெகு தூரம் வந்து விட்டார்கள்.

ஜேர்மனியில் இருந்து கொழும்பு வந்தபோது சித்திராவைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் மல்லிகாவுக்கு நிறையவே இருந்தது.

ஆனால் கொழும்பிலே தங்கி நின்று புறப்படக் காலம் போதவில்லை. இப்பொழுது கனகசபை மாமாவின் பொருள்களோடு போய் அவளைச் சந்திக்கலாம் என எண்ணமிட்டவள், கொழும்புக்கு வந்ததும் முதல் வேலையாகச் சித்திராவின் வீட்டுக்குச் சென்றிருந்தாள்.

சித்திரா வீட்டில் இல்லை. சித்திராவின் தாயார்தான் மல்லிகாவை வரவேற்றாள். வந்தவள் மல்லிகாதான் என்பதை அறியச் சித்திராவின் தாயாருக்கு அதிக நேரம் செல்ல வில்லை. சிறிது நேர சுகதுக்க விசாரிப்பின் பின்னர்,

''அது சரி, சுகந்தனும் உன்னுடைய மச்சான்தானே அவருக்குக் கலியாணம் முடிந்துவிட்டதாமே உனக்குத் தெரியுமோ?'' என்றொரு கேள்வியைத் திடீரெனக் கேட்டு வைத்தாள். அந்தக் கேள்வியால் அதிர்ந்து போன மல்லிகா அதனை வெளிக்காட்டாமல் ''ஓம் ஓம் தெரியும்'' என்றாள்.

''முந்தி உனக்கும் சுகந்தனைக் கலியாணம் கேட்டு வந்தவை தானே? நீ, ஏன் பிள்ளை மாட்டனெண்டனி?'' என்று கேட்ட சித்திராவின் தாயார் ''பெடியன் ஒரு டாக்டர், நல்ல வடிவான பெடியன், அதுவும் உன்னுடைய முறை மாப்பிள்ளை. ஏன் பிள்ளை அதை நீ செய்யாமல் விட்டனீ?'' என்று கேள்விகளை அடுக்கினாள். மல்லிகாவின் மனமோ குழம்பி விட்டது.

''சுகந்தன் ஒரு டாக்டராக இருக்கலாம்; அழகானவனாக இருக்கலாம்; அத்தனையும் இருந்தாலும் எதனையும் புரிந்தனுபவிக்கும் புத்திசாலியாக இருப்பான்'' என்று முடிவெடுக்க இயலாதே என்று எண்ணியபோது ''சுகந்தன் இப்ப முடிச்சிருக்கிற பிள்ளையும் ஒரு டாக்டராம்.

**நெடுந்தீவு மகேஷ்**

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக் குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg இற்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய No -1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 20.07.2011 விநியோகிக்கப்படும்.

**றாஜீவ்**- நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
T.P.No: -0776090926

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி, விதானையார் வீதியில் ஒரு பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:0776146454

## வீடு/காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் பருத்தித்துறை வீதியில் 4 ¾ பரப்புடன் 5 அறைகள், வரவேற்பறை, சமையலறை, மலசலகூடம் மற்றும் ஏனைய வசதிகளுடன் நன்றாக பராமரிக்கப்பட்ட வீடும் அத்துடன் 15 வாகனங்கள் நிறுத்தி வைக்கக் கூடிய வாகன தரிப்பிடமும் வாகனங்கள் நிறுத்தி வைக்கும் இடத்தில் 2000 சதுரஅடி கொண்ட களஞ்சியசாலையும் (Stores) விற்பனைக்குண்டு. குறிப்பாக பெரிய நிறுவனங்களுக்கு பொருத்தமானது.

தொடர்புகளுக்கு: 0112715130
0779775017

## வர்த்தகப் பெருமக்களே...

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

**தொடர்புகளுக்கு:**
0729994777

## காணி விற்பனைக்குண்டு

யாழ். நகரில் சுபாஸ் Hotelக்கு அண்மையாக 46/4, பருத்தித்துறை வீதியில் 2 பரப்புக் காணி உடனடி விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்க: 0777556244


# விபத்துக்களில் காயம்

தென்மராட்சி, ஜூலை 17
துன்னாலை, கலிகைச் சந்தியில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் சாவகச்சேரி இளைஞருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டன.

சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த அருளப்பு அன்ரன் (வயது-26) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இவர் வியாபார நிமித்தம் பருத்தித்துறைக்குச் சென்ற போது இந்தவிபத்து இடம்பெற்றுள்ளது.

இதேவேளை எழுதுமட்டுவாழ் வடக்கு அ.த.க. பாடசாலை மாணவன் விளையாடும் போது தவறி வீழ்ந்ததில் கை முறிந்தது.

பாடசாலை மாணவனான ரதிபதன் சஜீபன் (வயது 13) கை முறிந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக கிசிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

(ம-207)


## வீட்டுடன் காணி விற்பனை

யாழ்ப்பாணம் ஆசனக் கோயிலுக்கு முன்பாக தீயோ வீதியில் (மத்தியூஸ் றோட்) 1 ¼ (ஒன்றேகால்) பரப்புடன் நான்கு பக்க மதிலுடன் நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் மூன்று அறைகளும், சமையல் அறைகளுடன் பெரிய அளவிலான உபசரிப்பு மண்டபத்துடன் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு-:0242221232, 0777407674

## அடகு நகை மீட்க அரிய சந்தர்ப்பம்

அடகு வைத்துள்ள உங்கள் நகைகளை இடம் மாற்றி வைப்பதற்கு, கூடிய தொகைக்கு மீள வைப்பதற்கு அல்லது மீட்டு விற்பதற்கு நாங்கள் உதவுவோம்.
(சேவைக் கட்டணம் 2% அறவிடப்படும்).

உடனே அழையுங்கள்:- 0774050936

## காட்சி அறைக்கான இடம் தேவை

யாழ்.நகரில் பிரபல நிறுவனம் தனது கிளை காட்சி அறைக்கு 500-1000 சதுர அடிக்கு இடைப்பட்ட பருத்தித்துறை, நெல்லியடி, சாவகச்சேரி பிரதேசத்தில் வாடகைக்கு இடம் தேடுகிறது.
தொடர்பு: 0772252255/0777279205

## St. Anthony's Hardware (Pvt) Ltd.,

Agents for world renowned brands of Hardware and Machinery items for the past 6 decades, invites applications from suitably qualified applicants for the following position.

### OPERATIONS MANAGER - JAFFNA

To implement and maintain a disciplined approach to core functions of Sales Administration /Debtors / Stock / Office Administration and Management in the Territory Office.

**Incumbent should be:**

- A Charted Accountant
- 5 years Managerial experience in similar capacity
- Between 35-45 years of age

**Our offer:**

- An attractive remuneration package and other benefits
- Company maintained vehicle
- Family insurance coverage

Application with names and addresses of 2 non-related referees indicating the post applied for on the top left hand corner of the envelope, should be posted or e-mailed within 7 days to:

The Manager HR & Administration,
St. Anthony's Hardware (Pvt) Ltd
524, Sri Sangaraja Mawatha, Colombo 10.
Fax: 011 - 2446554 E-mail: vacancy@stanthonys.lk

PRINCE Einhell Husqvarna DARI
KENT Mineral RO Water Purifiers WATERTEC IDRICA VENUS

## எங்கள் கடைக்கு ஏற்றது

SAM4S

இரண்டு மாதிரிகள்
ரூ. 22,372/=
ரூ. 33,572/=

இலக்ரோனிக் கேஸ் ரெஜிஸ்டர்
இப்பொழுது மிகக் குறைந்த விலையில் புதிய அம்சங்களுடன்

ஒரு வருட உத்தரவாதம்
விற்பனைக்கு பிந்திய சேவை

அழையுங்கள்
0773143444



BUSINESS MACHINES Co (Pvt.) Ltd.
#1, Lake Crescent, Colombo - 02.
Tel : 011 2304380 / Fax : 2304381
E-mail : sales @biz-machines.com / Web : www.biz-machines.com
55 வருட அனுபவம் வாய்ந்த முதல் நிறுவனம்


## ஆண்டு ஒன்று கடந்தும் நீங்கா நினைவுகள்

17.07.2011



மறைந்த உயர்திரு.
*ஜோன் நவரட்ணம்*
போ (f)மன்
*(இளைப்பாறிய பதிவாளர் நாயகம், வடபிராந்தியம்)*

அன்பு நிறைந்த பப்பா....

பன்னிரு மாதங்கள் போயின
பப்பா நீங்கள் மறைந்து - ஆயினும்
பாசமான உங்கள் நினைவுகள்
மட்டும் தினமும் கணமும் நீங்காமல்
எம் மனதிலே....

பாசமிகு கணவராக, தந்தையாக
அங்கிளாக, பாட்டனாக, உற்றாருக்கு நவம் ஆக
அன்பாக, அழகாக நீங்கள் வாழ்ந்த
வாழ்க்கையை உங்களை
என்றும் மறக்க முடியாத நாம்....

இன்று எமது அஞ்சலிகளை அன்பை
உங்களுக்குச் சமர்ப்பிப்பதோடு அவற்றை
எம் சார்ந்த அன்பு உள்ளங்களுடன்
பகிர்ந்தும் கொள்கின்றோம்

*இல.31, Dr.E.A. கூறே மாவத்த,*
*கொழும்பு - 06.*

என்றென்றும் அன்புடன்
உங்கள் லீலா, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## VOLUNTEER SECTOR JOBS & INTERNSHIP OPPORTUNITIES

(Local & Foreign)

உள்நாட்டு வெளிநாட்டு தொண்டர் நிறுவன சேவை வாய்ப்புகள் மற்றும் தொழில் வாய்ப்பு கள் பற்றிய இலவச தகவல்களுக்கும் செய்தித் தாளிற்கும் எழுதுங்கள்.

**Programme Coordinator VP**
**Mecwin Resource,**
**P.O.Box 206, Kandy.** (5783)

## DIPLOMA IN CIVIL SOCIETY PROJECT MANAGEMENT

சமூக நல தொண்டு நிறுவன (VOLUNTEER SECTOR) தொழில் வாய்ப்புகளுக்காக எமது நிறுவனத்தினால் நடத்தப்படும் மேற்குறிப்பிட்ட பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் இப்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு எழுதுவதன் மூலம் விண்ணப்பப்படிவத்தையும் ஏனைய விவரங்களையும் பெற்றுக்கொள்ள முடியும். தொலைக் கல்வி முறையில் நடத்தப்படும் இந்தப் பயிற்சி நெறியை நீங்கள் வீட்டில் இருந்தவாறே உங்கள் வசதிக்கேற்ப கற்றுப் பயனடையலாம். பயிற்சிநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படுவதோடு தொழில் வாய்ப்பிற்கான ஆலோசனைச் சேவையையும் பெற்றுக்கொள்ளலாம்.

**Programme Coordinator (DIPM)**
**Mecwin Resource,**
**P.O.Box 206, Kandy.** (5783)

## THE HALO TRUST

Sri Lanka

**The HALO Trust is a British based non- political, non-religious Non Governmental Organization specialized in the removal of the land mines and other explosive remnants of war and has been operating in Northern Province of Sri Lanka since 2002, currently working in Jaffna, Kilinochchi and Mullaitivu and has a support office in Colombo.**

The HALO Trust is seeking an experienced candidate to fill the position of:

### Administrative Assistant

In KILINOCHCHI (Kilinochchi Residents are required)

Qualifications/ Minimum requirements:

> Working experience in a similar role
> Excellent spoken and written English
> Excellent computer skills including MS Office (in particular strong command of Excel and Word)
> Very good organizational and management skills
> Experience in database management
> Previous experience with an International institution or NGO is an advantage


Interested candidates should submit their bio-data, contact details to:

The HALO Trust
450, Thirunagar West,
Kilinochchi, Sri Lanka.
Email : mail@halosrilanka.org

All applications must be submitted no later than 25th July 2011 (5773)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இ.மாலவன், தரம் 6பி,
யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



சி.விதுர்ஷன், தரம் 5,
யாழ்.மகாஜனக் கல்லூரி.



கு.சக்திகரன், தரம் 1பி,
யாழ்.சாவகச்சேரி மகளிர் கல்லூரி.



செ.கேதுவி, தரம் 3ஏ,
யாழ்.நல்லூர் சென்.பெனடிக்ற்.



த.அனுஜிற்றா,
சென்.ஜோன் பொஸ்கோ.



த.இலக்கியன், தரம் 5டி,
சென்.ஜோன் பொஸ்கோ.

## குட்டி நிலா



குட்டி நிலா வட்ட நிலா!
குழி விழுந்த சிறு நிலா
வட்டில் போல ஆகுமே
வளரும் நாளும் மெல்லவே!

இரவு நேர இருளையே
இல்லை ஆக்கும் முழுநிலா
பறவைகளும் அப்போது
படுத்து உறங்கும் கூட்டிலே!

நீல்வானம் பளிச்சிடும்
நிறைய மீன்கள் தெரிந்திடும்
காலை எழுந்து பார்க்கையில்
காணாமலே மறைந்திடும்!

அஸ்வினி,
கொழும்புத்துறை.

## அறிந்து கொள்வோம்

✱கிற்றார் இசைக்கருவியை வாசிப்பதில் உலகப் புகழ்பெற்ற கலைஞர் யார்?
ரவிசங்கர்

✱இலக்கியத்துக்கான நோபல் விருதினை முதல் தடவையாக வென்ற ஆங்கிலேயர் யார்?
ருட்யார் ட் கிப்ளின்

✱ஆதர்சி.கிளார்க் எந்தப் பல்கலைக் கழகத்தின் உபவேந்தராகக் கடமையாற்றியவர்?
மொரட்டுவப் பல்கலைக்கழகம்

✱ "கூகுள்" இணைய சேவைக்கு இணையாக அதிக பிரபல்யத்தைப் பெற்ற இணைய சேவை எது?
ஃபேஸ்புக்

✱மிருகங்களுக்கென சரணாலயம் அமைக்கப்பட வேண்டும் என்ற யோசனையை முன்வைத்தவர் யார்?
எஸ்.ஹொக்கா.



வை.சதீஸ்,தரம் 8,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

## ஒத்தசொல்



✱கரம் - கை
✱ஓசை - ஒலி
✱அறம் - தருமம்
✱வனம் - காடு
✱மரம் - தரு
✱பணம் - காசு
✱மனம் - உள்ளம்
✱ஊன் - இறைச்சி
✱ஒளி - வெளிச்சம்
✱பழம் - கனி

ரி.பூநிலா,5பி,
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

# தானத்தில் சிறந்தவர் தர்மரா? கர்ணனா?



நீண்ட நாள்களாகவே பாண்டவர்களுக்கு ஒரு சந்தேகம் இருந்தது. 'எமது அண்ணன் தர்மர் தானம் செய்வதில் சிறந்தவர். இருப்பினும் ஏன் எல்லோரும் கர்ணனே தானம் செய்வதில் சிறந்தவன் என்று கூறுகின்றனர்' என்பது தான் அந்தச் சந்தேகம். இவர்கள் மனதில் உள்ள சந்தேகத்தை அறிந்த கிருஷ்ணன் ஒரு நாள் பாண்டவர்களை அழைத்து

தங்க மலை, வெள்ளி மலை என இரு மலைகளை உருவாக்கினார். பின் பாண்டவர்களை நோக்கி, "இங்கே பாருங்கள்! இந்த இரு மலைகளையும் பொழுது சாய்வதற்குள் தருமம் செய்துவிட்டால் தானத்தில் சிறந்தவர் தர்மர் என்று நீங்கள் சொல்வதை ஒப்புக் கொள்கிறேன்" என்று கூறினார்.

பீமனும், அர்ஜுனனும் ஏனையவர்களும் அந்த இரு மலைகளில் இருந்து தங்கத்தையும், வெள்ளியையும் துண்டு துண்டாக வெட்டி எடுத்துக் கொடுக்கக் கொடுக்கத் தருமர் அதை உடனே நகர மக்களுக்குத் தானம் செய்தார். நகர மக்களில் பெரும் பகுதி மக்களுக்கு அவ்வாறு தானம் செய்தும் தங்கமும் வெள் ளியும் குறையவே இல்லை. அதற்கு மாறாக அவ்விரு மலைக ளும் வெட்ட வெட்ட வளர்ந்து கொண்டே இருந்தன.

மாலைப் பொழுது வந்ததும் இனித் தங்களால் முடியாது என்பதை உணர்ந்த தருமர், "எங்களால் முடியாது கண்ணா!" என்று தன் தோல்வியை ஒப்புக் கொண்டார். உடனே கிருஷ்ணன் ஓர் ஆளை அனுப்பி கர்ணனை வரவழைத்தார்.

"கர்ணா! இதோ பார்; இந்த இரண்டு மலைகளில் ஒரு மலை தங்க மலை; மற்றொன்று வெள்ளி மலை. இதை நீ பொழுது சாய்வதற்குள் தானம் செய்ய வேண்டும். பொழுது சாய இன்னும் ஒரு நாழிகைப் பொழுதே உள்ளது. உன்னால் முடியுமா? யோசித்துச் சொல்," என்று கேட்டார்.

உடனே கர்ணன், "இதில் யோசிக்க என்ன இருக்கிறது இப்போதே செய்து காட்டுகிறேன்," என்று கூறி அங்கிருந்த இருவரை அழைத்து, "இதோ பாருங்கள்! நீங்கள் இருவரும் ஆளுக்கொரு மலையாக இவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்," என்று கூறித் தனது தர்மத்தை முடித்துவிட்டுப் புறப்பட்டார்.

பாண்டவர்கள் திகைத்துப் போயினர். அவர்களைப் பார்த்து சிரித்தார் கிருஷ்ணன். தர்மருக்குப் பரந்த மனசு தான். அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், அவரைக் காட்டிலும் தான தருமம் செய்வதில் பரந்த மனசு உடையவன் கர்ணனே என்பதைச் சொல்லாமல் பாண்டவர்களுக்கு உணர்த்திவிட்டார் கிருஷ்ணன்.

நா.லோசன், தரம் 4, சென்.ஜோன்ஸ் கல்லூரி.

## விடை தெரியுமா? 116

### உங்களுக்கும் பரிசில்கள்

1. தாய்லாந்தின் தலைநகரம் எது?
2.டென்மார்க் நாட்டின் தேசியப் பறவை எது?
3.நவரத்தினங்களும் எவை?
4.கற்பூரவல்லியின் வேறு பெயர் என்ன?
5.அதிக பற்களை உடைய விலங்கு எது?

### விடைகள் 114

1. சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, சீவகசிந்தாமணி, குண்டலகேசி.
2. வைக்கோல், புற்கள், நீர்த்தாவரங்கள்.
3.ரோபர் ப்ளைஸ்.
4. சீனா பெல்ஜிங் நகரில்.
5. ஜப்பான்

### வெற்றி பெற்றவர் விவரம்

★சு.புவித்தா, யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
★ம.நவநிலா, யாழ்.யாழ்ற்ரன் கல்லூரி
★சி.நிறோஜன், யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.
★ச.தயூரன், யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி.
★த.பிருந்தா, யாழ்.இந்து மகளிர் கல்லூரி.
★சு.விமலேசன், ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 22.07.2011 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

## காப்பியங்கள்



| ஐஞ்சிறு காப்பியங்கள் | ஐம்பெருங் காப்பியங்கள் |
|---|---|
| ✱சூளாமணி | ✱சிலப்பதிகாரம் |
| ✱நீலகேசி | ✱மணிமேகலை |
| ✱நாககுமார காவியம் | ✱சீவகசிந்தாமணி |
| ✱யசோதரகாவியம் | ✱வளையாபதி |
| ✱உதயணன் காதை | ✱குண்டலகேசி |


## சிந்தனைத் துளிகள்...

✱ தவறுகளை ஒப்புக் கொள்ளும் தைரியமும், அதைத் திருத்திக் கொள்ளும் பலமும்தான் உண்மையான வெற்றிக்கு வழி.

✱ இன்பத்தின் உயர் கோட்பாடு உடல் நலம். உடல் நலத்தின் உயர் கோட்பாடு உடற்பயிற்சி

✱ உயர்ந்த உன்னதமான கடமைகளை நிறைவேற்றுவதற்காகப் பிறந்தவன் நீ என்று எப்பொழுதும் எண்ணு!

✱ தன்னுடைய மனத்தைக் கட்டுப்படுத்தித் தன்னுடைய ஆதிக்கத்தில் வைத்துக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றவன் விரும்பக்கூடிய எல்லாவற்றையும் அடைந்துவிடுவான்.




தே.றொஷான்,
யாழ்.மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நக்காளின் நடிப்பு



எதிர்பாராத
ஒரு பார்வையில்
என்னை உன் விழிகளால்
சிறையடித்தாய்
ஆயுள் வரைக்கும்
உன் சிறைக்குள்
வசிக்க எனக்கும்
ஆசை தான்
ஆனால்
நீ என்னை
ஆயுள் வரை
அடைத்து வைப்பாய்
என்றால் -நான்
உன்னை
போட்டுக் கொள்வேன்
என் மார்பில்
நிரந்தர தாழியாக

சி.சுஜிதா,
கொக்குவில்.

## வாழ்வும் வளமும்

வைகறையில் நுகத்தோடும்
கலப்பையோடும்
எருத்தன் மாட்டோடும்
புறப்பட்டு
நெல்வயலில்
விளைச்சல் கண்டோம்

முதல் நாள் மாலை
கட்டு மரத்தில்
வலித்தல் வலையுடனும்
கூறை பாயுடனும்
புறப்பட்டு
கடல்படு திரவியம்
தேடினோம்

தோட்டம் துரவு
பனை தென்னை
பேணி குவலயம்
கண்டோம்

தலாட்டு, ஒப்பாரி,
காதல் தூது, பிரபந்தங்கள்
எல்லாம் எங்கள்
நாட்டார் பாடல்கள்

வாழ்வின் பால் வழிகாட்டும்
வாண்மை மிக்க
செம்மொழியாம்
தமிழின் மேல்
பற்றுக் கொண்டோம்

பிறந்த மண்ணின் வாசமும்
எம் தேசத்து நேசமும்
எங்கள் சுவாசத்துடன்
சேர்ந்தவை

ஆ.முல்லைதிவ்யன்,
வெளிலையூர்

## இணைப்பூவும் உயிர்ப் பூவும்



காகம் வளர்த்த
குயில் குஞ்சுகள்
சத்தமிட்டு முடிய

குயில்கள் கூவ
காகங்கள் கரைய

குழந்தைகள்
அம்மா அப்பாவை
கைநீட்டித் தொட

சூரியன் கிழக்கிலிருந்து
கிளம்புவான்

கதிரவன் ஒளிபட்டு
பூக்கள் எல்லாம்
பெருமகிழ்ச்சியில்
மலரும் அழகை
அலங்கரிக்கும்

மக்கள் எல்லாம்
விழித்து தத்தம்
கடமைகளை செய்ய

உலகம் உயிர்ப்பு
காண்கிறது
பெருமகிழ்ச்சியில்
திழைப்பு காண்கிறது

ஓர் உலக
இணைப்பு
காண்கிறது

ஆ.முல்லைதிவ்யன்,
வல்வெட்டித்துறை

## அறிவு ஜீவிகள் நாம்



கடவுள் எங்கிருக்கிறார்?
ஏதுசெய்து கொண்டிருக்கிறார்?
எந்த ரூபத்தில் இருக்கிறார்?
புரியாத ஒன்றைப் பற்றி
பல காலம் பேசிவிட்டு
அருகேயிருக்கும் குழந்தையை
ரசிக்க மறந்துவிடுகின்ற
அறிவுஜீவிகள் நாம்!

-நிஷாந்தன்.

## காதலராய் நாமிருக்க

என் இதயத்தில் நீ அமர்ந்து
அவ்வின்பத்தை நான் சுமந்து
பல கவிதைகள் நான் வடிக்க
அவற்றை எல்லாம் நீ படிக்க
இன்பம் கண்டேன் நானடியே
காதலராய் நாமிருக்க
காவியமாய் பலர் புகழ
கனிவாக நாம் வாழ்ந்து
காதலுக்கு புகழ் சேர்க்க
கனாக்கண்டேன் நானடியே
கல்நெஞ்சம் படைத்தவளாய்
காதலையே நீ மறந்து
என் கவிதைகளை மறந்தவளாய்
கடல்கடந்து சென்றாயே நீயடியே
கடல் நீரும் உவர்போல
என் கண்ணீரும் உவரடியே
கடல்நீரில் பலஉயிரினங்கள்
வாழ்வதுபோல்
என் கண்ணீரில் நீமட்டும் வாழுகிறாய்
உன் நினைவுகளை நான் சுமந்து
உருவமற்ற கனவுகள் போல்
நீ விரும்பும் கவிதைகளை
பலவிதமாய் நான்வடிப்பேன்
அவற்றை எல்லாம்
நீ படித்தால் அக
மகிழ்வேன் நானடியே...

- தேவி.

## முகமூடி

ஒருமுகம் போதவில்லை
எனக்கு!
ஓராயிரம் தேவைப்படும்
என்பது கணக்கு!
முகமாற்று சிகிச்சை செய்தால்
முடியுமோ இந்த வழக்கு!
முகமூடி சொல்கிறது
தானொன்றுதான் தீர்வென
அதற்கு!

- வீணா

## விலகியிருங்கள் நண்பர்களே



விலகியிருங்கள் நண்பர்களே
விலகியிருங்கள்
தெரு நாய்களிடமும்
தெரிந்த ஆசிரியர்களிடமும்
ஏனென்றால் இரண்டும்
எப்போது குழையும்
எப்போது குரைக்கும்
என யாரும் அறியாததால்

குட்டி

## வலிகள்

பிறப்பு மிறப்பும்
இயற்கையின் நியதி
இருந்தாலும்; நாளும்
விதிக்கு விலக்காய்
பத்திரிகைகளின்
பக்கங்களை நிரப்பும்
இளவயது மரணங்கள்
இதயத்தை நெருடும்
இத் தருணத்தில்
மகத்துவம் மிக்க
தத்துவங்கள் கூட
சக்தியற்றுப் போகும்

க.நாகராசா,
சாவகச்சேரி.

## முடிவில்லா தீப்பந்தம்

ஒவ்வொரு தீக்குச்சியும்
கையை சுட்டுவிடும்
அளவுக்கு எரிந்தபின்
அணைந்து விடுகிறது!
இந்த மனம்மட்டும்
முடிவின்றி எப்பொழுதும்
எரிந்துகொண்டே இருக்கிறது!

- வாணி

## பரிதவிப்பு

சிப்பிக்குள் முத்தாய்
உறைந்து இருக்கும் உன்
நினைவலைகள் என்
மனதில் மௌன சங்கீதம்
பாடும் பாச அலைகள்

இறக்கி வைக்க முடியாத உன்
நேச ஞாபகங்கள் நீ
வருவாய் என்று காலமெல்லாம்
காத்திருக்கின்றேன்
என் இதயத்தை தீக்குளிக்க
வைத்துவிட்டு எங்கு சென்றாய்

செல்வமலர்,
சிறுவர் இல்லம், திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்துக்குள் சிக்கிகுண்டு தடுமாறும் இலங்கை

**இலங்கை அரசு இந்தத் தேர்தலில் வெற்றி கொள்வதன் மூலம் தமிழ் மக்கள் மேல் இழைக்கப்பட்டதாகக் கருதப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பான அழுத்தங்களைத் தவிர்க்கவும் தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளை மழுங்கடிக்கவும் ஒரு பகீரத முயற்சி செய்கிறது.**

ஞாயிறு காரம்

**சந்திரசேகர ஆசாத்**

இன்று ஒழுக்கம் என்பது பல்வேறு தரப்பினராலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல்வேறு நோக்கங்களுக்காகவும் பாவிக்கப்படும் ஒரு வார்த்தையாகவே காணப்படுகிறது.

பெரும்பாலான அதிகாரப் பீடங்களில் உள்ளவர்கள் தங்கள் தீய பக்கங்களை மறைத்து அல்லது அந்நிய பக்கங்களுக்கு முலாம் பூசித் தம்மை ஒழுக்க சீலர்களாகவும் தர்மவான்களாகவும் காட்டுவதில் அக்கறை செலுத்தி வருகின்றனர். அது மட்டுமன்றி ஏனையவர்களுக்கு ஒழுக்கம் பற்றிய போதனைகளை உரத்த குரலில் ஒப்புவித்தும் வருகின்றனர். எனினும் இத்தகைய மூன்றாம் தர நடிக வேடங்கள் வெகுவிரைவில் அம்பலப்படுவதும் அவர்களின் உண்மை உருவங்கள் வெளியே தெரிவதும் தவிர்க்க முடியாதவையாகி விடுகின்றன.

**படையினரின் ஒழுக்கம்**

இலங்கையின் அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான போர் உச்சமாக இடம்பெற்ற நாள்களில் தமிழ் மக்கள், பாதுகாப்பு வலயம் என்ற பேரில் சிறு பகுதிகளுக்குள் அடைக்கப்பட்டுப் படையினரின் எறிகணைகளாலும் கொத்துக் குண்டுகளாலும் பல்லாயிரக் கணக்கில் கொல்லப்பட்டனர். அவை தொடர்பாக இராணுவப் பேச்சாளர்களிடம் கேள்வி எழுப்பப்படும் போதெல்லாம் அவர்கள் தமது இராணுவத்தினர் மிகவும் ஒழுக்கமுள்ளவர்கள் எனவும் அவர்கள் கனரக ஆயுதங்களைப் பாவிப்பதில்லை என்றும் மறுத்துவிடுவார்கள். ஆனால் ஐ.நா. நிபுணர் குழு விடுத்த போரின் இறுதி நாள்கள் பற்றிய அறிக்கையும் சனல்-4 'சிறிலங்காவின் கொலைக்களம்' வீடியோ காட்சியும் வெளிவந்த பின்பு இலங்கைப் படையினரின் ஒழுக்கம் பற்றி உலகமே கேவலமாகப் பார்க்கும் நிலை ஏற்பட்டு விட்டது. அளவிட முடியாத அவமானத்துக்குள் தள்ளப்பட்டு விட்ட இலங்கையின் அரச தரப்பும் அரச படை யினரும் இன்னமும் ஒழுக்கம் பற்றிப் புனை கதை களைக் கூறி வருகின்றனர்.

**வீண் போதனைகள்**

இலங்கை அரசின் மறுப்புக்களையோ கருத்துக்களையோ எவருமே கணக்கில் எடுக்காத நிலையும் கீழ்த்தரமான போர்க்குற்றங்களைப் புரியும் ஒரு நாடாகப் பார்க்கப்படும் நிலையும் அனைத்துலகிலும் உருவாகிவிட்டது. இலங்கைப் படையினரதும் அரசினதும் ஒழுக்கம், உண்மை என்பன வெறும் பொய்மை என்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

ஹெயிட்டியில் ஐ.நா. சமாதானப் படையில் பணியாற்றிய இலங்கைப் படையினர் பாலியல் குற்றச்சாட்டுக்களின் பேரில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட போதே இலங்கைப் படையினரின் ஒழுக்கம் பற்றி உலகம் புரிந்து கொண்டது. எனினும் ஒழுக்கமுள்ள சமூகத்தைக் கட்டியமைப்பது பற்றி ஜனாதிபதியும் அமைச்சர்களும் மாறி மாறி உரக்கவே பேசி வருகின்றனர்.

ஜனாதிபதி அண்மையில் அலரி மாளிகையில் மாணவர்களைச் சந்தித்த போதும் சரி, கல்கிசையில் ஒரு விழாவில் உரையாற்றி போதும் சரி ஒழுக்கம் பேணப்பட வேண்டிய அவசியம் பற்றி அதிகமாக வலியுறுத்தியுள்ளார். அதிலும் ஒழுக்கம் கடைப்பிடிக்கப்படாவிட்டால் அபிவிருத்தியால் எவ்வித பயனும் இல்லை எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

**மீறல்கள்**

தென்னிலங்கையில் இந்த ஒழுக்கம் எவ்வளவு தூரம் பேணப்படுகிறது என்பது சகலராலும் அறியப்பட்ட விடயமாகும். சம்பள உயர்வு கோரியும் தங்கள் உரிமைக் கோரிக்கைகளை முன் வைத்தும் ஊர்வலம் நடத்தும் தொழிலாளர்கள், மாணவர்கள் மீது பொலிஸார் முன்னிலையில் காடையர்கள் தாக்குதல் நடத்துவதும் பொலிஸாரோ தொழி லாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதும் அமைச்சர்களே நேரில் வந்து ஜனாதிபதிக்கு மகஜர் கொடுக்கப் போன பௌத்த பிக்கு களை மிரட்டி விரட்டுவதும் அரச ஊழியரை மரத்தில் கட்டி வைப்பதும் இனந்தெரியாதவர்கள் என்ற பேரில் அரச ஆதரவாளர்களின் அட்டகாசங்களும் என ஒழுக்கம் தென்னிலங்கையில் ஒவ்வொரு நாளும் மரணித்துக் கொண்டிருக்கிறது. அங்கு நாற்பதினாயிரம் பெண்களைப் பாலியல் தொழிலில் நிரந்தரமாக ஈடுபடுத்தியும் முப்பதினாயிரம் சிறுவர், சிறுமியரை பாலியல் வக்கிரங்களுக்குப் பயன்படுத்தியும் சிங்கள மக்களின் ஒழுக்கம் விலைபேசி விற்கப்படுகிறது.

அதேவேளையில் ஜனாதிபதி அலரி மாளிகையிலும் கல்கிசையிலும் ஆற்றிய ஒழுக்கம் பற்றிய உரைகள் காற்றில் கரைந்து போகும் முன்பே வடக்கில் அரச படையினராலும் அரச ஆதரவாளர்களாலும் ஒழுக்கம் காலில் போட்டு மிதிக்கப்படுவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. காடைத்தனம், மிரட்டல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட் பாளர்களுக்குத் தேர்தல் பரப்புரை செய்ய இடை யூறுகள், பொய்மை கலந்த குளறுபடியான முரண்பட்ட அறிக்கைகள் என ஒழுக்கம் என்பது அரசினாலேயே இன்று காணாப் பொருளாக்கப்பட்டுவிட்டது.

அளவெட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளூராட்சித் தேர்தல்களில் பங்குகொள்ளும் வேட்பாளர்களுக்கான கலந்துரையாடலை நடத்திக் கொண்டிருந்த போது இராணுவச் சீருடை தரித்தவர்கள் உட்புகுந்து தாக்குதலை நடத்தியது ஏற்கனவே நாம் அறிந்த விடயம். இது தொடர்பாகத் தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து அது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள ஒரு தேர்தல் திணைக்கள அதிகாரி யாழ்ப் பாணம் அனுப்பப்பட்டார். அவர் இது தொடர்பாக யாழ். அரச அதிபர் தலைமை யில் இடம்பெற்ற ஒரு கலந்துரையாடலில் கலந்து கொண்ட போது அவரிடம் அளவெட்டித் தாக்குதல் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படவில்லை எனப் பொலிஸ் தரப்பினால் தெரிவிக்கப்பட்டது.

**அளவெட்டிச் சம்பவத்துக்கு புதுவிதமான சோடனை**

அப்போது மிகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ள நிலையில் ஆயுதப் படையினர் அல்லாத பிறர் எப்படி இப்படியான வன்முறைகளில் ஈடுபட முடியும் எனக் கேட்கப்பட்ட போது யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் கொலை, கொள்ளை போன்றே இவை இடம்பெற்றிருக்கலாம் எனப் பதில் கூறப்பட்டது. அடுத்த நாள் இந்தச் சம்பவங்கள் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட வடபகுதிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களின் அனுதாபங்களைப் பெற்றுத் தேர்தலில் வெற்றி பெறும் குறுக்கு வழியாக அந்தத் தாக்குதலை அவர்களே மேற்கொண்டிருக்கக் கூடும் எனத் தெரிவித்துள்ளார்.

சாதாரண வழமையான தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்குப் பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்படும் பட்சத்தில் அவர்களுக்கு எப்படி வன்முறைகளில் ஈடுபட முடியும் என எவரும் கேள்வி கேட்கவில்லை. அப்படிக் கேள்வி கேட்டாலும் பதில் கிடைக்கப் போவதில்லை. எப்படியிருந்த போதிலும் 50 இற்கு மேற்பட்டோர் இராணுவச் சீருடையில் கொட்டன்கள், துப் பாக்கிகளுடன் வந்து ஒரு தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் மீது தாக்குதல்களை நடத்துமளவுக்கு வடக்கில் ஒழுக்கம் பேணப்படுகிறது என்பது எமக்குப் பல விடயங்களைப் புரிய வைக்கிறது. வடக்கில் கொலை, கொள்ளை களைக் கட்டுப்படுத்த முடியாதது போன்றே தேர்தல் வன்முறைகளையும் கட்டுப்படுத்த முடியாது என்ற தொனியில் பொலிஸ் தரப்பில் கூறப்படுவது ஒழுக்கம் பற்றி அவர்களின் அக்கறையை வெளிப்படுத்துகிறது. அதேவேளை இப்படியான வன்செயல்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே மேற்கொண்டிருக்கலாம் என்ற வடபகுதிக் கட்டளைத் தளபதியின் கூற்று தமிழ் மக்களை அடி முட்டாள் [illegible] முறையாகும்.

**[illegible]**

அதுமட்டுமன்றி ஜனாதிபதி விரும்பும் ஒழுக்கமுள்ள ஒரு சமூகத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களின் வீடுகள் மீது தாக்குதல்கள், நாயை வெட்டி தலையை கேற்றில் மாட்டுதல் போன்ற ஒப்பற்ற கைங்கரியங்கள் கேட்பார் மேய்ப்பார் இன்றி நடந்து வருகின்றன.

மாலையானதும் வீதிக்கு வீதி நடத்தப்படும் இராணுவத்தினரின் வீதிச் சோதனைகள் மத்தியிலும் இப்படியான வன்முறை யாளர்களால் எப்படி ஆயுதங் களுடன் நடமாட முடிகிறது என்ற கேள்விக்கான பதில் மட்டும் பெரும் மர்மமாகவே விளங்கி வருகிறது. அதற் கான விடை காணப்படுவதற்கான சாத்தி யங்களும் எதுவும் தென்படவில்லை.

எப்படியிருந்த போதிலும் ஜனாதிபதியின் ஒழுக்கம் பற்றிய போதனைகளின் நிலையிலேயே அவரின் ஆயுதப்படைகளாலும் அரச ஆதரவுக் குழுக்களாலும் ஒழுக்கம் என்பதன் அர்த்தங்கள் படுமோசமான முறையில் திரிபுபடுத்தப்படுவதைத் தெளிவாகவே உணர்ந்து கொள்ள முடிகிறது.

இன்று இலங்கை அரசின் அதிகார பீடத்தாலும் படைத் தரப்பாலும் மேற்கொள்ளப்பட்ட ஒழுக்கச் சிதைவுகள் சர்வதேசத்தின் முன் அம்பலப்பட்டு நிற்கின்றன. பெரும் தலைகுனிவுக்குள் இலங்கை அரச தரப்பு சிக்குண்டு தடுமாறுகிறது.

**தேர்தலை ஆயுதமாக பயன்படுத்தவுள்ள அரசு**

இந்த நிலையில் அதிலிருந்து தப்ப இலங்கை அரசு வடக்கில் இடம்பெறும் உள்ளூராட்சித் தேர்தல்களை ஓர் ஆயுதமாகப் பாவிக்க முனைகிறது. அரசு இந்தத் தேர்தல்களில் வெற்றிபெற்றால் தமிழ் மக்கள் தங்கள் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்கின்றனர் எனப் பிரசாரம் செய்து சர்வதேச அழுத்தங்களைச் சமாளிக்க முடியும் என நம்புகிறது. அதேவேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடிப்பதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளைப் பலவீனப்படுத்தி விட முடியும் எனவும் அரச தரப்பினரும் அவர்களுடன் இணைந்து நிற்கும் குழுவினரும் நம்புகின்றனர். எனவே தான் இந்தத் தேர்தலில் வெற்றியீட்டிவிட வன்முறைகள், மிரட்டல்கள், எதிர்தரப்பினர் பிரசார நடவடிக்கையில் ஈடுபடத் தடை எனப் பலவித முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. மேலும் ஓர் அமைச்சர் பட்டாளமே இங்கு வந்திறங்கி விழாக்கள், நிகழ்ச்சிகள் என்ற பேரில் சகல அரச வளங்களையும் பாவித்து அரச சார்பான பிரசாரங்களையும் மேற்கொண்டு வருகிறது.

அப்படியிருந்த போதிலும் இலங்கை அரசு இந்தத் தேர்தலில் வெற்றி கொள்வதன் மூலம் தமிழ் மக்கள் மேல் இழைக்கப்பட்டதாகக் கருதப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பான அழுத்தங்களைத் தவிர்க்கவும் தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளை மழுங்கடிக்கவும் ஒரு பகீரத முயற்சி செய்கிறது என்பதைத் தமிழ் மக்கள் புரிந்து கொண்டு விழிப்பாக இருக்க வேண்டியது முக்கியமாகும்.

எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளவும் எமது உரிமைகளைப் பெறுவதில் ஜனநாயக வழியில் முன்செல்லவும் இந்தத் தேர்தலைத் தமிழ் மக்கள் வழமை போலவே சரியாகப் பயன்படுத்துவார்கள் என்பது மட்டும் உறுதி. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 17.07.2011 முதல் 23.07.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

புத்திசாலித்தனமான யோசனைகள் தோன்றும், நண்பர்கள் வழியில் உதவிகள் கிடைத்துப் பெருமை அடைவீர்கள். மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு, போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கலாம். எந்த வேலையையும் தங்கு தடையின்றி முடித்துக் கொள்வீர்கள். சோர்வுகள் நீங்கிப் புத்துணர்ச்சியோடு செயற்படுவீர்கள். அரசியல்வாதிகளை நம்பி இறங்கிய காரியங்கள் நல்ல விதமாக முடிவுக்கு வரலாம். உத்தியோகஸ்தர்கள் அதிகாரிகளின் உதவி, பாராட்டுக்களைப் பெறலாம். மருத்துவச் சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் அவ்வப்போது சில பிரச்சினைகள், வாக்கு வாதங்கள் உருவாகலாம். கொடுக்கல் வாங்கல்களிலும், கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதிலும் சிரமங்களைச் சந்திக்கலாம். யாருக்கும் உத்தரவாதம் தர வேண்டாம். மாமன், மைத்துனர்கள், உறவினர்கள், நண்பர்கள் தொடர்பான வழிகளில் ஆதாயம், அனுகூலம் உண்டு.

### இடபம்

புதிய முயற்சிகளில் இறங்கவும், முக்கிய வேலைகளை ஆரம்பிக்கவும், விருந்து விசேஷங்களுக்கும் உகந்த நாள். நல்ல காரியங்களைச் செய்யவும், உறவினர்களைச் சந்தித்து உதவி கேட்கவும் உகந்த நாள்கள். கடன் வசூலாகும். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். எந்த வேலையிலும் இடர்பாடுகள், சிரமங்கள் தொடரும். பொறுப்புகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்க முடியாமல் அவதிகளுக்கு ஆள்படலாம். உத்தியோகம், தொழில்துறை, வியாபாரம் போன்றவற்றில் எதிர்பாராத தொல்லைகள் உருவாகி உங்களின் உற்சாகத்தைக் குறைக்கலாம். கொடுத்த பணமும் வராமல் இழுத்தடிக்கலாம். ஏண்டா வாழ்கிறோம் என்ற வெறுப்பு, அடிக்கடி ஆள் கொள்ளலாம். அரசாங்கம், அரசியல்வாதிகள், அதிகாரிகள், மேலிடத்து முக்கிய பிரமுகர்களின் உதவிகள் கிடைப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டு, உங்களைச் சுற்றலில் விடும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது கடினம். உடன் பிறந்த சகோதரர்கள், பங்காளிகள், நிலம், பூமி, விவகாரங்கள் போன்றவற்றில் கவனம் அவசியம்.

### மிதுனம்

ஆறுதலான, மாறுதலான அனுபவங்களைச் சந்திக்கலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களுக்காக, ஆடம்பரமான செயற்பாடுகளுக்காகக் கணிசமான பணத்தைச் செலவிடலாம். திட்டமிட்ட வேலைகளை நடத்திக் கொள்ளலாம். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் கேட்ட உதவிகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். தொழில், உத்தியோகம் மற்றும் வியாபார ரீதியான விடயங்களில் இடர்பாடுகள், சிரமங்கள், வேலைப்பளு தொடரும். சிலர் புதிய சூழ்நிலையில் பணியாற்ற நேரிடலாம். பொன், பொருள்கள் சேரும். பெரிய மனிதர்கள் சிலர் உங்களுக்கு அவ்வப்போது நல்ல ஆலோசனை சொல்வர். வீடு, மின் உபகரணங்கள் பராமரிப்பிற்காகவும், சகோதரர்கள், பங்காளிகள் வகையிலும் செலவுகளைச் சந்திக்கலாம். இவர்கள் வழியில் பகை, மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்லவும். உத்தியோகஸ்தர்கள் அதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும். ஆடை, ஆபரணங்கள் சேரும். மற்றவர்கள் வியக்கும் வகையிலான சில காரியங்களைச் செய்வீர்கள். செலவு, அலைச்சல், திரிச்சல் உண்டு

### கடகம்

ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களால் உங்களின் சில வேலைகளில் தடை ஏற்படலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்க நேரிடலாம். திட்டமிட்ட காரியங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சிறு உடல் உபாதைகளை எதிர்கொள்ளலாம். திடீர் வெளியூர்ப் பயணம் செல்லலாம். குடும்ப விவகாரங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். கடினமாக வேலை செய்தாலும் அதற்கேற்ற பலன் கிடைக்கும். கடந்த காலத்தில் நழுவிப் போன வாய்ப்புகள் எல்லாம் இப்போது தேடி வரலாம். போட்டி, எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். பொலிஸ் தொடர்பான பணியில் இருப்போர் கூடுதல் வருமானம் பெறலாம். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. உடன் பிறந்த சகோதரர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்விற்கு வரும். பெண்கள் வழியில் அன்புத் தொல்லைகள் உருவாகலாம். அரசாங்கம், அரசியல், மருத்துவம், அதிகாரிகள் தொடர்பான விடயங்களிலும் அல்லல்கள் இருக்குமே அன்றி, ஆதாயம் இல்லை. காரிய வெற்றி உண்டு. தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம்.

### சிங்கம்

நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். மற்றவர்கள் உங்களைப் பார்த்துப் பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சி நடக்கும். சில வேலைகளைச் சுலபமாக முடிப்பீர்கள். ஆதாயமில்லாத, அலைச்சல் திரிச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் சிலரின் வீடுகளுக்குச் செல்லலாம். வேண்டாத விவகாரம் ஒன்றில் தலையிட்டு மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம். பல நாள்களாக வாங்க நினைத்த பொருள்களை எல்லாம் வாங்கும் சூழ்நிலை உருவாகும். பிள்ளைகளின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். குழந்தைப் பேறு எதிர் பார்ப்போர் நல்ல செய்திகளைக் கேட்கலாம். அரசு வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளிலும் முன் னேற்றம் உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வகையில் திடீர் செலவுகள், சிரமங்கள் உண்டாகலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வருவதும் தள்ளிப் போகலாம். கடமையே கண் என்று சொல்லும் வகையில் அடிக்கடி கூடுதல் நேரம் பணியாற்றலாம்.

### கன்னி

குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த இடங்களுக்குச் செல்லலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நீண்ட நாள்களாக சந்திக்காத சிலரை சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கும். உதிரி வருமானம் வரலாம். பொறுப்புகள் அதிகரிக்கும். முக்கிய வேலைகளை உடனுக்குடன் முடித்துக்கொள்ள முடியாமல் பிரச்சினைகளை, இடர்பாடுகளைச் சந்திக்கலாம். குடும்பத்தினர் மற்றும் சக ஊழியர்கள் மத்தியில் அதிருப்தி விமர்சனத்திற்கு ஆள்படலாம். மறதி, அலுப்பு, சலிப்பு, வெறுப்பு போன்றவை அடிக்கடி ஆள்கொள்ளும். உத்தியோகஸ்தர்கள் தொழில் விடயங்களில் அதிக அக்கறையோடு செயற்படவில்லை எனில், குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக நேரிடும். அத்துடன் அதி கரிக்கும் செலவுகளால் கடன் சுமைகூடும். பெண்கள், சகோதரிகள், திடீர்ப் பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் பணம் கரையலாம். அரசியல், மருத்துவம், தந்தை, அதிகாரிகள் தொடர்பான அனுகூலம் உண்டு.

### துலாம்

திட்டமிட்ட வேலைகளை ஆரம்பிக்கவும், நடத்திக் கொள்ளவும் முடியும். கடன்மிகுதிகள் வசூலாகும். நண்பர்கள் சந்திப்பால் சந்தோஷம் உண்டு. ஊக்கம், உற்சாகம் குறையலாம். பொழுதுபோக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். மனைவி, குழந்தைகளின் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். எவ்வளவுதான் பணம் வந்தாலும், சேமிப்பாக ஒன்றும் இருக்காது. அடகு வைத்த பொருள்களை மீட்க முடியாமல், வட்டி மட்டுமே கட்டும் சூழ்நிலை உருவாகும். தொழில் ரீதியான செல்வாக்கு அதிகரிக்கும். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவீர்கள். பொன், பொருள்கள், புதிய ஆடைகள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். கணவன் மனைவி இடையே பாசம் அதிகரிக்கும். வீண் பழிகள் விலகி, பாராட்டுப் பெறுவீர்கள். எதிர்பாராத பண வரவுகளைப் பெறலாம். இழுபறி காரியம் ஒன்று முடிவுக்கு வரும். நீண்ட தூரப் பயணம் செல்லலாம்.

### விருச்சிகம்

பிள்ளைகள் வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல் போகலாம். சந்தோஷமான இனிய அனுபவங்களைப் பெறலாம். பெண்கள் வழியில் உதவி கிடைக்கும். உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும். சட்ட விவகாரங்கள் சாதகமாக அமையும். பெரிய மனிதர்களின் நட்புக் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். வீடு, மனை, நிலம் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். வாகனங்களில் செல்லும் போது அதிக வேகத்தை தவிர்க்கவும். சகோதரர்களுக்காக எடுத்த முயற்சிகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். பெண்கள், பொழுதுபோக்கு விடயங்கள், பயணங்கள், ஆடம்பர ஈடுபாடுகள் போன்றவற்றுக்காகத் தாராளமாகச் செலவு செய்வீர்கள். இந்த வகையில் இனிய அனுபவங்களைப் பெறலாம். கடன் விவகாரங்களில் கவனம் அவசியம். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்க கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். திட்டமிட்ட காரியங்களில் தடை ஏற்படலாம். பணவரவுகளைப் பெறலாம்.

### தனுசு

நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பு, விருந்து உபசரிப்புகளால் கலகலப்பு உண்டு. பயணங்களால் சந்தோஷம் அடையலாம். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். திட்டமிட்டதை விட சில விடயங்களுக்கு அதிகமாகச் செலவாகலாம். மருத்துவச் செலவை எதிர்கொள்ளலாம். உத்தியோகம், தொழில்துறை, வியாபாரம் போன்றவற்றில் சிரமங்கள் அதிகரிக்கும். அடிக்கடி தடை, தாமதங்களையும், மறதி, கவனக்குறைவு போன்றவற்றால் தர்ம சங்கடமான சூழ்நிலைகளையும் எதிர்கொள்ளலாம். எந்த விடயத்திலும் கவனமாகவும், எச்சரிக்கையாகவும் நடந்து கொள்ள வேண்டும். நிலம், பூமி வாங்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்திரமாகச் செயற்பட்டு, சில விடயங்களில் கணிசமான ஆதாயம் பெறுவீர்கள். அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால் அலைக்கழிப்புகள் அதிகரிக்கும். கணவன் மனைவி இடையே வாக்குவாதங்கள் ஏற்பட்டு மனஸ்தாபம் உருவாகலாம். கூட்டுத் தொழிலிலும் சிறு, சிறு பிரச்சினைகள் உருவாகலாம்.

### மகரம்

தைரியம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நடக்கும். பொறுப்புகள் அதிகரிப்பதோடு, சந்தோஷமான அனுபவங்களுக்கும் வாய்ப்பு உண்டு. மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம். கடனாக, கைமாத்தாக கொடுத்த பணம் திரும்பி வரும். போட்டி, எதிர்ப்பு அதிகரிக்கும். சகோதரர்கள், பங்காளிகள் பிரச்சினைகளால் குழப்பம் உண்டாகும். உத்தியோக ரீதியாக எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பது தள்ளிப் போகும். கடன் பிரச்சினைகளால் தொல்லைகள், மனக் குழப்பங்கள் அதிகரிக்கலாம். தந்தை வகையில் மனஸ்தாபம் ஏற்படுவதோடு, அவரின் சொத்துக்கள் தொடர்பாகவும் பிரச்சினை உருவாகலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். கணவன் மனைவி இடையே பிரச்சினைகள் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். செலவு, அலைச்சல் உண்டு. பக்தி நாட்டம் உண்டாகும். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள்.

### கும்பம்

குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். நீண்ட நாள்களாக தள்ளி வைத்த வெளியூர்ப் பயணம் செல்லலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும். அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். புதிய அனுபவங்களைப் பெறலாம். கைமாத்தாக, கடனாக கொடுத்த பணம் திரும்பி வரலாம். எந்த விடயத்திலும் கவனமாகச் செயற்பட வேண்டும். தொழில் ரீதியாக இழப்புகள் ஏற்படாமல் இருக்க மற்றவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள். கடும் வேலைப்பளுவால் அவ்வப்போது அவதிகளுக்கு ஆள்படலாம். எடுத்த வேகத்தில் எந்த வேலையையும் செய்ய முடியாமல், தடை, தாம தங்களைச் சந்திக்கலாம். அடிக்கடி ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படலாம். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். அதேநேரத்தில், மாமன், மைத்துனர்கள், உறவினர்கள், நண்பர்கள், மாற்று மதத்தினர் தொடர்பான வழிகளில் உருவான தொல்லைகள் நீங்கி, அவர்களால் நன்மை அடையலாம். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.

### மீனம்

எந்த விடயத்திலும் பொறுமை, நிதானமாக செயற்பட வேண்டும். சிலர் உங்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கலாம். சேமித்த பணத்துக்கு திடீரென செலவு ஏற்படலாம். மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். அதேநேரத்தில், பணிபுரியும் இடத்திலோ, வீட்டிலோ உள்ள சிலரின் செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். கடன் மிகுதிகள், கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள். தொழில் சார்ந்த விடயங்கள், இயந்திரங்கள், வேலையாள்கள், சட்டம் நீதிமன்றம் தொடர்பான விவகாரங்கள், கூட்டுத் தொழில்கள் போன்றவற்றில் பிரச்சினைகளைச் சந்திக்கலாம். வரவுகள் இருந்தாலும், அதற்கேற்ற செலவுகளும் உண்டு. மலைபோல் வந்த பிரச்சினைகள் எல்லாம் பனிபோல விலகிவிடும். பிள்ளைகளின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன் னேற்றம் உண்டு. அரசியல்வாதிகள், அதிகாரிகள், தந்தை, மருத்துவம் தொடர்பான விடயங்களில் அனுகூலம் இல்லை. தேவையற்ற அலைச்சல்களுக்கு ஆள்படலாம். பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லவி அமுதத்தை அள்ளித் தந்தவர் கலைஞர் சின்னராசா

சாதனைக் கலைஞரைச் சந்திப்போம், சிந்திப்போம்

“பல்லவி அமுதம்” என்னும் கிடைத்தற்கரிய படைப்பை எமக்குத் தந்திருப்பவர் சங்கீதரத்தினம் க.ப.சின்னராசா அவர்கள் .

“தக்கார் தகவிலார் என்பது அவரவர், எச்சத்தால் காணப்படும்” என்பது வள்ளுவம். இந்தக் குறளானது ஆசிரியத் துறையினருக்கும் சாலவே பொருந்தும். சில ஆசிரியர்கள் காண்பவரை எல்லாம் தமது மாணவர் என்று தம்மைத் தாமே மனதாரப் புகழ்வர். ஆனால் சில ஆசிரியர்களோ மிகவும் அமைதியாகவும் தன்னடக்கத் தோடும் தமது பணியைச் செவ்வனே ஆற்றுவர். இவ்வாறானவர்களின் மாணவப் பரம்பரையோ மிக நீண்டதாகவும் ஆளுமைகொண்டதாகவும் இருக்கும். இவ்வாறு பல நூற்றுக்கணக்கான மாணவர்களை மிருதங்கத் துறையில் உருவாக்கி ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஈழத்தின் மிருதங்கக்கலை வரலாற்றில் தடம்பதித்து கனிவான கலைஞனாய் இனிதான மனிதனாய் இன்றுவரை கலைப்பணியாற்றி வருபவர் சங்கீதரத்தினம் க.ப.சின்னராசா. கடந்த எண்பது ஆண்டுகளாக ஈழத்தில் ஒப்பற்ற கலைப் பணியாற்றி வரும் வட இலங்கை சங்கீத சபையின் மிருதங்கத் துறையில் “கலாவித்தகா” பட்டம்பெற்ற முதலாவது மாணவர் என்னும் பெருமைகொண்ட இவர் லயத் துறை மாணவர்களுக்கு அறிவு புகட்டத் “தக்கதோர” ஆசிரியராய் இன்றுவரை பணிபுரிந்து வருகின்றார்.

அமரர்களான கணபதியார் பண்டாரம் நாகமுத்து தம்பதியரின் மகனாக 18.07.1934 அன்று யாழ்.மாவட்டத்தின் வடபால் அமைந்துள்ள மயிலிட்டி என்னும் ஊரில் கலைக்குடும்பத்தில் இவர் பிறந்தார். சிறு வயதில் வட்டுக்கோட்டை தம்பிராசா என்பவரிடம் மிருதங்கக் கலையைக் கற்கத் தொடங்கி அதன்பின்னர் அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து மிருதங்கக் கலைக்கு புத்துயிர் ஊட்டிக்கொண்டிருந்த தமிழகத்தின் மிருதங்க மேதையான சிதம்பரம் ஏ.எஸ். இராமநாதன் அவர்களிடம் எட்டு ஆண்டுகள் வரன் முறையாக மிருதங்கக் கலையைக் கற்றுக்கொண்டார்.

1964 இல் அரங்கேற்றம் கண்ட இவர் ஈழத்தின் திறன் கொண்ட இசையாளர்கள், நடனவியலாளர்கள் அனைவரது ஆற்றுகைகளிலும் துணைக் கருவியான மிருதங்கத்தை பக்குவமாக வாசித்துச் சிறந்த பக்க வாத்தியக் கலைஞர் என்னும் பெயரைப் பெற்றுக் கொண்டார். சிறந்த கலைஞராகப் புகழ் பெற்றிருந்த போதும் மேலும் கற்க வேண்டும் என்னும் ஆர்வத்தால் 1971 இல் கலாவித்தகர் என்னும் பட்டத்துக்கான பரீட்சைகளில் சிறப்புறச் சித்தியெய் தியும் 1974 இல் மருதனார்மடம் இராமநாதன் நுண்கலை பீடத்தில் நான்காண்டு கற்கை நெறியான சங்கீதரத்தினம் என்னும் பட்டத்துக்கான தேர்வுகளிலும் நற்பெறு பேறுகளைப் பெற்று முழுமைபெற்ற மிருதங்கக் கலைஞராகத் தன்னை உருவாக்கிக் கொண்டார்.

இதன்பின் 1976 இல் இருந்து 2008 வரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் யாழ்.பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்திலும் விரிவுரையாளராகவும் வருகை விரிவுரையாளராகவும் கடமையாற்றி பரீட்சகராகவும் செவ்வனே பணியாற்றியவர். இன்றுவரை வடஇலங்கை சங்கீத சபையின் மிருதங்கத் துறையில் அனுபவம் வாய்ந்த பரீட்சகராக அழைக்கப்பட்டு வருகின்றார்.

'தாரமும் குருவும் தலைவிதிப்படி' என்பார்கள். இது சின்னராசாவுக்கு மிகவும் பொருந்தும். இவருக்குச் சிறந்த குரு அமைந்தது போல ஏராளமான மாணவர்களுக்குச் சிறந்த குருவாக இவரும் திகழ்ந்து லயஞானமூட்டி வருகின்றார். முப்பதுக்கும் மேலான மாணவர்கள் இதுவரை இவரிடம் கற்று அரங்கேறியுள்ளனர். அத்துடன் நூற்றுக்கணக்கான மிருதங்கக் கலாவித்தகர்களையும் இதுவரையில் உருவாக்கியுள்ளார்.

இவர் சிறந்த ஆற்றுகையாளனாக, நல்லாசானாக மட்டுமல்லாமல் புதியன புனையும் வல்லமை கொண்டவராகவும் இருப்பதே இவரது தனித்துவப் பண்பாகும். தனது தமிழ்மொழி அறிவின் பயனால் ஏராளமான கீர்த்தனைகளை இயற்றி “விநாயகர் மகத்துவம்” என்னும் பெயரில் நூலாகவும் ஒலிப்பதிவாகவும் வெளியிட்டுள்ளார். அத்துடன் ஒவ்வொரு அரங்கேற்றத்திலும் மிக நுட்பமான கணக்கு முறைமைகளை பாடகருக்கும் ஏனைய கருவியாளர் களுக்கும் புதிது புதிதாக அறிமுகம் செய்து கலைஞர் கள் அனைவருக்கும் லயஞானத்தை ஏற்படுத்தவல்ல “கணக்கு வழக்கு” துறையில் மிகுந்த அனுபவம் கொண்டவராகவும் விளங்கி வருகின்றார்.

இவரது ஆக்கத்திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இவரால் 27.05.2007 அன்று இணுவில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில் வெளியிடப்பட்ட “பல்லவி அமுதம்” என்னும் படைப்பைக் கூறமுடியும். இப் படைப்பானது நூலுடன் இணைந்த இறுவட்டாக வெளியிடப்பட்டது. ஓர் இசையாளன் தனது முழுத்திறனையும் அவையோர் முன்னிலையில் எடுத்துக்காட்டுவதற்காகத் தனது ஆற்றுகைப் பகுதியில் தெரிந்து கொள்ளும் இசைப்பகுதியே இராகம், தானம், பல்லவியாகும். நிறைவான இசை ஞானம் இல்லாத ஒருவரால் இதனை மேடையில் ஆற்றுகைப்படுத்த முடியாது. எமது சங்கீதத்தில் கற்பனைப்பகுதிகளை மிகவும் விரிவாகக் காட்ட வல்ல பகுதியாகவும் இராகம் தானம் பல்லவியே காணப் படுகின்றது. இதனைப் பாடுவது ஒருவரது இசைஞானத்தை வெளிப்படுத்தும் என்பது போல் இதனைப் புதிதாக இயற்றுதல் என்பது ஒருவரது அதி உச்ச இசைஞானத்தின் வெளிப்பாடு என்றே கூறலாம்.

ஐம்பத்தைந்து (55) விதமான பல்லவிகள் “பல்லவி அமுதம்” என்னும் நூல் வெளியீட்டில் இடம்பெற்றுள்ளன. இருபத்தைந்துக்கும் அதிகமான தாளங்களும் அறுபதிற்கும் அதிகமான இராகங்களும் பயன்படுத்தப்பட்டிருக்கும் இந்தப் படைப்பில் இராகமாலிகைப் பல்லவிகளும் தாள நடை வேறுபாடுகள் கொண்ட பல்லவிகளும் இடம்பெற்றுள்ளன. இவ்வெளியீடானது ஈழத்தின் இசை வரலாற்றில் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றது என்பது இசையாளர்கள், மாணவர்கள் அனைவரும் அறிந்த உண்மையாகும். அத்துடன் தமிழகத்தின் இசையாளர்கள் பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளது.



மாணவர்களாலும் ஏனைய கலைஞர்களாலும் விரும்பப்படும் மிருதங்க முதுகலைஞராக எம் முன்னே வாழ்ந்து வரும் சின்னராசாபல பட்டங்களையும் அரச விருதுகளையும் பெற்றுக்கொண்ட தற்பெருமை இல்லாத நற்கலைஞனாக வாழ்ந்து வருகின்றார்.

ஒரு மிருதங்கக் கலைஞன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை இவர் இவ்வாறு கூறுகின்றார். ”பாட்டிற்கு மிருதங்கம் வாசிக்கும் ஒருவர் பாடலை நன்கு கேட்டு அப்பாடல் தருகின்ற உணர்வைத் தானும் உணர்ந்து, சாகித்தியத்தின் தன்மைகளையும் விளங்கி, பாடலின் சுவை கெடாமல் பக்குவமாக வாசிக்க வேண்டுமே தவிர “தன்பாட்டுக்கு” வாசிக்கக் கூடாது. ஏனெனில் மிருதங்கமானது பக்கவாத்தியமே தவிர பிரதான வாத்தியம் அல்ல. அதேபோல நடனத்துக்கு வாசிக்கும் போதும் மிருதங்கத்தை “அடிக்காமல்” பக்குவமாக வாசித்தால் கேட்பதற்கும் பார்ப்பதற்கும் இதமாகவும் சுகமாகவும் இருக்கும்.” என்கிறார்.

**வசாவிளான் தவமைந்தன்**

உலகில் உள்ள லயக்கருவிகளுள் மிருதங்கமே செவிக்கினிய நாதம் தருகின்ற கருவியாகவும் அதிநுட்பம் வாய்ந்த ஜதிச்சொற்கட்டுக்கள் வாசிக்கப்படுகின்ற கருவியாகவும் காணப்படுகின்றது. இவ்வாறான தெய்வீகம் வாய்ந்த கருவியின் கலைஞனாகவும் ஆசிரியனாகவும் இருந்து இவரால் உருவாக்கப்பட்ட மாணவர்கள். பலர் ஈழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் இக்கலையை மென்மேலும் வளர்த்து வருகின்றனர். அத்துடன் சிதம்பரம் ஏ.எஸ். இராமநாதனால் ஈழத்தில் எழுச்சி கொண்ட மிருதங்கக் கலைமரபை இன்றுவரை பாதுகாத்துப் பேணி வருவோருள் முதன்மையான ஒருவராகவும் இவர் திகழ்கிறார். ✱

# குழந்தைகளுக்கு சிறந்த நிவாரணி ஓமம்

**ஓமம்**
**வேறுபெயர்-அசமோதகம்**
**தாவரவியற்பெயர்-** Carum Roxburghianum
**கரும்ரொக்ஸ்யேகியேனம்**
**குடும்பம்-** Umbelli Ferac
**அம்பெலிபெரே**
**சிங்களப்பெயர்-அசமோதகம்**
**சமஸ்கிருதப்பெயர்-யவானீகா**
**ஆங்கிலப் பெயர்-** Ajowan

இது செடிவகுப்புக்குரியது. விதையை வாயிலிட்டுச் சுவைக்க பிரத்தியேக மணமுண்டாகும். ஓமம் குழந்தை மருத்துவத்தில் முக்கியமான ஒரு மூலிகை. 'ஊதாரிப்பிள்ளைக்கு ஓமந்தான் கதி” என்று ஒரு பழ மொழியுண்டு . அதாவது இளைத்து மெலிந்து போன பிள்ளைக்கு ஓமம் சேர்ந்த மருந்து கொடுத்துத் தேற்ற வேண்டும் என்பது இதன் கருத்து.

ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைக்கு ஏற்படக் கூடிய பிரச்சினைகளில் மலச்சிக்கலும் ஒன்று. அதற்கு 1-2 தேக் கரண்டி அளவில் ஓமத்தை எடுத்து சிறிது நீர்விட்டு நன்கு அவித்து அந்த நீரில் ஒரு தேக் கரண்டி அளவில் பருகி வர மலச்சிக்கல் நீங்கும்.

அவ்விதமே குழந்தைகளில் ஏற்படும் வயிற்றுப் போக்கிற்கு 1-2 தேக் கரண்டி ஓமத்தை எடுத்து சட்டியில் இட்டு கருக வறுத்து பின்னர் நீர் விட்டு குடிநீர் செய்து அதில் ஒரு தேக்கரண்டி அளவில் எடுத்து சிறிது தேனும் சேர்த்து பருகிவர வயிற்றுப்போக்கைக் கட்டும்

ஓமம், கடுக்காய்தோல், சித்தரத்தை, திற்பனி சமஅளவில் எடுத்து இடித்துப்பொடி செய்து 200 மில்லிக்கிராம் அளவில் எடுத்து அதற்கு சமஅளவில் சீனி சேர்த்து காலை,மாலை சாப்பிட்டு வர புகை இருமல், தொண்டை எரிவு, குரல் கம்மல் என்பன தீரும்.

ஓமம், மிளகு இரண்டையும் சம அளவில் எடுத்து லேசாக வறுத்துபொடிசெய்து 1/2 -1 தேக்கரண்டி அளவில் எடுத்து தேன்விட்டு சாப்பிட்டுவர வயிறுப் பொருமல், வயிற்றுக் கடுப்பு, கழிச்சல் என்பன மாறும்.

**நலம்தரும் தெய்வீக மூலிகைகள்**



**கட்டுக் கொடி**
**தாவரவியற்பெயர்-** Cocculus Villosus
**(கொக்குலுசஸ் விலோசஸ்)**
**குடும்பம்-** Menisper Maceas
**மினிஸ்பேர் மேசியே**
**சிங்களப் பெயர்- ஹுணு கட்டியவெல்**
**சமஸ்கிருதப் பெயர்- கருடி**
**ஆங்கிலப் பெயர்-**Broom Creeper

இதில் சிறு கட்டுக் கொடி, பெருங்கட்டுக் கொடி என இருவகையுண்டு. நீரைக் கட்டுவதால் இது கட்டுக்கொடி என அழைக்கப்படும்.

இதன் இலைச் சாற்றுடன் சீனி சேர்த்துக் கொடுக்க சிறுநீர்எரிச்சல், சிறுநீர் பாயும் போது குத்தல் முதலியவை தீரும்.

இதன் இலைச் சாற்றைப் பிழிந்து நீரில் விட்டால் நீர் வெண்ணெய் போல இறுகித் திரளும்.

அதை எடுத்து கரப்பன், மற்றும் தோல் வியாதிகளுக்குப் பூசிவர சுகம் ஏற்படும்.

இலைச்சாற்றுக்குச் சிறிது இஞ்சிச்சாறும், சீனியும் சேர்த்து பித்தகுன்மம், வயிற்றெரிவு, வயிற்றுப் புகைச்சல் முதலியவற்றுக்குக் கொடுக்கக் குணம் ஏற்படும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 171

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | 6 | |
| 7 | | | 8 | | | | |
| 9 | | 10 | | | | | 11 |
| | | 12 | | | | 13 | |
| | 14 | | | | 15 | | |
| 16 | | | | 17 | | | |
| 18 | | | 19 | | | 20 | |
| 21 | | | | | 22 | | |

### இடமிருந்து வலம்

1.கர்ப்பிணிப் பெண்ணின் எதிர்பார்ப்பு இது.
7.காலை உணவுகளில் இதுவும் ஒன்று.
8.பெண்களின் மேல்சட்டை.
9.உருவம்
12. ஏகபத்தினி விரதன்
13.தலைவன்
14. புத்திரன்
15.பூ
16. இரண்டை இணைப்பது
17. இனம்/ குலம்
18.இரும்பு நலிவடைவது இதனால்
19.பெண்ணல்ல
20.ஒரேயளவான என்பதைக் குறிக்கும்
21.உதவி
22. விடாய்.

### மேலிருந்து கீழ்

1. ஒருவரின் பண்பு
2. மலையகத் தலைநகர்
3. ஆக்கல் கடவுள்
4. சூரியன்
5.பிழிந்த பின் மிஞ்சும் கழிவு
6. விதம்
10. பன்றி
11. இலங்கையில் புகழ்பூத்த வணக்கத்தலம்
13. பன்மையைக் குறிக்கும்
14. விரியும்
15.சந்திரன்
16.காலணி/ செருப்பு
17. நீள அளவு/ அலகு
19.நதி
20. கூட்டற்குறி.

அனுப்புபவர் பெயர்:.......................................

விலாசம்:.......................................

.......................................

கையொப்பம்:.......................................

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 171**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*

இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 27.07.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் துாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.

7.சொற்சிலம்பம்போட்டி இல.171 க்கான விடைகள் 31-07-2011 ஞாயிறு உதயனில் ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக் கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 169 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) சபர்மதி (5)சதா (7)கரி (8)கண்காட்சி (10)வாசகன். (12) தடி. (13)சம்பா (14) அல். (16)லவன். (17) ஆலா. (18)ஆம். (19)பகர்வு (21) பாண். (22)அன்று (23)விடுகாலி. (24)வாடல்.

### மேலிருந்து கீழ்

(1)சகவாசம் (2)பரிசம். (3)மகன். (4)திண் (5)சட்டி (6)தாசி (9)காதல். (11)கபாலம் (14)அன்பன் (15)குலாவுதல் (17)ஆர் (18)ஆண்டு (20)கறுவா. (21)பாவி. (22)அலி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 169 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **த.துாயனா,** மு.ஐயன்கன்குளம் அ.த.க.பா. புத்துவெட்டுவான்.

2 ஆம் பரிசு — **ஞா.நிலோன்,** 201/1 O.L.R அலன்டி, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்..

3 ஆம் பரிசு — **கே.இராஜகோபால்,** அடைக்கலம் தோட்டம், கந்த சுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.

4 ஆம் பரிசு — **மு.ஹேமசாலினி,** பலாலி வீதி, மடத்தடி, உரும்பிராய்.

5 ஆம் பரிசு — **நேசராஜ் வித்தியாசாகர்,** கிளி/ கிளிநொச்சி ம.வி. கிளிநொச்சி.

### பாராட்டுப் பெறுவோர்

**மூ.முத்துராஜா,** திகிரி லேன், தும்பளை, பருத்தித்துறை.

**எஸ்.எஸ்.பவானந்தன்,** சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.

**கா.தவராஜசுந்தரம்,** கிளி/ அக்கராயன் அ.த.க.பாடசாலை, கிளிநொச்சி.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# சித்திரா....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நல்ல சம்பந்தத்தை நீ விட்டிட்டாய் பிள்ளை'' என்று சித்திராவின் தாயார் ஆதங்கப்பட்டாள்.

சித்திரா இன்னமும் வரவில்லை. இந்தச் சுகந்தன் ஒரு டாக்டர்தான் அவரது அழகும் நடையுடை பாவனைகளும் பலரைக் கவரும் வகையில் நாகரிகமானவைதான். ஆனால் அவரின் அடுத்த பக்கம் பற்றியும் அவரின் செயற்பாடுகள் பற்றியும் அறிந்தவர்களுள் மல்லிகாவும் ஒருத்தி.

டாக்டர், இஞ்சினியர் எக்கவுண்டன்ட் என்றெல்லாம் பெரிய தொழில் தேர்ந்தும் அழகானவன், அறிவுள்ளவன், நல்லவன் என்றும் எண்ணிக் கொண்டு நல்ல மாப்பிள்ளை எனத் தீர்மானம் செய்யும் சமூகம். சுகந்தன் சித்திராவைக் காதலித்து ஏமாற்றிய உண்மை, அவளது சினேகிதியான மல்லிகாவுக்கு மாத்திரமே தெரிந்திருந்தது. பணத்துக்கும் பதவிக்கும் ஆசைப்படும் உலகம் குணத்துக்கு இடந்தராதிருப்பதை என்னென்பது? பட்டம் பதவி இவைகளுக்கு மேலாக நடத்தையிலும் குணத்திலும் மேன்மை பெற்ற ஒருவனையே மல்லிகா விரும்பினாள்.

சுகந்தனுக்கும் சித்திராவுக்கும் இடையே மலர்ந்த காதல் உறவின் நெருக்கத்தையும் அதனால் சித்திரா அவன் மீது கொண்டிருந்த உள்ளன்பின் கனதியையும் அவளின் சிநேகிதி என்ற வகையில் அறிந்தவள் என்பதால் சுகந்தனைத் திருமணம் செய்ய அவள் விரும்பவில்லை.

சித்திராவின் பின்னால் அவளது அழகில் மயங்கி அவளின் உடல் மீதே ஆசை கொண்டு அலைந்தவன். பொருள்; பணம் பதவிக்கு ஆசைப்பட்டு உயர்ந்த இடம் தேடிக் கல்யாணம் செய்ய ஆவலுற்றதால் சித்திரா மீதில் காதல் கொண்டவன் போல் ஆடிய நாடகம் நின்று போனது.

இந்த நிலையிலேதான் டாக்டரான மல்லிகாவை டாக்டரான சுகந்தன் பெண்கேட்டு வந்தபோது அவள் அவனை வெறுத்தாள். தாய் தந்தையரின் வற்புறுத்தலையும் ஏற்றுக்கொள்ளாமல் மணம் செய்ய மறுத்தாள். ஆனால் இன்றுவரை சித்திராவைக் காதலித்து ஏமாற்றிய சுகந்தனின் செய்கையைக் குறித்து மல்லிகா எவருடனும் விமர்சித்ததில்லை.

டாக்டரும் அழகனுமான சுகந்தன் மல்லிகாவுக்குக் கிட்டாமற்போனமையை மல்லிகாவுக்கு ஏற்பட்ட ஓர் துரதிஷ்டமாகச் சித்திராவின் தாயார் சிந்தித்து ஆதங்கப்பட்டபோது அவனைப் பற்றிய உண்மைகளைச் சொல்லி விடலாமா? என்றொரு அவசரம் அவளுக்குத் தோன்றியது. எனினும் மல்லிகா எதுவுமே பேசவில்லை.

சித்திராவுக்காக - இன்றுவரை அவள் அவன் மேல் கொண்டிருந்த அன்பின் புனிதத்தால் வேறெவரையும் மணம் செய்யாது பிரமச்சரியம் பூண்ட நிலையில், அவளின் உன்னத அன்புக்காக அவளின் நட்புக்காக எந்த உண்மையையும் எவரிடமும் சொல்ல மல்லிகா விரும்பவில்லை.

''ஏன் பிள்ளை அந்தக் சுகந்தனின் கலியாணத்தை வேண்டாமெண்டு சொன்னனீ?''

''அவரின் அம்மா உடனயே தாலிகட்ட வேணுமெண்டு அவசரப்படுத்திச்சினம். அதாலதான் நான் மாட்டன் எண்டு சொன்னனான்'' என்றுசொல்லி உண்மையை மறைத்துக்கொண்டே, அந்த உரையாடலுக்கு முற்றுப்புள்ளி வைக்க எண்ணியவளாய்

''சித்திரா! எங்க தூரத்துக்கோ போனவ?'' என்று விசாரித்தபடி கதிரையை விட்டு எழுந்து உடனேயே அங்கிருந்து வெளியேற எண்ணினாள்.

உண்மைகளோ அழியாத பல பக்கங்களைக் கொண்டது. ஒரு திருமணத்தின்போது அதன் எல்லாப் பக்கங்களையும் தெரிந்து கொண்டபின் ஒருதலைப் பட்சமாக முடிவெடுப்பது இயலாததாகி விடுகிறது. மல்லிகாவின் நிலையும் அதுவாகவே இருந்தது.

சித்திராவின் ஒருதலைப் பட்சமான காதலைச் சிந்திப்பதா? அல்லது குமாரைக் குறித்த ஒரு சில உண்மைகளை மாத்திரம் தெரிந்து கொண்டவர்களின் ஒரு தலைப்பட்சமான தீர்மானங்களை ஏற்றுக் கொள்வதா? இருதலைக் கொள்ளியாகத் தவித்தவள் அவள். தான் கொண்ட முடிவின் மீது இறுக்கமாகவே இருக்கிறாள்.

மல்லிகா, சித்திராவின் தாயாரிடம் விடைபெற்று வெளியேற முயன்றபோது வீட்டுக்குட் பிரவேசித்த சித்திரா, மல்லிகாவைக் கண்டதும் ஆவலோடு ஓடி வந்தாள். இருவரும் ஒருவரையொருவர் அன்போடு தழுவிக் கொண்டனர்.

சிறிது நேர உறவு உரையாடலோடு, சுகந்தன் அண்மையில் செய்து கொண்ட டாக்டர் அம்மாவுடனான திருமணம் பற்றிய பேச்சு அங்கே எழுந்தது. அந்தத் திருமணமும் இடைநடுவில் சுகந்தனது மறுபக்கத்தை புரட்டியதால் சிதைந்து போன செய்தியைச் சித்திரா வேதனையோடு எடுத்துச் சொன்னாள். அதனைக் கேட்ட மல்லிகாவின் உள்ளம் வேதனைப்பட்டது.

என்னதான் படிப்பு, பதவி, பணம் என்பவை சேர்ந்திருந்தாலும் பண்பும் நற்குணமும் அன்பும் செறிந்திராத உள்ளங்களும் அடுத்தவரை ஏமாற்றும் காதல் நாடகங்களால் தம்மையே ஏமாற்றிய நெஞ்சங்களும் உண்மைகளின் வலிமையால் என்றும் துன்பத்தையே தொடரப் போகின்றன.

இத்தனை வயதின் பின்னரும் தன் பெற்றோர், சகோதரர்கள் மீது கொண்ட பற்றும் பாசமும் அவர்களை வாழ வைக்க வேண்டும் என்ற விருப்பமும் கொண்ட தியாகனையே இப்பொழுது மல்லிகா விரும்பினாள்.

அவள் மீதில் அவன் கொண்ட காதலின் ஆழத்தை அவனது சுயநலமற்ற செய்கைகளால் அறிந்திருந்தாள். அவன் தனது கடமைகளில் கொண்ட பற்றும் பண்பும் செயலும் தெரிந்தவள். அவனது சகோதரிகளுக்காகத் தன்னையே அர்ப்பணித்து அவன் செய்யும் தியாகத்துக்கான காலத்தைக் கணக்கெடுக்காமல் அவனுக்காகக் காத்திருக்கிறாள்.

தியாகனின் எல்லாப்பக்கங்களும் படிக்கப்பட்டு விட்டதான நீண்ட பயணத்தில் மல்லிகாவின் திருமணம் சிறப்புற நிறைவேற ஆயத்தமாகியுள்ளது. சித்திராவுக்கும் மல்லிகாவின் பாதையே புனிதமானதாகப் புலப்பட்டது. திருமணத்துக்கு முன்னராக எல்லாப் பக்கங்களையும் அறியும் வகையில் பழகும் ஒருவரைத் தேடுதல் என்பது மல்லிகாவுக்குக் கிடைத்தது போல் யாவருக்குமே கிடைத்துவிடும் அதிஸ்டமல்லவே.

சித்திரா இப்பொழுது அத்தகைய ஒரு காதலனுக்காக அல்ல, ஒரு கணவனுக்காகவே காத்திருக்கிறாள்.

எல்லோருமே சுகந்தனைப் போல் இருக்கப் போவதில்லையே! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 26

# தொற்றுநோய்க்கு சிகிச்சை என்ன?

*எனது வயது 32. ஆண். எனக்குச் சிறுநீர் வழியினூடாக மஞ்சள் நிறமான திரவம் வெளியேறுகிறது. எனக்கு ஏதாவது பாலியல் நோய்கள் தொற்றியிருக்குமோ என்று பயமாக இருக்கிறது. நான் இப்பொழுது என்ன செய்வது?*

ப.நிரஞ்சன், கைதடி.

பலருடன் பாதுகாப்பாற்ற உடலுறவு கொள்வதன் மூலமாகவோ அல்லது அப்படியான ஒருவரின் கணவன் அல்லது மனைவியாக இருப்பதன் மூலமாகவோ பாலியல் தொற்றுநோய்கள் உங்களுக்கு ஏற்படலாம். எய்ட்ஸ் போன்ற நோய்கள் உங்கள் குருதி நோய்த் தொற்றுள்ளவரின் குருதியுடன் கலப்பதனாலும் ஏற்படலாம். பாலியல் நோய்த் தொற்று ஏற்படும் அனைவருக்கும் உடனடியாக அறிகுறிகள் தோன்றும் என்று கூற முடியாது. ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு தனிநபருக்கும் அறிகுறிகள் தோன்றுவதற்கு எடுக்கும் காலம் (நோயரும்பு காலம்) வேறுபடும். அநேகமாகப் பின்வரும் அறிகுறிகள் காணப்படலாம்.

* சிறுநீர் வழியினூடாக / பிறப்புறுப்பினூடாக அதிகரித்த அளவிலும் மாறுபட்ட நிறம் மற்றும் மணத்துடனும் திரவம் வெளியேறல். அவ்விடத்தில் அரிப்பு மற்றும் நோவுடன் கூடிய அல்லது நோவு இல்லாத புண்கள் ஏற்படலாம்.

* அடி வயிற்று நோ, சிறுநீர் கழிக்கும்போது எரிவு. ஆனால் HIV தொற்று ஏற்படுபவருக்குச் சாதாரணமாக மேற்கூறிய அறிகுறிகள் காணப்படுவதில்லை. தொற்று ஏற்பட்டு 2-8 கிழமைகளுக்குப் பின்பே அறிகுறிகள் தோன்றும். அநேகமானோருக்கு எவ்வித அறிகுறிகளும் இருப்பதில்லை. சிலருக்குக் காய்ச்சல், மூட்டு நோ, தசை நோ, களைப்பு, தொண்டை அழற்சி, நெறி போடுதல் போன்ற பொதுவான அறிகுறிகள் காணப்படலாம்.

உங்கள் நடத்தையின் காரணமாகவோ அல்லது தொழில் காரணமாகவோ உங்களுக்கு எய்ட்ஸோ அல்லது ஏனைய பாலியல் தொற்று நோய்களோ ஏற்பட்டிருக்கும் என்ற சந்தேகம் ஏற்பட்டால் நீங்கள் உடனடியாக நாட்டின் எந்தப் பாகத்திலும் உள்ள பாலியல் தொற்று நோய் சிகிச்சை நிலையத்துக்குச் சென்று உங்கள் பிரச்சினை குறித்து ஆலோசித்துத் தீர்வு காண முடியும்.

யாழ்ப்பாணத்தில் பாலியல் தொற்று நோய்ச் சிகிச்சை நிலையம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அறை இல. 33 இல் அமைந்துள்ளது. நீங்கள் அங்கு சென்று ஆலோசனையோ சிகிச்சையோ பெறுவதற்கு வேறு வைத்தியர்களின் சிபாரிசு தேவையில்லை. நீங்கள் நேரடியாகவே அறை இல. 33 இற்குச் சென்று அங்கு உள்ள வைத்திய அதிகாரியிடம் உங்கள் பிரச்சினையைப் பற்றி உரையாடலாம். அல்லது நீங்கள் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவிலோ அல்லது வேறு எந்த அரசினர் வைத்தியசாலையிலோ உள்ள வைத்தியரிடம் உங்கள் பிரச்சினை பற்றிக் கூறினால் அவர்கள் உங்களைச் சரியான முறையில் அறிவுறுத்தி இங்கு அனுப்பி வைப்பார்கள். இந்தச் சிகிச்சை நிலையம் ஞாயிற்றுக்கிழமை, பொது விடுமுறை தவிர்ந்த வார நாள்களில் மு.ப. 8 - பி.ப. 3.30 வரையும் சனிக்கிழமைகளில் மு.ப. 8.00 - நண்பகல் 12.00 மணி வரையும் திறந்திருக்கும்.

நீங்கள் இங்கு வருவதன் மூலம் உங்களது பிரச்சினைக்குச் சரியான முறையில் தீர்வு காண முடிகிறது. நீங்கள் தெரிவிக்கும் ஒவ்வொரு தகவலும் உங்களைப் பற்றிய விவரமும் மிகவும் இரகசியமான முறையில் பேணப்படும். வேறு எவருக்கும் இந்தத் தகவல்கள் பரவிவிடுமோ என்று நீங்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

இங்கு உங்கள் பிரச்சினை பற்றித் தேவையான தகவல்களையும் ஆலோசனைகளையும் வைத்திய அதிகாரி கூறுவார். அதன் பின்பு உங்களுக்குப் பாலியல் நோய்த் தொற்று ஏற்பட்டிருக்கிறதா என்று அறிவதற்கான சோதனைகள் உங்கள் பூரண அனுமதியை பெற்றபின்பே செய்யப்படும். சோதனை முடிவுகளை எவ்வித தாமதமும் இன்றிப் பெற்றுக் கொள்ளலாம்.

உங்களுக்கு நோய்த்தொற்று ஏற்பட்டிருந்தால் அடுத்து என்ன செய்வது என்பது தொடர்பான சரியான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

சில நோய்களுக்கு (உ+ம்: சிபிலிசு, கோனோரியா) உரிய மருந்துகள் தரப்படும். அவற்றை ஒழுங்காகப் பாவித்தால் நீங்கள் பூரணமாகக் குணமடைய முடியும்.

HIV போன்ற நோய்களுக்கு அதனை உறுதிப்படுத்துவதற்கு மேலும் தொடர்ச்சியான சோதனைகள் செய்யப்படும். நோய் உறுதிப்படுத்தப்பட்டவர்களுக்கு இங்கு ஆலோசனைகள், நோய் நிலைமையை அறிவதற்குத் தொடர்ச்சியான சோதனைகள் மருத்துவக் கவனிப்பு மற்றும் அவர்களுக்குத் தேவையான ஆதரவு போன்றவை வழங்கப்படுகின்றன.

எனவே நீங்கள் எவ்வித தயக்கமும் இன்றி பாலியல் தொற்று நோய்கள் சிகிச்சை நிலையத்துக்கு வருவதன் மூலம் உங்கள் பிரச்சினைக்கு உரிய சரியான தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**டாக்டர் R.ராமவித்யா,**
**நீரிழிவு நிலையம், யாழ்.போதனா வைத்தியசாலை.**

---

*எனக்குப் பல வருடங்களாகக் கடுமையான வேலைகள் செய்யும் பொழுது உடம்பு நோ ஏற்படும் தன்மை காணப்படுகிறது. இந்த நோயை மாற்றுவதற்கு என்ன செய்ய வேண்டும்?*

எஸ். தவமணி, சுன்னாகம்.

வலி என்பது ஒரு வேதனையளிக்கும் உணர்வாகும். இது உடலில் ஏற்படும் காயம் அல்லது என்பு மற்றும் தசைகளில் ஏற்படும் பிரச்சினை காரணமாக உருவாகிறது. வலி உண்மையில் எமது உடலால் ஏற்படுத்தப்படும் தற்காப்புப் பொறிமுறையாகும். எடுத்துக்காட்டாக எம்மை அறியாமல் நாம் ஒரு முள்ளின் மீது கால் வைக்கும்போது ஏற்படும் வலி காரணமாக உடனடியாகக் காலை எடுக்கின்றோம். இதனால் எமது காலுக்கு ஏற்படவிருந்த மேலதிக பாதிப்புத் தவிர்க்கப்படுகிறது.

வலியைத் தாங்கும் தன்மை ஒவ்வொரு தனிநபரிடையேயும் வேறுபடுகின்றது. உதாரணமாக ஒரே அளவு வலியை ஒரு வயதுவந்தவர் தாங்கும் தன்மை சிறுவர்களிடம் இருந்து வேறுபடுகிறது.

சாதாரணமாகத் தசைப்பிடிப்பு, மூட்டு நோ போன்றன பொதுவாக அதிக வேலை செய்த பின்னரே உருவாகின்றன. இவை சிறுது நேர ஓய்வின் பின்னர் குணமாகி விடும். இவ்வாறான சிறு வலிகளுக்குச் சக்தி வாய்ந்த வலி நிவாரணிகளை நீண்டகாலம் பாவித்தல், சிறுநீரகக் கோளாறு, வயிற்றுப்புண் போன்ற விரும்பத்தகாத விளைவுகளுக்கு வழி வகுக்கும். எனவே இவ்வாறான சாதாரண வலிகள் கூடும்போது பரசிற்றமோல் வகை மாத்திரைகளைப் பாவிக்கலாம். ஆனால் சக்தி வாய்ந்த வலி நிவாரணிகளை வைத்திய ஆலோசனையின் பின்னரே பாவிக்க வேண்டும்.

மூட்டுவாதம், முள்ளந்தண்டு என்புகளில் ஏற்படும் பாதிப்புக் காரணமாக உருவாகும் நாரிக்குத்து போன்றவற்றுக்கு வலி நிவாரணிகளைப் பாவித்தல் தற்காலிகமாக வலியைக் குணப்படுத்துமே தவிர வலிக்குக் காரணமான நோயைக் குணப்படுத்தாது. இவ்வாறான கடுமையான வலிகளுக்கு வைத்திய ஆலோசனைப்படி பரிசோதனைகளின் பின்னர் வலி நிவாரணிகளுடன் சேர்ந்து நோய்க்குரிய மருந்துகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். *

**டாக்டர் எஸ். தனிஷன்,**
**நீரிழிவு நிலையம், யாழ்.போதனா வைத்தியசாலை.**

---

# மதம் ஒரு மருத்துவப் பெருஞ்சுடர் 11

*மதம் ஒரு மருத்துவப் பெருஞ்சுடர் என்ற இந்தத் தொடர் கட்டுரையின் கருத்தோட்டங்களுடன் நீங்கள் பூரணமாக உடன்பட்டால் "A" எனவும் ஓரளவு உடன்பாட்டால் "B" எனவும் உடன்படவில்லை எனில் "C" எனவும் இக்கருத்துக்களை எதிர்ப்பதாயின் "D" எனவும் ரைப் செய்து 0773604094 என்ற இலக்கத்துக்கு SMS செய்துவிடுங்கள்.*

தற்போதைய காலகட்டத்திலே அழிவின் விளிம்பில் இருக்கும் எமது கலாசாரம், மொழி, மத நம்பிக்கை என்பவற்றைக் காப்பாற்றி ஓர் ஆரோக்கியமான எதிர்காலத்தை நோக்கி நகர்வதற்கு நாம் என்ன செய்யப் போகின்றோம்? துயரப்பட்டுக் கொண்டிருக்க இது நேரமல்ல.

இத்தனை துயரங்களினூடும் ஒரு மகிழ்ச்சிகரமான விடயம் வெள்ளிடைமலையாக வெளிச்சமாகத் தெரிகிறது. எமது பகுதிகளில் இயங்கும் மத நிறுவனங்களும் கோயில் நிர்வாக சபைகளும் 30 வருட யுத்தத்துக்குப் பின்னரும் தமது கட்டமைப்புக் குன்றாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த அமைப்புகள் பல பொதுச் சேவைகளையும், சுகாதார சேவைகளையும், தமது சமயத் தொண்டுகளுக்கு மேலாகச் செய்து வருகின்றன. இந்த விடயத்தில் கிறிஸ்தவ மத நிறுவங்களின் பங்களிப்பு ஒப்பீட்டளவில் மிகவும் கூடுதலாகக் காணப்படுகிறது. மக்களின் மன அமைதிக்கான, ஆறுதலுக்கான நிலையங்களாக மட்டும் இந்தக் கோயில்களும் மத நிறு வனங்களும் விளங்கவில்லை. மக்களை நல்வழிப்படுத்தி சுகதேகிகளாக வாழும் மார்க்கங்களையும் இவை சொல்லி நிற்கின்றன.

மதமும் மருத்துவமும் வரலாற்றுக் காலத்தில் இருந்ததிலும்பார்க்க இன்னும் பல மடங்கு நெருக்கமாகச் செயற்பட வேண்டிய ஒரு வரலாற்றுத் தேவை தற்பொழுது எழுந்திருக்கிறது. இதற்குச் செயலுருவம் கொடுக்க நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதை சிந்திப்போம். இதற்கான சில ஆரம்பப் பொறிமுறைகளை இங்கு முன்வைக்கின்றேன்.

1.ஒவ்வொரு மத நிறுவனங்களும் கோயில் நிர்வாக சபைகளும் தமது பகுதிகளின் சுகாதார விழிப்புணர்வு நிகழ்வுகளை ஒழுங்கு செய்யலாம். இங்கு பொதுமக்களின் குருதி அமுக்கம் சோதித்தல் , குருதியில் உள்ள சீனியின் அளவைச் சோதித்தல் போன்றவற்றையும் செய்ய முடியும் . இதற்கான அனுசரணைகளையும் ஆலோசனைகளையும் நீரிழிவுச் சிகிச்சை நிலையம் வழங்கத் தயாராக இருக்கிறது. இங்கு இனங்காணப்படும் நோயாளர்களின் சிகிச்சைகளுக்கும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

2.மத நிறுவனங்கள் ஒவ்வொன்றும் மருத்துவமனைகளின் ஒவ்வொரு விடுதியின் பராமரிப்புக்களைப் பொறுப்பெடுக்க முடியும். இதன்மூலம் மருத்துவமனைகளில் நோயாளர்களின் வசதிகளை மேம்படுத்த முடியும். அத்துடன் விருத்திச் சுற்றாடல்களை மனதுக்கு அமைதியை ஏற்படுத்தக் கூடிய வகையில் மாற்றி அமைப்பதற்கு இது உதவியாக இருக்கும். இது தயக்கமின்றி மக்கள் வைத்தியசாலைகளில் தங்கிச் சிகிச்சை பெறுவதை ஊக்குவிப்பதுடன் நோயாளர்கள் சுகப்படும் வீதத்தையும் அதிகரிக்கும்.

3. கலாசார சீரழிவுகளினால் எமது மக்கள் பெரும் ஆபத்துக்களைச் சந்தித்து நிற்கிறார்கள். குடிவகைகளுக்கு அடிமையாகுதல், இளம்வயதில் (Teenage) கர்ப்பம் தரித்தல், சட்ட விரோதக் கருச்சிதைவு, தற்கொலை முயற்சிகள், மன அழுத்தம், பாலியல் சம்பந்தமான நோய்களின் பரம்பல் போன்ற பெரும் பிரச்சினைகளிலிருந்து மக்களை மீட்க மத அமைப்புக்கள் பெரும் பங்காற்ற முடியும். மக்களுக்கு மனித நேயம் பற்றியும், நற்பண்புகள் பற்றியும், எமது கலாசாரத்தின் முக்கியத்துவம் பற்றியும் போதிக்க வேண்டும். சமயச் சொற்பொழிவுகளிலே கைதேர்ந்தவர்கள் பலர் எம் மத்தியிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த முயற்சிக்குக் கைகொடுப்பார்கள். சமயச் சொற்பொழிவுகளின்போது சொல்லப்படும் கருத்துக்கள் மக்களின் பகுத்தறிவால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய கருத்துக்களாகவும் சரியான கருத்துக்களாகவும் இருந்தால் மட்டுமே அது மக்களைச் சென்றடையும்.

4. கோயில் நிர்வாக சபைகளின் பெரியவர்களும் மத நிறுவனங்களின் பெரியவர்களும் வைத்தியர்களுக்கும் வைத்தியசாலை நிர்வாகங்களுக்கும் ஓர் ஆலோசனைச் சபையாக இயங்க முடியும். பொதுமக்களுக்கும் வைத்தியத் துறைக்கும் இடையே ஒரு பாலமாகச் செயற்பட்டு நோயாளர்களின் கவனிப்பை மேம்படுத்துவதற்கு உதவமுடியும்.

மேலைத்தேய நாடுகளின் வைத்தியத் துறையுடன் நாம் எமது வைத்தியத் துறையை ஒப்பிட்டுப் பார்ப்போமாயின் நாம் ஐந்தில் ஒரு பங்கு ஆளணிகளுடனும் ஐந்தில் ஒரு பங்கு வசதிகளுடனும்தான் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். அத்துடன் நாம் பராமரித்துக் கொண்டிருக்கும் சமுதாயம் நொந்துபோன, ஒரு நோய்வாய்ப்பட்டுப் போன சமுதாயம். இந்த நிலையில் மத நிறுவனங்களின் பேராதரவும் ஊக்கமும் எமக்குக் கிடைக்கப்பெறுமாயின் எமது மருத்துவக் கவனிப்புமுறை பல படிகள் முன்னேறும். பல சிக்கல்களில் சிக்கியிருக்கும் எமது சமூகம் தலைநிமிரும். எம்முடன் இணைந்து செயற்பட விரும்பும் மத நிறுவனங்கள் எமது நீரிழிவுச் சிகிச்சை நிலையத்துடன் அல்லது 0773604094 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (தொடரும்)

**சி.சிவன்சுதன்,**
**வைத்திய நிபுணர்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை.**

**இதுவரை கிடைக்கப்பெற்ற SMS முடிவுகள்**

| | | |
|---|---|---|
| 'A' - 78 பேர் | - | 91.7% |
| 'B' - 4 பேர் | - | 4.7% |
| 'C' - 1 பேர் | - | 0.01% |
| 'D' - 3 பேர் | - | 3.52% |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேங்கை




விமர்சனம்

அரிவாள் கலாசாரம் நிறைந்த சண்டைப் படம்தான் வேங்கை. ஊரில் பெரிய ஆளாக இருக்கும் ராஜ்கிரன், அவரது மகன் தனுஷ், அந்த ஊரில் இருக்கும் பிரகாஷ்ராஜ் இந்த மூவருக்கும் இடையில் படத்தின் கதை நகர்கிறது. ராஜ்கிரனின் மகன் தன்னைப் போல் ரவுடி ஆக வேண்டும் என நினைத்துத் திருச்சிக்கு அனுப்பத் திட்டமிட்டு, அங்கு தொழிலதிபர் லிவிங்ஸ்டன் அலுவலகத்தில் பணியாற்ற தனுஷ் அனுப்பப்படுகின்றார். திருச்சியில் பஸ்ஸில் தமன்னாவைப் பார்த்த மாத்திரத்தில், சின்ன வயதில் தன்னுடன் பள்ளியில் படித்த ராதிகா எனக் கண்டுபிடித்து இருவருக்குமான நட்பு ஆரம்பித்துவிடுகிறது. தமன்னா விலக, தனுஷ் விரட்ட எனப் பல்வேறு குழப்பங்களுக்கிடையே இருவருக்கு மான காதல் காட்சி நகர்கிறது. ராஜ்கிரன் தயவில் எம்.எல். ஏயாக இருக்கும் பிரகாஷ்ராஜ் மணல் கொள்ளையில் அதிகம் சம்பாதித்து அதிக சொத்து வாங்குகிறார். இதைத் தட்டிக் கேட்ட ராஜ்கிரனுடன் மோதல் தொடங்கு கிறது. ராஜ்கிரனின் மகன் தனுஷை கொலை செய்வதற்கு அடி ஆள்களை ஏவி விடுகிறார் பிரகாஷ்ராஜ். ஆனால், அது தோல்வியில் முடிகிறது. இதனால் தனுஷ், பிரகாஷ்ராஜ் இருவரும் ஒருவரையொருவர் கொலை செய்ய சபதமெடுக்கிறார்கள். காட்சி நகர்கிறது.

காதல் காட்சியில் தனுஷ் தனியே தெரிகிறார். இந்தப் படத்தின் பலம் என்று பார்த்தால் படத்தின் கதை வேகமாகவும் விறுவிறுப்பாகவும் செல்வதுதான். அதே அரிவாள், டாடா சுபோ, வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டை என்று நாம் ஏற்கனவே பல படங்களில் பார்த்த காட்சிகளாக இருந்தாலும் இந்தப் படத்தில் வரும் மிடுக்குத் தனமான காட்சிகள் இளமைப் பட்டாளத்துக்கு உந்து சக்தியாக அமைந்து விடுகின்றன. அரிவாள் கையில் இருந்து கொண்டு சடசடவென்று மரத்தில் ஏறி அரிவாளை மரத்தின் மீது வைப்பது நன்றாக இருக்கிறது. இந்தப் படத்தின் இயக்குநர் ஹரியின் படங்களின் கதாநாயகர் பாத்திரத்தில் புத்திசாலித்தனமான அணுகுமுறை தனுஷுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. அதனைச் சரிவர ஏற்று நன்றாக நடித்திருக்கிறார். இந்தப் படத்தில் நடிக்கும் கதாநாயகி தமன்னாவுக்கு முக்கியமாக சொல்லும்படி காட்சிகள் அமையவில்லை.

ஆனால், நன்றாக நடித்திருக்கிறார். சூரியா நடித்த சிங்கம் படத்தின் சாயல் இருக்கிறது. அந்தப் படத்தின் இரண்டாம் பாகமோ என யோசிக்கும் அளவுக்கு படத்தின் காட்சிகள் நகர்கின்றன. பத்து நிமிடத்துக்கு ஒருமுறை வில்லன் செல்போனை தரையில் அடித்து உடைப்பார்.

ஆரம்பத்தில் வரும் தனுஷ் - தமன்னா காதல் காட்சிகளைப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. கஞ்சா கருப்பு நகைச்சுவைக் காட்சிகளை எடுக்கும்போது இயக்குநர் உதவி மனதில் குற்ற உணர்ச்சி வரவில்லைப்போலும். ஏனெனில் இப்படிக் கேவலமாக படத்தின் காட்சிகளை எடுக்கிறோம் என்று நினைக்கவில்லையா. மனிதர்களின் மனதில் உள்ள மென்மையான உணர்வுகள், அவர்களின் நல்ல குணங்கள் இயக்குநர் கண்ணுக்குத் தெரியாமல் போனது.

ஒருகிராமம் என்றால் அங்கே இருக்கிறவர்கள் அடிதடி, வெட்டுக்குத்து என்று ஈடுபடுவார்கள். வேறுவேலையே இருக்காது என்று நினைத்து சில காட்சிகளை எடுத்திருப்பது இந்தப் படத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாகும். இந்தப்படத்தில் வரும் அனைத்துப் பாடல்களையும் கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது. இசையமைப்பாளர் தேவி ஸ்ரீ பிரசாத்தின் இசையில் பாடல்களின் வரிகள் மனதைக் கொள்ளை கொள்கிறது. 'என்ன சொல்லப்போறே, புடிக்கலை, ஒரே ஒரு வார்த்தைக்காக' என்று ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரகத்தில் மனதைக் கவர்கின்றன. குறிப்பாக கார்த்திக்கின் குரலில் 'காலங்காத்தால' பாடல் பலரின் விருப்பப் பாடலாக அமைவதில் சந்தேகமில்லை. ஒரு படத்தின் வெற்றிக்கு பாடல்களும் துணைபோகின்றது. அந்த விதத்தில் இந்தப் படத்தில் வரும் பாடல்கள் அனைத்தும் இந்தப்படத்தின் வெற்றிக்குத் துணை போகும் என்பது உண்மை. ஒலிப் பதிவாளர் வெற்றியின் கமெராவும், வி.டி. விஜயனின் எடிட்டிங்கும் படத்தின் வேகத்துக்குப் பக்க பலமாகவுள்ளன. இளைஞர்களுக்குப் பொழுதுபோக்கான படம். தனுஷின் படங்களில் வித்தியாசமாக வெளிவர முயற்சி செய்தது இந்தப் படம். காட்சிகளை உருவத்துக்கு ஏற்ப மாற்றம் செய்யாமல் விட்டது மிகப்பெரிய பலவீனமாகும். ஹரியின் படங்களில் நடித்த சூரியா, விக்ரம் அந்தக் கதையின் பாத்திரங்களுக்கு ஒட்டி இருந்தார்கள். எனவேதான் ஹரியின் சண்டைப் படங்களில் வெற்றிக்கு உடல், மொழி மாற்றம் உறுதுணையாகி இருந்தது படத்துக்குப் பக்க பலமாகும். இந்தப் படத்தில் வரும் காட்சிகளுக்கு ஏற்ப தனுஷின் உடல் மொழி மாற்றம் பெரிதாக இல்லாததால் இந்தப் படத்தின் பலவீனத்துக்குக் காரணமாக அமைகிறது. ஹரி எதிர்பார்த்த சண்டைக் காட்சிப் படங்களில் வேங்கை எதிர்பார்த்ததை விடக் குறைவான வீச்சாக உள்ளது.

இந்தப் படத்தில் ஊர்வசி, சார்லி, பொன்னம்பலம், ஒய்.ஜி.ம... யம்மா, ஐஸ்வர்யா என நிறைய நடிகர் பட்டாளங்கள் நடித்...

- குமார்.

# களப் புற்றுநோய்

புற்றுநோய் விழிப்புணர்வுத் தொடர் 17

வடபகுதியில் மக்களிடையே புற்றுநோய் இப்போது வெகுவேகமாகப் பரவி வருகிறது. இந்த உயிர்க்கொல்லி நோயைக் குணமாக்குவதற்கான பல நவீன சிகிச்சை முறைகள் இப்போது அறிமுகமாகியுள்ளன. ஆனால் புற்றுநோயால் பாதிக்கப்படுவோர் பிந்திய நிலையிலேயே சிகிச்சைக்குச் செல்வதால், அதனைக் குணமாக்குவதில் வைத்தியப் பகுதியினர் பல சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகிறது. குடாநாட்டில் புற்றுநோய்க்கு நவீன சிகிச்சை முறைகளை அறிமுகப்படுத்தும் திட்டங்களுக்கு வேண்டிய இருநூறு (200) மில்லியன் ரூபாவைத் திரட்டும் இலக்குடன் காலி, தேவேந்திர முனையிலிருந்து பருத்தித்துறை வரை (TRAIL) அடிச்சுவடு பாதை நடை பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தக் காலப்பகுதியில் மக்களிடையே புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை உண்டாக்கும் பெருநோக்குடன் உதயனில் இக்கட்டுரைத் தொடர் வெளியிடப்படுகிறது.

(நேற்றைய தொடர்ச்சி)

**களப்புற்று நோயின் உருவாக்கம்**

ஏனைய புற்றுநோய்களைப் போலவே களத்தின் மேலணியிலும் பாதகமான காரணிகளின் தொடுகையினால் மாற்றங்கள் ஏற்பட்டு ஈற்றில் புற்றுநோய் உருவாகிறது. இப்புற்றுநோய் வளர்ச்சியடைவதால் களத்தின் உட் துவாரமானது பூரணமாக அடைபடும் நிலையை எய்தி உணவு விழுங்குவது தடைப்படும். இப்புற்றுநோய் அயலில் உள்ள நுரையீரல், குருதிக் கலங்களை ஊடுருவி மேலும் ஈரல், என்பு போன்ற அங்கங்களையும் அடைந்து புற்றுநோய் பல இடங்களுக்குப் பரவிய நிலையில் இறப்பை ஏற்படுத்தும் (படம்- 1).

**களப் புற்றுநோயின் அறிகுறிகள்**

* உணவு விழுங்குவதில் கடினத்தன்மை ஏற்படுதல். முதலில் திண்ம உணவுக்கும் பின்னர் திரவ உணவிற்கும் விழுங்குவதில் கஷ்டம் ஏற்படும்.
* உணவு விழுங்கும் போது எரிவு ஏற்படுதல்
* தொண்டையில் ஒட்டிக்கொள்வதைப் போன்ற உணர்வு ஏற்படுதல்
* அமிலத் தன்மையான அஜீரணம் ஏற்படுதல்
* நெஞ்சுவலி
* உமிழ் நீரையும் கூட விழுங்க முடியாத நிலை
* நீண்டகால குரல் மாற்றம்
* வரட்சியான இருமல்
* வாந்தியுடன் குருதி வெளியேறல்
* உடல் நிலை குறைவடைதல்

**நோயை இனம் காணல்**

இவ்வாறான அறிகுறிகள் காணப்படின் உடனே வைத்தியரை நாடவும். வைத்தியர் இந்த நோயை இனம் காண்பதற்காக சில விசேட பரிசோதனைகளை மேற்கொள்வார்.

* **பேரியம்(Barium) எக்ஸ் கதிர் படம்**

பேரியம் என்ற கதிர் ஊடுபுகாத பதார்த்தத்தை விழுங்கிக் கொண்டு இருக்கையில் இப்படம்



படம்: 1

எடுக்கப்படும். களத்தின் சுவரில் வளர்ச்சி இருப்பின் பேரியமானது கீழே செல்லுகையில் மெல்லிய தடிப்புடையதாகத் தென்படும். (படம்-2)

* **குழாய் மூலமாக களம் பரிசோதிக்கப்படல் (Endoscopy)**

கமரா பொருத்தப்பட்ட குழாயை வாயினூடாகச் செலுத்தி களப் பகுதியின் உள்மேலணியை துல்லியமாகப் பார்க்கப்படும். இதன்போது காணப்படும் ஏதாவது வளர்ச்சிகள் அல்லது புண்களில் இருந்து கல/ இழைய மாதிரி எடுக்கப்பட்டு நுணுக்குக்காட்டியின் உதவியுடன் புற்றுநோயானது உறுதிப்படுத்தப்படும். (படம்-3)



படம்: 2

* **கணினி ஸ்கான் (CT Scan)**

இப் பரிசோதனை மூலம் இப் புற்றுநோயின் அமைவிடம், பரவலடைந்த நிலை என்பன தெளிவாக அறிந்து கொள்ளப்படும். இவ்வாறான பரிசோதனை புற்றுநோயின் ஆரம்ப நிலையில் கதிர்வீச்சு கிசிச்சை திட்டமிடலுக்கு உதவி அளிக்கும்.

**களப் புற்றுநோயைத் தவிர்ப்பதற்கான வழிவகைகள்**

* புகைத்தல், மது அருந்துதல் என்பவற்றை தவிர்த்தல்.
* வெற்றிலை, பாக்கு, புகையிலை மெல்லுவதை தவிர்த்தல்
* மிகவும் சூடான பானம், பூஞ்சணம் பிடித்த உணவு, அதிக உப்பிட்ட உணவு மற்றும் கருகிய உணவுகளை தவிர்த்தல்.
* அதிக சுவையான பழங்கள், காய்கறிகளை உணவில் சேர்த்தல்
* உடல் நிறையைக் குறித்த அளவில் தினமும் உடற்பயிற்சி செய்வதன் மூலம் சீராகப் பேணல் (படம்-4).
* நாம் குடிக்கும் நிலத்தடி நீரில் நைத்திரேற்றுக்கள் அதிகரிக்கும் வழிகளை கட்டுப்படுத்துதல். விவசாயிகள் யூரியா உரப்பாவனையைக்குறைத்து மாற்றீடாக இயற்கைப் பசளைகளைப் பாவிப்பதை ஊக்குவித்தல்.


படம்: 3



படம்: 4

இவற்றைதவிர ஆரம்பத்திலேயே திண்ம உணவு உண்ணும் போது தடங்கல் ஏற்படுமிடத்து வைத்தியரை நாடி மேற்குறித்த சோதனைகளைச் செய்வதன் மூலம் ஓரளவு ஆரம்ப நிலையில்புற்று நோயைக் கண்டு பிடிப்பதால் இந்த நோயைக் கட்டுப்பாட்டுக்குள்வைத்திருக்கலாம்.

புற்றுநோய் வைத்திய நிபுணர்
என்.ஜெயக்குமாரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப சச்சரவுகளைப் பயன்படுத்தி தவறுகள் புரிவது பிழையாகும்



-சஞ்சீவன்,
கிளிநொச்சி.

தற்செயலாக இடம்பெறும் சம்பவங்களும் விவாதங்களுமே குடும்பத்தில் பிளவுகள் ஏற்படக் காரணமாக அமைகின்றன. இருந்தாலும் இவற்றில் பெரிதும் பாதிப்படைவது பெண்களாகத்தான் இருக்கிறார்கள்.

இந்தப் பிளவுகளுக்குப் பெண்கள் ஒரு விதத்தில் காரணமாக அமைந்தாலும் வாழ்க்கை முழுதும் தண்டனைகளை அனுபவித்துக்கொண்டு துன்பப்படுபவர்கள் பெண்கள் என்று தான் கூற வேண்டும். இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்கள் எதிர்காலத்தில் அல்லது நிகழ்காலத்தில் சமூகத்தின் கண்ணோட்டத்தில் விழித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

ஏனெனில் சமூகத்தின் பார்வையில் பெண்கள் எப்பொழுதும் தனியான ஓர் நோக்குடன் கணிக்கப்படுபவர்களாகவே இருக்கின்றார்கள்.

இந்தப் பார்வையில் அவளின் நடத்தைகள், செயற்பாடுகள் உன்னிப்பாக அவதானிக்கப்படுகிறது. திருமணத்தின் பின் வாழ்விழந்த பெண்கள் தனக்கென எவற்றைச் செய்யலாம் எனும் மனோநிலை இல்லாமல் சமுதாயத்தின் போக்கின்படி வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகின்றனர்.

பல வழிகளிலும் பாதிப்படைந்த பெண் தனது எதிர்கால வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொள்ளப் போகிறாள்? தேவைகளுக்கு கரம் கொடுப்போர் யார்? என்பதைப் பற்றியெல்லாம் சிந்திப்பது கிடையாது. '' ஒருத்தனுக்கு ஒருத்தி என்பதெல்லாம் பெண்களுக்கு மட்டும் தான் பொருந்தும். ஆனால் ஆண்கள் தமது புதுவாழ்வை இன்னொருத்தியுடன் தொடங்குவதற்கும் சுதந்திரமாக நடமாடுவதற்கும் தயங்குவது கிடையாது. இதனை சமுதாயமும் பெரிதாக எடுத்துக் கொள்வது இல்லை. ஏனென்றால் அவன் ஆண்மகன் என்பதுதான் சமூகத்தின் கருத்து.

தவறு யார் செய்தாலும் தண்டணைக்கு உள்ளாக்கப்படவேண்டும். குடும்பச் சச்சரவுகளினால் வாழ்விழந்து அநாதரவாகும் பெண் மட்டும் தண்டணை அனுபவிப்பதில் என்ன நியாயம்?

சமூகத்தின் பார்வையில் ஏன் பெண்கள் ஒருவிதமாகவும், ஆண்கள் ஒருவிதமாகவும் நோக்கப்படுகின்றனர். திருமண வாழ்க்கையின் பின் பிளவு ஏற்பட்டு மிகவும் மனவேதனையுடன் எதிர்காலம் என்ன ஆகுமோ? எனும் சிந்தனையுடன் இருக்கும் பெண்களுக்கு தோள் கொடுத்து துணைபுரிந்து உதவிகள் செய்தால் பாதிப்படைந்த பெண்களும் தவறான பாதைகளுக்குச் செல்ல மாட் டார்கள்.

அதுமட்டுமன்றி சமூகத்தில் உள்ளவர்கள் என்னைப்பற்றிக் கதைக்கிறார்களே; நான் அதே தவறைச் செய்தால் என்ன? என்னும் மனநிலை சாதாரணமாக எந்தப் பெண்ணுக்கும் தோன்றும். அதற்கு சமூகம் வழி சமைத்துக் கொடுக்கக்கூடாது.

புரிந்துணர்வும், விட்டுக்கொடுக்கும் தன்மையும் இல்லாத திருமண வாழ்க்கை எப்பொழுதும் சச்சரவைத் தேடித்தருவதுடன் இதன் தாக்கம் இருவரையும் சார்ந்தது. எனவே சமூகத்தின் கண்ணோட்டம் எப்போதும் இருபக்கமும் இருப்பது அவசியமாகின்றது என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொண்டு நடத்தல் வேண்டும்.




மூப்பு இளமை எதுவுமின்றி
வாழ்வதை சிதைத்து
சாவதை அணைத்து
உறவுகளை உதறிவிட்டு
மரணத்தின் வாசல் தேடும் மானுடமே!
ஏன் இந்த விபரீத முடிவு???
கவலைக்கும் தோல்விக்கும்
தற்கொலை தான் முடிவென்றால்
மானுடமே இல்லை இவ்வுலகில்
தோல்விதான் வெற்றியின் படிக்கல்
என்றனர் முன்னோர்கள் - யாவரும்
தோல்வியைக் கண்டு பயந்து
சாவதை அணைத்தால்
மரணமே மலிந்து போகும் இப்பூமியில்
யுத்தத்தின் சத்தத்தால் உயிரை இழந்து
உறவுகளைப் பிரிந்து
ஊமையாய் உறைந்து போன
மானிடரின் வாழ்வு தனில்
இடிமேல் இடியாக
தற்கொலைச் சாவுகள் ஏராளம்
ஏன் இந்தக் கோலம்...???
மானுட வாழ்வதனை
மகிழ்ச்சியாய் வாழ்ந்து
சுற்றியுள்ள யாவரையும்
இன்பமாய் வாழவைத்து
பாரினை வென்றே
படைத்திடு சரித்திரம்

-தர்மாரேவதி,
மாங்குளப்பிட்டி.

# குடும்ப நலத் தாதியர்களின் மகத்தான பணிகள்



-சோபியா,
மானிப்பாய்.

மருத்துவத் துறையில் மிகவும் மகத்தான சேவைகளைப் புரிபவர்கள் ''மிற்வைப்'' என அழைக்கப்படும் குடும்பநலத் தாதியர்கள்.

ஒவ்வொரு கர்ப்பிணிப்பெண்ணும் குழந்தையைக் கருத்தரித்த நாள்முதல் குழந்தையைப் பிரசவிக்கும் நாள்வரை இந்தத் தாதியர்களின் சேவையும், பங்களிப்பும் வைத்தியருடைய பங்களிப்பை விட சற்று அதிகம் என்றுதான் கூற வேண்டும். ஏனெனில் மக்களுடன் ஒன்றிணைந்து ஒரு குடும்பம் போல் சேவையாற்றுவர்கள் இவர்கள் தான். பெண்கள் பொறுமையானவர்கள், அன்பானவர்கள், இரக்கமுடையவர்கள் என்பதால் பெண்கள் தான் குடும்பநலத் தாதியர்களாக இருக்கத் தகுதியுடையவர்களாகத் தெரிவு செய்யபட்டார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் வாழும் மக்களின் சிறந்த ஆரோக்கியத்தைப் பேணும் பொறுப்பு இவர்களின் கைகளில் தங்கியுள்ளது. வீடு வீடாகச் சென்று கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்களின் ஆரோக் கியம் சார்ந்த விடயங்களைக் கவனிப்பதுடன் ஆலோசனைகளையும் வழங்கவேண்டிய பொறுப்புகளையும் இவர்களே செய்து வருகின்றனர்.

இத்தகைய குடும்பநலத் தாதியர்கள் சமூகத்தால் பெரிதும் மதிக்கப்பட வேண்டியவர்கள். அவர்கள் செய்யும் பணிக்கு ஒத்துழைப்புக் கொடுத்து அதன்வழி நடந்தால் பெண்கள் தொடர்பாக இடம்பெறும் பாலியல் வன்முறைச் சம்பவங்கள், அதனால் உண்டாகும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும்.

பெண்கள் தமக்கு உண்டாகும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக வெளியில் செல்லமுடியாமல் மனதுக்குள் மறைத்துக் கொண்டு மனநோயாளிகளாக மாறுவதுடன் தற்கொலை போன்ற விபரீதமான முடிவுகளையும் எடுக்கின்றனர். இதற்குக் காரணம் சரியான வழிகாட்டல்கள், ஆலோசனைகள் பெறமுடியாமல் இருப்பதாகும்.

பெண்களின் பிரச்சினைகளை அதிகம் கவனத்தில் கொண்டு அதற்கான சேவைகளைப் புரிபவர்கள் குடும்பநலத் தாதியர்கள். எனவே பெண்கள் தமது கிராமம் சார்ந்த குடும்பநலத் தாதியர்களுடன் தாய் போன்று அரவணைப்புடன் ஒன்றிணைந்து வாழ்வதன் மூலம் தமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெறமுடியும். ஏனெனில் ஒரு குடும்பத்தின் நலன் குடும்பம் சார்ந்த பெண்ணிடம் தான் உள்ளது. இதற்காக சேவை புரிபவர்கள் குடும்பநலத் தாதியர்கள் என்பதை நாம் கருத்திற் கொண்டு வாழவேண்டும்.



# கங்காவின் கடிதங்கள்

அன்புள்ள கண்மணிக்கு,

உன்னுடன் நான் கதைத்ததில் இருந்து உன் உள்ளக் குமுறல்களையும் வேதனைகளையும் அறிந்து கொண்டேன். என்ன செய்வது தமிழருக்கு என்று தனியாக ஒரு விதி எழுதப் பட்டுள்ளது. என்ன செய்வது. வாழ்ந்துதான் ஆக வேண்டும். நீ யுத்தத்தில் உன் கணவனை இழந்து நிற்கிறாய்.

இந்த நிலையில் உன்னை நம்பி உன் இரண்டு குழந்தைகள் உள்ளன. அதை நீ எக்காலத்திலும் மறந்துவிடக்கூடாது.

ஒரு சமூகத்தில் ஆண் துணையின்றி வாழ்வது என்பது பெரும் பிரச்சினையைத் தோற்றுவிக்கும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இந்த மாதிரியான நேரத்தில் தான் நீ மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். எங்கு குற்றம் காணலாம் என்று எமது சமூகம் பார்த்துக்கொண்டு இருக்கும். நீ உன் துணையுடன் இருந்தால் எது செய்தாலும் அது சமூகத்தின் கண்களுக்குத் தப்பாகத் தெரியாது. ஆனால் இப்போது... என்ன செய்ய. காலத்தில் கோலம் என்று கண் கலங்குவதை விட வேறு ஏதும் செய்துவிட முடியாது.

இன்றைய சமூகத்தில் உன்னைப்போன்ற எத்தனையோ பெண்கள் உள்ளனர். அவர்களையும் எண்ணிப்பார். நீ மனதை நோக விட்டுவிடாத. வாழ்ந்தே ஆகவேண்டிய கட்டாய நிலைக்குள் நீ இன்று இருக்கிறாய்.

கண்மணி, இந்த வேளையில் நான் ஒன்று மட்டும் உனக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நீ உன் தொலைபேசி இலக்கத்தைக் கண்டபடி எவரிடமும் கொடுத்துவிடாதே. ஏனெனில் தற்போது ஏற்பட் டுள்ள தொலைபேசிக் கலாசாரம் எமது சமூகத்தைச் சீரழித்துக் கொண்டு இருக்கிறது. எமக்கு அது வெளிப்படையாகத் தெரிவதில்லை. தெரிய நியாயமும் இல்லை. உன்னைப் போன்ற எத்தனையோ விதவைப் பெண்கள் இவ்வாறு தொலைபேசி மூலம் கிடைத்த உறவுகளால் சீரழிந்து வாழ்வைத் தொலைத்துவிட்டு இருக்கிறார்கள்.

இந்த விடயத்தில் நீ கவனமாக இருப்பாய் என்று எனக்குத் தெரியும். இருந்தாலும் நான் உனக்குச் சொல்லி வைக்க விரும்புகிறேன்.

எதுவானாலும் நீ எனக்குச் சொல். தனியே மனதுக்குள் வைத்து வெம்பி வெம்பி வாழ்ந்துவிடாதே. என்னாலான உதவிகளை நான் உனக்குச் செய்வேன். வேறு என்ன கண்மணி. இத்துடன் விடைபெறுகிறேன்.

அன்புடன்....
கங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mega Offer

| Printer | UPS | Router | Monitor | Dongle |
| --- | --- | --- | --- | --- |
| Epson | DCP 650VA - 3800/= | D-Link | 19" Dell - 10500/= | MF180 - 3500/= |
| Laser Printer - 11000/= | 1200VA - 9900/= | 4 Port - 6300/= | 16" Topview - 9250/= | E 153 - 4000/= |
| Ink Jet Printer - 4600/= | 1KVa to 10KVa | 4 Port Wireless 6800/= | 19" Asus - 11500/= | Huawei - 5000/= |
| Photo Printer - 23500/= | | Single Port - 3000/= | Kingston 4GB pen drive 900/= | ZTE MF112 - 4750/= |
| CD Printer - 26500/= | | | | Optus - 5250/= |
| | | | | D-Link - 5600/= |

# Thirumurugan Com Net

No.259, KKS ROAD, JAFFNA

No.05, THIRUNAGAR ROAD, KILINOCHCHI

T.P_021 222 7835

சகலவிதமான கணனி உதிரிப்பாகங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

Head phone, Woofer
Mother Board, Web camera
Key Board, Mouse

நம்பமுடியாத விலையில் நம்பகரமான உத்தரவாதத்துடன்

EPSON EXCEED YOUR VISION

D-Link Building Networks for People

## SPOKEN ENGLISH SPOKEN SINHALA

ஓய்வுபெற்ற ஒருவரினால் மானிப்பாயை அண்டிய பகுதிகளில் வீடுகளுக்குச் சென்று வெளிநாடு செல்பவர்களுக்கு ஆங்கிலமும் உத்தியோகத்தர்களுக்குச் சிங்களமும் பேசக் கற்றுக் கொடுக்கப்படும்.
தொடர்பு:- 0774041904 (5900)

Tamil Magazines From Chennai Available For Subscription. Delivered To Your Doorstep. Ananda Vikatan, Femina, Jothidapoomi, Kalaimagal, Kalkandu, Kalki, Kumudam, Kumudam Jothidam, Kungumam, Tamilaga Arasiyal, + Many More. Also English, Hindi, Malayalam and Telugu Magazines. We Also Need Distributors/ Agents Islandwide.
Contact: 0785/205744. Email: polarisent@yahoo.com
Polaris Enterprises (in business since 1994)

## உயிரூட்டுகின்றோம்

பழுதான தொழில்சார் மின்சார உபகரணங்களைத் திருத்திக்கொள்ளவும், புதிய உபகரணங்களையும் உதிரிப்பாகங்களையும் கொள்வனவு செய்யவும், எங்களது ஸ்தாபனத்தை நாடுங்கள்.

உத்தரவாதங்கள் எங்களது நிலையத்திலேயே, உடனே செய்து கொடுக்கப்படும். (கொம்பனிக்கு அனுப்பி செய்வதில்லை)

செயின்சோ, ஜெனறேட்டர், மரவேலை இயந்திரம், மின் உபகரணங்கள், வோசிங் மெசின், மின்சார கேத்தல்கள், றயிஸ் குக்கர் போன்றவற்றின் உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

GREEN HOUSE TRADING COMPANY (PVT) LTD.

இல. 05, கருவப்புலம் ஒழுங்கை, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு. (திருநெல்வேலி). 021 2226459.
(நல்லூர் பிரதேச செயலகத்திற்கு அருகில்)

## 190A, Jampettah Street, Colombo-13

ஸ்ரீ ரஞ்சனி புத்தகசாலையின் ஸ்ரார் பப்பிளிகேசன்

2ஆம் தவணைக்கான வெளியீடுகள் யாழ்.புத்தகசாலைகளில்

* பரீட்சை நோக்கு * பரீட்சைப் பொதி * அறிவொளி * விஞ்ஞான ஒளி * கணித வழி * தரம் 10, 11 கடந்தகால விஞ்ஞான வினாக்கள்(30 வருட)

பாலர் பாடசாலைக்கான 2ஆம், 3ஆம் தவணைக்கான வினாத்தாள்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: இ.நிர்மலன் 0777413990

## ஸ்ரீ வீர ஆஞ்சநேயர் ஜோதிட நிலையம்

இந்தியாவில் இருந்து வருகை தந்த பிரபல ஜோதிடர் கைரேகை, நாம நட்சத்திரம், வெளிநாட்டுப் பயணம், கல்வி, உத்தியோகம் வேறு என்ன பிரச்சினையாக இருந்தாலும் ஒரு முறை இவரைச் சந்தித்து தீர்வு காணுங்கள்.

அறை எண்-100
கிறிடீஸ் ஹோட்டல் அன் றெஸ்ரோறன்ற்,
205, கஸ்தூரியார் வீதி, ராஜா தியேட்டர் கட்டடம், யாழ்ப்பாணம். தொ.பே- 0772723004

நேரம் காலை 8 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை

## திருமண சேவை

1) 85 இல் பிறந்த 4இல் செவ்வாய் 12 கிரக பாவமுடைய ஜேர்மனியில் பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு ஜேர்மனி, பிரான்ஸில் பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தேவை.

2) 78 இல் பிறந்த 12 இல் செவ்வாய் 40 ¼ பாவமுடைய லண்டனில் பிராஜாவுரிமை பெற்ற MBBS டாக்டர் மணமகளுக்கு அதே தகுதியில் மணமகன் தேவை.

3) 79 இல் பிறந்த 4இல் செவ்வாய் 56 ¼ பாவமுடைய ஜேர்மனியில் பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு ஜேர்மனியில் பிரான்ஸில் மணமகன் தேவை.

4) 74இல் பிறந்த 2இல் செவ்வாய் 67 ¼ பாவமுடைய பிரான்ஸ் பிராஜாவுரிமை பெற்ற சைவபோசனமுள்ள மணமகனுக்கு சைவபோசனமுள்ள மணமகள் தேவை.

5) 77இல் பிறந்த 13 ¼ பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற சாட்டற் எக்கவுண்டனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

6) 79 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 58½ பாவமுடைய B.Com, M.Ed முடித்த ஆசிரியருக்கு படித்த அழகான மணமகள் தேவை.

7) 71இல் பிறந்த 12 இல் செவ்வாய் 30 பாவமுள்ள லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

8) 81இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 33 ½ பாவமுடைய BSc. M.Sc, Polo அரச நிறுவனத்தில் வேலை புரியும் மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

9) 82 இல் பிறந்த 1இல் செவ்வாய் 20 ¼ பாவமுடைய பொருளியலாளர் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

தொடர்பு :

கமலக்கண்ணன் திருமண சேவை
171/7, மனோன்மணி அம்மன் கோயிலடி, நல்லூர்
தொ.பே. 0776070862, 0214920266

## FINANCIAL SPONSORSHIP

ஐரோப்பிய நாடுகளில் கல்வி கற்பதற்கு SPONSORSHIP பிரச்சினையா ? உடன் தொடர்புகொள்ளுங்கள்:
0714 550055
COLOMBO BUSINESS COLLEGE
79-1/5 (1st Floor) Galle Road, Wellawatte, Colombo-06
Tel: 0114-518580, 011-2362052

## STUDY IN UK, CANADA, USA, New Zealand CYPRUS, POLAND & GERMANY

UK → அதிகூடிய கட்டணம் - ரூபா. 150,000/- , Student Visitor Visa
USA → கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே. IELTS -5.0
CANADA → IELTS, Sponsor தேவையில்லை. No age limit
POLAND → பகுதி நேர தொழில் வாய்ப்பு, விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.
GERMANY → ஜேர்மன் மொழி தெரியவேண்டிய அவசியமில்லை - With / Without IELTS
CYPRUS → பகுதி நேர தொழில் வாய்ப்பு, விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.

Next Intake: Aug.2011

UKRAINE - Aerospace, Aeronautical Eng, Bio Medical Science, Tele communication, Bio Medical Science at lower cost

பஸ்னா - 0778 438403, 0771000044, அல்சரா - 0778339943

READ International
E-mail: read.int@gmail.com
No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)

## வேலைக்கு ஆள்கள் தேவை

பெண்களுக்கான ஆடைகள் தைப்பதற்குப் பெண்கள் தேவை. தையல் பழகவிரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு:021 2229097,0778697410

## பஹ்ரைன், ஜோர்தானில்

உடனடி தொழில் வாய்ப்பு




பஹ்ரைன், ஜோர்தானுக்கு சாதாரண கல்வி அறிவுடன் வேலையின்றி இருப்போரும், கிளவுஸ்(Glouse) / பேக்(Bag) பெக்டரிகளில் ஜுகிமெசினில் தைத்து அனுபவமுள்ள யுவதிகளுக்கு மட்டும் மத்திய கிழக்கில் தமிழ்பேசும் நிருவாகத்தினரால் நடாத்தப்படும் ஆடைத்தொழிற்சாலையில் உடனடி தொழில்வாய்ப்பு

- Juke Machine Operator - 400 Nos. USD 145 + OT / Rs: 16240/- + OT
- Final Checker - 75 Nos. USD 145 + OT / Rs: 16240/- + OT
- Helper - 75 Nos USD 135 + OT / Rs: 15120/- + OT

(பயிற்சிபெற்ற / பயிற்சிபெறாத)

அனைத்தும் அடங்கலாக Rs: 30,000/- சம்பளம்

நிபந்தனைகள்:
- உணவு, தங்குமிடம், மருத்துவ வசதி இருவழி விமான டிக்கட் என்பன இலவசம்.
- ஒப்பந்த காலம்: - பஹ்ரையின் - 2வருடம். ஜோர்தான் - 3 வருடம்.
- ஏனைய அனைத்தும் பஹ்ரையின், ஜோர்தான் நாட்டு தொழில் சட்டதிட்டங்களுக்கு அமைவானது.

அரச கட்டணம் மட்டுமே செலுத்த வேண்டும் அதற்கும் வசதி இல்லாதவர்களுக்கு வட்டியில்லாத கடன் வசதி செய்து தரப்படும்.

வெளிநாட்டு பிரதிநிதிகளினால் தினசரி காலை 10 மணி முதல் நேர்முகப்பரீட்சை நடத்தப்படுகின்றன. நேரே வாருங்கள்.

மேலதிக விபரங்களுக்கு: மலர் - 0772366516

AI/56/Advt:06/11 AI/56/Advt:07/11

ஹில்டொப் டுவர்ஸ் & ட்ரவல்ஸ்
(வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்)
இல: 111, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

## Spoken English & Grammar

(வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்)
உள்நாட்டில், வெளிநாட்டில் உயர்கல்வி பெற, தொழில் வாய்ப்புப் பெற உகந்த கல்வி
By:Mr.B.Ruban (A/L Eng.Teacher &BBA)
More Details:0779785749
JTI/45, Clock Tower Road,Jaffna

## தவறிவிட்டது

மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி எனும் முகவரியுடைய யோகராசா சந்திரகுமார் என்பவரின் தேசிய.அ.அ. (821152291V), இராணுவ அ.அ, சாரதி அனுமதிப் பத்திரம், BOC யின் ATM காட் என்பன அடங்கிய பேர்ஸ் ஊரெழுவுக்கும் திருநெல்வேலிக்குமிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் 0775250964 எனும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## விசேட ஆரோக்கிய ஆலோசனை

★ஆரோக்கியத்தை ஆயுள் முழுவதும் பாதுகாக்க!
★நடைமுறையில் உள்ள புதிய நோய்களுக்கு தீர்வும் சவால்களுக்கு முகம் கொடுக்கவும்!
★அழகுக்கலை தொடர்பான புதிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள!
★மேலதிக வருமானத்துக்கும் எதிர்காலப் பொருளாதார முன்னேற்றத்துக்கும்!

யாழ்ப்பாணத்தில் சிறந்தஒரு வாய்ப்பு...

அனுமதி இலவசம்

இந்தியாவின் பிரபல 'கனோதர பிஸ்ட்' திருமதி.ஜெயந்தி சதாசிவம் அவர்களால் நடத்தப்படுகிறது.

காலம்: ஜூலை19, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு
இடம்: யாழ்.ப.நோ.கூட்டுறவுச்சங்கம் கேட்போர் கூடம் (M.P.C.S.) Co-operative Hall
★தனிப்பட்ட முறையிலும் ஆலோசனை பெறலாம்.

ஏற்பாடுகள்: 0772480370, JAFFNA STOCKIST.

## STUDY & WORK IN

New zeland / Australia / Poland / UK
Cyprus / Canada / Switzerland / Swedan
Germany / Scotland / Ireland
(Study + Work Permit + PR)

✓ Courses :- Management, Computing, IT, Travel Tourism, Cookery, Beauty Culture & more than 100 Courses.
✓ Minimum Qualification :- ● 'O' Level ● No Need IELTS
✓ அரச மற்றும் Embassy சட்ட திட்டங்களுக்கு அமைவாக சிறந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் அமைந்த விதமான VISAக்களும் செய்துதரப்படும்.
✓ Accomodation and Part Time Work Gurantee, Visa Gurantee for Genune Applicants

### Study MBBS/MD/ENGINEERING in East Europe (UKRINE/RUSSIA/BELARUS/GEORGIA)

✓ SRI LANKA MEDICAL COUNCIL (SLMC)
✓ WORLD HEALTH ORGANIZATION (WHO) Approved Universities
(Fees Start from USD 2400 Pa)
Entry Qualification : A/L 3 Passes ⇒ Admission in Progress

Study MBBS & Engineering in CHINA

### Study in INDIA (New Delhi, Bangalore, Tamilnadu)

Admissions From Reputed Universities & Colleges
Courses :- (Fees Start from USD 1000 Pa)
Engineering, Medicine (MBBS, BDS, Pharmacy), Computing Business Management, Accounting & Finance, Arts, IT
Entry Qualification : A/L 3 Passes

SIEG INTERNATIONAL
169 , George R De Silva Mawatha, Kotahena , Colombo-13. (opposite to McDonalds )
Tel :- 011-2434767
Mobile :- 077 3 502 612

## ஹீரோ, கென்டன் காட்சியறை

HERO CYCLES KENTON

சிறியோர் முதல் பெரியோர் வரையான அனைவரினதும் சொகுசான சைக்கிள் சவாரிக்கு Hero, மவுண்டன், BMX சைக்கிள் மற்றும் புதிய லேடீஸ் பைக் என்பனவற்றை எமது காட்சியறையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்

பலவர்ணங்களில் புதிய லேடீஸ் சைக்கிள்

ஒரிஜினல் ஹீரோ லேடீஸ் சைக்கிள்களும் ஆண்கள் சைக்கிள்களும் பெற்றுக்கொள்ளலாம்.

ஹீரோ கென்டன் விநியோகத்தர்கள்
ஸ்ரார் ரேடர்ஸ்
இல.258. 260, மானிப்பாய் வீதி, ஐந்துசந்தி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 4921672

(49)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் ஆகிவிட்ட கைதியின் காதல்



'கைதியின் காதலையும் அரசியல் ஆக்கிவிட்டது இந்த அரசு.'

காதல் ஒரு சுகமான அனுபவம். காதலுக்கு ஜாதி இல்லை; மதமும் இல்லை; அதற்கும் மேலாக கண்ணும் இல்லை என்று கவிபாடும் கவிஞர்கள் ஏராளம். ஆனால் இலங்கைத் தமிழர்களுக்கு காதலும் அரசியல் ஆகிவிட்டது.

இலங்கையின் எழில் கொஞ்சும் மலையகத்தில் மஸ்கெலியா எனும் பிரதேசத்தைச் சேர்ந்தவர் ரவீந்திரன். அது அவருடைய பிறப்பிடமாக இருந்தாலும், இளமைப் பருவத்தை அவர் வவுனியாவில்தான் கழித்தார்.

ரவீந்திரனின் தந்தை ஓர் அரச உத்தியோகத்தர். அவருக்கு வவுனியாவுக்கு இடமாற்றம் கிடைத்தது. தந்தையின் தொழில் நிமித்தம் ரவீந்திரனும் வவுனியாவுக்குச் சென்றார். பல வருடங்களாக அவர் அங்கேயே தங்கியிருந்தார்.

பின்னர், பிறப்பிடமான மஸ்கெலியாவுக்கு வந்த ரவீந்திரனை அவர் வவுனியாவிலிருந்து வந்து மலையக இளைஞர்களை இயக்கத்துக்குச் சேர்க்கின்றார் என்றும், நிதி சேகரிப்பில் ஈடுபடுகின்றார் என்றும் குற்றம் சாட்டி பொலிஸார் கைதுசெய்தனர். (1998 ஆம் ஆண்டு மார்ச் மாதம்)

அதுமட்டுமன்றி, ரவீந்திரனின் சகோதரன் உட்பட அவரின் குடும்ப அங்கத்தவர்களையும் பொலிஸார் கைதுசெய்தனர். எனினும், அவர்கள் குற்றமற்றவர்கள் என நிரூபிக்கப்பட்டதை அடுத்து விடுதலை செய்தனர். ஆனால், ரவீந்திரன் பாவம். அவருக்கு எதிராக இன்னும் விசாரணைகள் இருக்கின்றன எனக் கூறி சிறையில் அடைத்தனர் அதிகாரிகள்.

சிறிது காலத்தின் பின்னர் இவருக்கு எதிராக அரசு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தது. மூன்று வருடங்களுக்கு மேலாக விசாரணைகளை நடத்திவந்த நீதிமன்றம் 2003.11.10 அன்று இவருக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. தீர்ப்பைக் கேட்டதும் செய்வதறியாது தவித்த ரவீந்திரன் கத்தினார்; கதறினார்; அம்புபட்ட மான்போல் துடிதுடித்தார். ஆனால், செய்வதற்கு ஒன்றுமில்லை; எல்லாம் என் தலைவிதி என நினைத்துக் கொண்டே சிறைவாசம் அனுபவிக்கின்றார் இவர்.

நீதிமன்றம் விதித்த ஆயுள் தண்டனையை சகித்துக் கொள்ள முடியாத ரவீந்திரன், மேன்முறையீடு செய்தார். தண்டனைக் காலத்தை 12 வருடங்களாகக் குறைத்தது நீதிமன்றம். தொலைந்து போன தனது வாழ்க்கை மீண்டும் கிடைத்துவிட்ட சந்தோஷம் ஒரு புறமிருக்க, இன்னும் 12 வருடங்களை எப்படி சிறைச் சாலையில் கழிக்கப்போகின்றேன் என்ற வேதனை மறுபுறம் அவரை வாட்டியது.



சிறைத்தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்த வேளையில், அவர் மனதில் காதல்மலர் பூத்தது. கடிதங்கள், வாழ்த்து அட்டைகள் என்பன ரவீந்திரனின் காதலுக்கு மேலும் வலுச் சேர்த்தன.

நுவரெலியாவைச் சேர்ந்த ரஞ்சனி என்ற அழகுத் தாரகையை எட்டு வருடங்களுக்கு மேலாக ரவீந்திரன் சிறையில் இருந்து கொண்டே காதலித்துவந்துள்ளார். காதலியும் அடிக்கடி சிறைச் சாலைக்குச் சென்று காதலனைப் பார்ப்பதை வழமையாக்கிக் கொண்டார்.

'காதல் ஒரு புகையைப் போல. அதை மூடி வைத்தால் தெரிந்துவிடும்.' என கவிஞர்கள் வர்ணித்துள்ளனர். விடயம் எப்படியோ உறவினர்களுக்குத் தெரியவந்தது.

இந்த நிலையில், இரு வீட்டாரும் தங்களின் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்துச் சிந்தித்து, இருவருக்கும் திருமணம் செய்து வைக்க முடிவெடுத்தனர். அரச அனுசரணையுடன் 2010ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 18ஆம் திகதி இவர்கள் திருமண பந்தத்தில் இணைந்தனர்.

கைதிகளை நாங்கள் எப்படிக் கௌரவத்துடன் நடத்துகின்றோம் என்பதைச் சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்ட முனைந்த அரசு பல பிரதேசங்களுக்கு அழைப்பு விடுத்தது. ஊடகங்களும், மகஸின் சிறைச்சாலையை முற்றுகையிட்டன. இனிதே முடிவடைந்தது திருமணம்; நிறை வேறியது அரசின் நோக்கம்; நிர்க்கதியானது தம்பதிகளின் வாழ்க்கை.

ரவீந்திரனுக்குத் திருமணத்தை நடத்தி வைத்த மறுகணமே, வெளிவிவகார அமைச்சர் ஜி. எல்.பீரிஸ், வெளிநாட்டு ராஜதந்திரிகளுடன் பேச்சு நடத்த ஆரம்பித்துவிட்டார்.

"தமிழர்களுக்கு அதைச் செய்கின்றோம், இதைச் செய்கின்றோம் எனக் கூறும் அரசு உன்னதமான காதலை வைத்தும் சர்வதேசத்திடம் கண்ணாம்பூச்சியாட்டம் விளையாடி வருகின்றது'' எனக் குற்றம்சாட்டுகின்றது 'நாம் இலங்கையர்' அமைப்பு.

ரவீந்திரனின் மனைவி வேலை எதுவுமின்றி தற்போது நுவரெலியாவில் சொல்லொண்ணாத் துன்பங்களை எதிர்நோக்கியுள்ளார்.

"சிறையில்" அடைத்து வைத்து ரவீந்திரனின் வாழ்க்கையை சின்னாபின்னமாக்கிய அரசு, ரஞ்சனியின் வாழ்க்கையையும் சீர்குலைத்துவிட்டது'' என்றும் 'நாம் இலங்கையர்' அமைப்பின் தலைவர் உதுல் பிரேமரட்ன குற்றம் சாட்டுகின்றார்

தனக்கு இன்று விடுதலை கிடைக்குமா அல்லது நாளை விடுதலை கிடைக்குமா என நாள்களை எண்ணிய வண்ணம் சிறையில் வாடிக்கொண்டிருக்கும் ரவீந்திரன் எப்பொழுது விடுதலையாவார் என்பதே அநேகமானோரின் எதிர்பார்ப்பாகும்.

போராளிகளாக இருந்தவர்கள் விடுவிக்கப்பட்டு விட்டார்கள். ஆனால், போராளிகளுக்கு உதவியவர் என்று கூறப்படுபவருக்கு 12 ஆண்டுகள் சிறை.

# கராத்தேயில் ஒரு சாதனையாளர்

பருத்தித்துறையைச் சொந்த இடமாகக் கொண்டவர் மாணிக்கவாசகம் இரத்தினசோதி. கராத்தேயில் முத்திரை பதித்துவரும் ஒருவர். உயர்தரம் வரை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கற்ற இவரால் தொடர்ந்து கல்வியைத் தொடரமுடியாத நிலை ஏற்பட்டது. இதனால் தனது தந்தையாருடன் வியாபாரத்தில் ஈடுபடத்தொடங்கினார். தனது காராத்தே அனுபவம் தொடர்பாக உதயன் வாசகர்களுடன்பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் இங்கு பிரசுரமாகின்றன.

**கராத்தே துறைக்கு வந்த அனுபவம்**

ஹட்லிக் கல்லூரியில் இடம் பெற்ற யோகாசன செயல்முறையும் விளக்கமும் தொடர்பான நிகழ்வில் கலந்துகொண்ட போது ஆர்வம் ஏற்பட்டு 1955 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யோகாசனப் பயிற்சிகளைப் பெற்றேன்.

அதன்பின் குத்துச்சண்டையில் ஈடுபட்டேன் ஆசிரியர் வைத்திலிங்கத்தால் நடத்தப்பட்ட குத்துச் சண்டை வகுப்புகளில் கலந்து கொண்டு போட்டிகளிலும் பங்குபற்றினேன்.

தந்தையுடன் சேர்ந்து வியாபாரம் செய்யும் காலத்தில் மல்யுத்தம், வர்மக்கலை, சிலம்பம் போன்ற பயிற்சிகளிலும் ஈடுபட்டேன் .

1974 ஆம் ஆண்டு இலங்கையில் கராத்தே முன்னோடியான சென்சி பொனிறொபேட் ஆசிரியரிடம் யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற இடங்களில் பயிற்சி பெற்றேன்.

**பெற்ற விருதுகளும் சாதனைகளும்**

1976 ஆம் ஆண்டு நாவலப்பிட்டியில் சண்டைப்போட்டியில் இரண்டாம் இடமும் 1977 ஆம் ஆண்டு மண்ணிறப்பட்டியில் காட்டா 2 சண்டையில் முதலாம் இடமும் 1978 ஆம் ஆண்டு மண்ணிறப் பட்டியில் காட்டா 3 சண்டையில் முதலாம் இடமும் 1980 ஆம் ஆண்டு சர்வதேச கராத்தே காட்டா போட்டியில் இரண்டாம் இடமும் 2011 ஆம் ஆண்டு சர்வதேச கராத்தே காட்டா போட்டியில் இரண்டாம் இடமும் பெற்றதுடன் யாழ். திவ்ய ஜீவன சங்கம் நடத்திய யோகாசனப் போட்டிகளில் 3 தடவை பங்குபற்றி 2 தங்கப்பதக்கமும், ஒரு வெள்ளிப் பதக்கமும் பெற்றுள்ளேன்.

**கராத்தே கலையில் இவரது மாணவர்களின் சாதனைகள்**

ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள்.

மு.நாவேந்திரம், வு.பிரபாகரன், வசந்தன் ஆகியோர் நான்காவது கறுப்புப் பட்டியும், சந்திரமோகன் மூன்றாவது கறுப்புப் பட்டியும், குணசீலன், பரமலிங்கம் ஆகியோர் இரண்டாவது கறுப்புப் பட்டியும், மு.பிரசாந்தினி மண்ணிறப் பட்டியும், ஆழிக்குமரன் 13 வயது மாணவர் பச்சைப்பட்டியும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கராத்தே கலையின் அனுபவம்**

கராத்தே கலை மூலம்பொறுமை, தற்காப்பு, மன ஒருமைப்பாடு, உடல் ஆரோக்கியம் போன்றன கிடைக்கும் நன்மைகள். இது எனது 37 வருடகால அனுபவம். இளைஞர் யுவதிகள் ஜிம்னாஸ்ரிக் போன்ற துறைகளில் நாட்டம் காட்டுகின்றனர்.

ஜப்பான், சீனா, கொரியா, இந்தியா போன்ற நாடுகளில் கராத்தே கலைக்குத் தான் முக்கியத்துவம் உண்டு. கடந்த காலங்களில் யாழ். மாவட்டத்தில் குறிப்பாக வன்னி மாவட்டத்தில் இந்தக் கலை பெரிதும் உச்ச நிலையில் இருந்தது.




அதைப்போல் வடமராட்சி யிலும் குத்துச் சண்டை, மல்யுத்தம், கபடி, சிலம்பம் பெரிதும் முன்னேற்றமடைந்து இருந்தன.

எனவே இந்தக் கலையை அழியவிடாது மாணவ சமுதாயம் மத்தியில் உருவாக்க வேண்டும். இதுவே எனது அவாவாக உள்ளது.


இலங்கையில் அல்லது யாழ்ப்பாணத்தில் கராத்தே கலையை வழங்கக்கூடிய நிறுவனமாக கராத்தே சம்மேளனம் உள்ளது. எனினும் மாணவர்கள் சிறந்த ஆசிரியர்களிடம் தற்காப்புக் கலையைப் பெறவேண்டும்.

முறையான பயிற்சிகள் பெற்று யாழ். மாணவர்கள் சர்வதேசப் போட்டி களில் பங்குபற்றும் வாய்ப்புகள் உள்ளன. 2009 ஆம் ஆண்டு தங்கம்,வெள்ளி, வெண்கலம் போன்ற பதக்கங்களைப் பெற்றுள்ளனர். அதைப்போல் 2010 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தேசிய மட்டப் போட்டியில் பதக்கங்களைப் பெற்றுள்ளனர். எனினும் இடைவிடாது முயற்சி செய்தால் சாதனையாளர்கள் உருவாகலாம். மாணவர்கள் முயற்சிக்க வேண்டும்.

**ஜெயம் ஜெகன்**
ஊடகவளங்கள் பயிற்சி மையம் யாழ்ப்பாணம்.

கராத்தே, யோகாசனம் இரண்டையும் நீங்கள் அறிந்திருப்பது பற்றி யோகாசனப் பயிற்சி ஆரம்பப் பயிற்சி. இது உடல் ஆரோக்கியத்துக்கும் ஏனைய கராத்தே போன்ற பயிற்சிகள் பெறவும் உதவும் இரண்டு கலைகளுக்கும் ஒன்றுமை இருப்பதால் எனக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலி.வடக்கு பிரதேச சபைத் தேர்தல்

## 23 ஜூலை 2011

தமிழ் இனத்தின் விடுதலை,
சர்வதேச அழுத்தம்,
சமூக அபிவிருத்திப் பணி
இவற்றை முன்னெடுத்துச் செல்ல
ஒன்று சேர்ந்து வாக்களிப்பீர்.

**நடராசா மதியழகராசா (மதி)**

**இலங்கைத் தமிழரசுக் கட்சி**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

14

(5805)



# உள்ளூராட்சித் தேர்தல் - 2011

## வலி.தெற்குப் பிரதேச சபை (உடுவில்)

நாம் மீண்டும் எம்மை ஆள...
நிம்மதியாய் எம் மண்ணில் வாழ...
வீட்டில் நிம்மதி தவழ...
உங்கள் வீட்டுக்கே வாக்களியுங்கள்...

**பாலசுப்பிரமணியம் குகப்பிரசாதன்**

**இலங்கைத் தமிழரசுக் கட்சி**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

15

**நண்பர்கள்** (5806)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பஸில் ராஜபக்ஷ, கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, கௌரவ ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள வடக்கு, கிழக்கு மாகாண உள்ளூராட்சிச் சேவைகள் மேம்பாட்டுத் திட்ட நிகழ்வுகள் 13.07.2011 - 17.07.2011 திகதி வரை யாழ்.மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## இன்றைய தினம் நடைபெறவுள்ள நிகழ்வுகள்

| இல | உள்ளூராட்சி மன்றங்களின் பெயர் | திட்டத்தின் பெயர் | | வேலைகளின் விவரம் | திட்ட அமைவிடம் | பாதீட்டு மதிப்பீடு (மில்லியன் ரூபாவில்) | நிகழ்வுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பருத்தித்துறை பிரதேச சபை | துரித மீள் எழுச்சித்திட்டம் | 1 | மருதங்கேணி சந்தை அமைத்தல் | மருதங்கேணி | 5,800 | அடிக்கல் நாட்டு விழா |
| 2 | பருத்தித்துறை நகர சபை | துரித மீள் எழுச்சித்திட்டம் | 2 | அலுவலகக் கட்டடம் அமைத்தல் | பருத்தித்துறை | 55,000 | அடிக்கல் நாட்டு விழா |

## ஏனைய பிரமுகர்களால் ஆரம்பித்து வைக்கப்படும் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

| இல | உள்ளூராட்சி மன்றங்களின் பெயர் | திட்டத்தின் பெயர் | | வேலைகளின் விவரம் | திட்ட அமைவிடம் | பாதீட்டு மதிப்பீடு (மில்லியன் ரூபாவில்) | நிகழ்வுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பருத்தித்துறை பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 3 | உருத்திராவத்தை பாடசாலை வீதி புனரமைப்பு | புலோலி | 8,432 | கால்கோள் விழா |
| | | துரித மீள் எழுச்சித்திட்டம் | 4 | அம்பன் பிள்ளையார் கோயில் வீதி புனரமைப்பு | மருதங்கேணி | 12,460 | கால்கோள் விழா |
| | | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 5 | திக்கம் பாடசாலை வீதி புனரமைப்பு | அல்வாய் | 5,909 | கால்கோள் விழா |

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.

## வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு

தரமான சோக்கேஸ், சாப்பாட்டு மேசை, கட்டில்கள் மற்றும் ஏனைய தளபாடப் பொருள்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0776621727

(5907)

## நிர்மாண பணி வெற்றிடங்கள்

யாழ்.மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கட்டட நிர்மாணப் பணிகளுக்கு கீழ்க் குறிப்பிடப்படும் பணியாளர்கள் உடனடியாகக் கடமைக்கு அமர்த்தப்படவுள்ளனர்.

01. **வேலை மேற்பார்வையாளர்கள்** (Work Supervisors)
தொழில்நுட்பத் தகைமைகளுடன் முன் அனுபவம் தேவை.

02. **களஞ்சியப் பொறுப்பாளர்கள்** (Store Keepers)
முன் அனுபவம் தேவை.

03. **பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்** (Security Guards)

**தொடர்புகளுக்கு:**

**வீ.வீ. இராமநாதன் அன் கோ (பிறை) லிமிட்டெட்**
23, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

அல்லது

**வீ.வீ.இராமநாதன் அன் கோ (பிறை) லிமிட்டெட்**
வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி,
வவுனியா.

[5926]

# சிங்கப்பூர் அரசு வழங்கும் 80% புலமைப்பரிசில்கள்

REPUBLIC POLYTECHNIC

**Higher Education @Republic Polytechnic**

**Join us in the 2012 April Intake**
**Apply with Your GCE 'O' or 'A' Level Results**
**Minimum : English - A. Maths & Science - B and any 2 C's**

நேர்முகப்பரீட்சை சிங்கப்பூர் RP அதிகாரிகளால்
ஜூலை மாதம் 23ம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும்.
(முற்பதிவுகள் அவசியம்)

தமிழில் தொடர்புகளுக்கு :

**MILLENNIUM CONCEPTS**
225-3/2, Galle Road, Colombo-04. (විකාස පාර යාබදව - බම්බලපිටිය)
011 2552 765 | 077 3 40 50 60 | 077 290 4949
Web : www.studysingapore.lk   E-mail : rp@studysingapore.lk

## மரண அறிவித்தல்



### ஐயாக்குட்டி செல்வராஜா

இல.16,சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாக்குட்டி செல்வராசா 30.06.2011 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாக் குட்டி - சின்னத் தங்கம் தம்பதியரின் புதல்வரும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற விஜயராஜா மற்றும் புஸ்பராஜா (கனடா), ஜெயராஜா (கனடா), காலஞ்சென்ற மோகனராஜா மற்றும் கவிதா, சுஜாதா (டென்மார்க்), பிரபாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சகாயராணி மற்றும் கருணமாலா (கனடா), கருணாதேவி, ரவிக்குமார், ஸ்ரீகரன் (டென்மார்க்), ஆசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற வினோ மற்றும் பிரியா, ரம்மியா, ரேகா, லக்சிகா (கனடா), விதுர்சன் (கனடா),கௌதமன், ஆகாஷ், சஞ்சிகா, சனுஜா, சாருஜன், மதுஷனா, அக்சிகா, அபினாஸ் (டென்மார்க்), பிரனாத் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.07.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.16, சிறாம்பியடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(5921)

தகவல்: சரஸ்வதி (மனைவி)
ரவிக்குமார் (மருமகன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கு மீண்டும் செழிப்புடன் மிளிர்வதற்காக நான் பாடுபடுவேன்

## கூட்டமைப்பு வேட்பாளர் வேல்ராஜா



வலி.வடக்கு பிரதேசம் பழைய செழிப்புடன் மிளிர்வதற்குப் பாடுபடுவதற்காவே தான் தேர்தலில் போட்டியிடுவதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வலி.வடக்கு பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரான தண்டிகை வேல்ராஜா(அம்பி) உதயனுக்குத் தெரிவித்தார்.

பிரதம சிறாப்பராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற அவர், கருகம்பனை அபிவிருத்திச் சபைத் தலைவராக உள்ளதுடன் பல்வேறு பொது அமைப்புகளிலும் தன்னை இணைத்துச் செயற்பட்டு வருகிறார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வலி.வடக்கில் கருகம்பனை, கீரிமலை, கொலனி வீட்டுத் திட்டம் முதலான பகுதிகள் 20 வருடங்களுக்கு முன்னர் மிகுந்த செழிப்புடன் காணப்பட்டன. ஆனால் இன்று மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனரே தவிர பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படாமல் மோசமான நிலையில் உள்ளது. மக்களுக்கான அடிப்படை வசதிகள் உட்பட பல்வேறு தேவைகளையும் நிறைவேற்றவேண்டியுள்ளது.

இவற்றை நிவர்த்தி செய்து மீண்டும் செழிப்புடன் இந்த பிரதேசங்கள் மிளிர்வதற்கு பாடுபடுவதே எனது இலட்சியமாகும்.

கீரிமலைக் கேணியைப் புனரமைத்தல், நிறுத்தப்பட்டுள்ள சகல பஸ் சேவைகளையும் கீரிமலை வரை கொண்டு வருவதுடன் நவீன பஸ் நிலையம் ஒன்றை உருவாக்குதல், உள்ளூர் தொழில்களை விருத்தி செய்வதுடன் தொழில்சார் கட்டமைப்புக்களையும் மீள நிறுவுதல், கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்தை சகல வசதிகளுடனும் சொந்த இடத்தில் இயங்கச் செய்தல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளித்துச் செயலாற்றுவேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(த-38)

# போரினால் பாதிப்புற்ற எமது பகுதியை கட்டியெழுப்ப தேர்தல் நல்ல வாய்ப்பு

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் சிவலிங்கம்



யாழ்ப்பாணம்,ஜூலை 17

போரினால் பாதிப்புற்ற எமது பிரதேசத்தைக் கட்டியெழுப்ப இந்த உள்ளூராட்சித் தேர்தல் எமக்குப் பெரும்வாய்ப்பாக அமையும்.

இவ்வாறு தெரிவித்தார் உள்ளூராட்சித் தேர்தல் சாவகச்சேரி பிரதேச சபைக்குப் போட்டியிடும் சி.சிவலிங்கம்.

அவர் வழங்கிய செவ்வி இங்கே -

தங்களைப் பற்றி -

கைதடியில் பாடசாலையில் படிக்கின்ற காலம் முதலே பொதுச்சேவையில் ஈடுபட ஆரம்பித்தேன். கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தில் 17 வயது முதல் இணைந்து பலவித பொறுப்புக்களையும் வகித்துள்ளேன்.

கைதடிப் பிரதேச மக்களின் காணி இல்லாத பிரச்சினை, மின்சார விநியோகம், தொழிலாளர்களின் கூலிப்பிரச்சினை போன்றவற்றிலும் நியாயம் கிடைக்க வழிசெய்துள்ளேன்.

தாங்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைந்து போட்டியிடுவதன் நோக்கம்?

ஜனாதிபதி, நாடாளுமன்றம் ஆகியவற்றில் இந்தக் கட்சியின் அதிகாரமேயுள்ளது. இதனால் உள்ளூராட்சி சபையும் எமது கட்சி பெறுமிடத்து அரசின் முழுமையான ஆதரவுடன் பிரதேச அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியும்.

தாங்கள் சாவகச்சேரி பிரதேச சபையின் அதிகாரத்தைப் பெற்றால் என்ன செயற்பாடுகளை முன்னெடுப்பீர்கள்?

* பெரும் நிலப்பரப்பைக் கொண்டுள்ள சாவகச்சேரி பிரதேச சபையை இருபிரிவுகளாகப் பிரித்தல்.
* சகல கிராமிய வீதிகளையும் புனரமைத்தல்.
* கைதடியில் விடுதி வசதியுடன்பிரதேசவைத்தியசாலையை உருவாக்குதல்.
* கைதடி தபாலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்க நிதி பெறல்.
* வறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், படித்த இளைஞர்கள், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல்.
* குளங்கள், மயானங்கள் போன்றவற்றை புனரமைத்தல் ஆகியவற்றை மேற்கொள்வேன்.

அல்லற்பட்ட எமது மக்களுக்கு ஆறுதலான வாழ்வைப் பெற்றுக் கொடுக்கப் பாடுபடுகின்றோம். நிம்மதியாக வாழ்வாதாரங்களைப் பெற்று வாழ மக்களுக்கு உதவப் பாடுபடுகின்றோம். அதற்கான வழிமுறையாக இந்தத் தேர்தலைப் பயன்படுத்துகின்றோம்-என்றார்.

(த-121)

# ஐ.தே.க. வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரசாரத்தில் விஜயகலா எம்.பி.

யாழ்ப்பாணம்,ஜூலை17

நெடுந்தீவுப் பிரதேச சபைக்குப் போட்டியிடும் ஐ.தே.க. வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டுள்ளார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன். இவர் அங்குள்ள பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து உள்ளூரில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்துள்ளார்.

கடற்றொழிலாளர்களைச் சந்தித்த விஜயகலா எம்.பி. அவர்கள் தமது படகுகளில் மீன்களை குறிகாட்டுவானுக்கு எடுத்துச் செல்ல அனுமதியைப் பெற்றுத் தருவதாகவும் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சி உறுப்பினர்களை தெரிவுசெய்வதன் மூலம், நெடுந்தீவு மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றக் கூடியதான செயற்பாடுகளை முன்னெடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (த-7)

# அபிவிருத்தி வேண்டுமென்றால் அரச தரப்புக்கு ஆதரவு வழங்குங்கள்

## மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் கண்ணன்

அபிவிருத்தி வேண்டுமெனில் அரசை ஆதரிக்க வேண்டும். அதன் ஊடாக எமது பிரதேச அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும். ஆட்சியில் இருக்கும் அரசை ஆதரிப்பதன் ஊடாகவே எமது பிரதேசத்தின் அபிவிருத் தியை துரித கதியில் முன்னெ டுக்க முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் காரைநகர் பிரதேச சபையின் முதன்மை வேட்பாளரும் ஈ.பி.டி.பியின் காரைநகர் பிரதேசப் பொறுப்பாளருமான வீரமுத்து கண்ணன்.

அவரது காரைநகர் பிரதேச அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பில் அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

தொடர்ந்து ஐந்து வருடங்களுக்கு இந்த அரசு தான் ஆளப்போகின்றது. இந்த அரசில் இருந்து நிதியைப் பெற்றே காரைநகரின் அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும். இது எமக்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பம். இதனை எமது மக்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எனவே இந்த அரசை நாம் ஆதரித்து அதன் ஊடாக காரைநகரின் அபிவிருத்தியை முன்னெடுப்போம்.

உள்ளூராட்சி என்கின்ற நல்லாட்சி எமது பிரதேசத்தில் அமையவேண்டும். இளைஞர் சமுதாயம் இந்தப் பிரதேசத்தின் பொறுப்பை ஏற்று காரைநகர் பிரதேசத்தை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

காரைநகர் பிரதேசத்தில் குடிதண்ணீர் பிரச்சினையே மிகமுக்கியமானதாகக் காணப்படுகின்றது. தற்போது காரைநகர் மக்களின் குடிதண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக எமது முயற்சியினால் இரண்டு பவுசர்கள் தருவிக்கப்பட்டுள்ளன. அவை மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட உள்ளன. அத்துடன் ஆயிரம் லீற்றர் கொள்ளளவுடைய பத்து குடிதண்ணீர் தாங்கிகளும் பொது இடங்களில் வைக்கப்பட்டு மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்பட உள்ளது.

காரைநகரில் இதுவரை மின்னொளியினைக் காணாத 14 கிராமங்களுக்கான மின்சாரம் வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. காரைநகரில் உள்ள மருதபுரம், சிவன் வீதி கோவளம் கடற்கரை வீதி, பிட்டியெல்லை, மதவடி, கொட்டப்புலம், வலுப்போடை, ஊரி, தோப்புக்காடு, நம்மாவில், வியாவில், வேரப்பிட்டி, சேவகர் கோவிலணை, கண்ணகி அம்மன் கோவிலடி ஆகிய கிராமங்களுக்கான மின்சாரம் வழங்கும் பணி இடம்பெற்று வருகின்றது. இதன் ஊடாக இங்குள்ள பெருமளவான குடும்பங்கள் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள உள்ளன - என்றார்.

(த-250)

தேர்தல் களம் 2011

# பொருள்களுக்காகவும் பணத்துக்காகவும் தமிழ் மக்கள் விலை போகமாட்டார்கள்

## நல்லூர் பிரதேச சபையின் கூட்டமைப்பு வேட்பாளர் கிட்ணர் தர்மரெட்ணம்



நாயின் தலையை அல்ல பேயின் தலையையே வெட்டி வைத்தாலும் யாழ். தமிழன் அச்சமாட்டான். பொருள்களுக்கும் பணத்துக்கும் விலை போக மாட்டார்கள். நாம் தன்மானம் உள்ள தமிழர்கள். தமிழ் தேசிய கூட்டமைப்புக்கே அனைவரும் வாக்களிப்பார்கள். இதில் எந்த சந்தேகமும் இல்லை என உறுதியுடன் கூறினார் நல்லூர் பிரதேச சபை கூட்டமைப்பு வேட்பாளரான கிட்ணர் தர்மரெட்ணம்.

தர்மரெட்ணம் ஒரு சமூக சேவையாளர். சிறந்த விளையாட்டு வீரர் மட்டுமல்ல பல்வேறு அமைப்புகளின் தலைவராக, உபதலைவராக, பொதுச் செயலாளராகவும் இருந்து பெரும் பணியாற்றி வருகின்றார்.

அவர் உதயனுக்கு அளித்த செவ்வி இங்கே -

கேள்வி:- சமூகப் பணிகளில் ஈடுபட்டுவந்ததாகக் கூறுகிறீர்கள். அதைத் தெளிவாகக் கூறமுடியுமா?

பதில்: கொட்டடி, நாவாந்துறை முஸ்லிம் வட்டார விழிப்புக் குழு தலைவராக மூன்று வருடங்கள் பணியாற்றி தமிழ் முஸ்லிம் சமூக ஒற்றுமைக்காக பெரும் பங்காற்றி உள்ளேன். யாழ்.உதைபந்தாட்ட சங்கத்தின் உப தலைவராக ஆறு வருடங்கள் பணியாற்றியுள்ளேன். கொக்குவில் நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் சனசமூக நிலையத்தின் செயலாளராக 15 வருடங்கள் தொடர்ச்சியாகப் பணியாற்றி உள்ளதோடு கொக்குவில் முதலுதவி சங்கம், கொக்குவில் புனித சின்னப்பர் ஆலயம் என்பனவற்றின் செயலாளராகவும் இருந்து இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மக்களின் தேவைகளை அறிந்து சேவையாற்றியுள்ளேன்.

கேள்வி: சமூகப் பணியிலும் தனியாக, சுதந்திரமாக சுய தொழில் செய்து கொண்டிருந்த நீங்கள் எப்படி அரசியலுக்குள் பிரவேசித்தீர்கள்?

பதில்: தனியான தொழிலை செய்து கொண்டு பொதுப் பணியில் ஈடுபட்டிருந்த என்னை எனது பிரதேச மக்களே நல்ல தலைமை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அந்தக் கோரிக்கையை நிராகரிக்க முடியாததால் நானும் விருப்புடன் முன்வந்துள்ளேன்.

கேள்வி: நீங்கள் வெற்றி பெற்றால் உங்கள் பிரதேச மக்களுக்கு என்ன செய்வீர்கள்?

பதில்: பல வருடங்களாக எந்தவிதமாக பாரமரிப்பும் இன்றி கைவிடப்பட்டுள்ள வடிகால்கள், வாய்க்கால்கள் குடிதண்ணீர் கிணறுகள், பாதைகள் என்பனவற்றை அபிவிருத்தி செய்ய ஊக்குவிப்பேன். நல்லூரில் சகல வசதிகளுடனும் கூடிய விளையாட்டு மைதானம் ஒன்றை அமைப்பேன்.

விசேடமாக இந்து மயானத்தின் புனிதம் கெடாத வகையில் கொக்குவில் கிறிஸ்தவ சவக்காலை ஒன்றை அமைக்க ஏற்பாடுகளைச் செய்வேன்.

கேள்வி: இந்தப் பிரதேசத்தில் பரவலாக தேர்தல் வன்முறைகள் இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது. மக்களின் மனநிலை எப்படி இருக்கின்றது.

பதில்: எமது மக்கள் பல கொடுமைகளை அனுபவித்தவர்கள். அச்சுறுத்தல்களுக்கும் மிரட்டல்களுக்கும் பயப்பட மாட்டார்கள். பனம் காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது என்ற நம்பிக்கையுடன் கூறுகின்றார் கிட்ணர் தர்மரெட்ணம். (த-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷனை வென்றது நெல்லியடி ம.வி. அணி

யாழ்ப்பாணம், ஜூலை 17

வல்வெட்டித்துறை நெற்கொழு பொது விளையாட்டு மைதானத்தின் 60ஆவது ஆண்டு நிறைவையொட்டி வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமராட்சிப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் 'ருவெண்ரி-20' கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி வெற்றி பெற்றுள்ளது.

கடந்தவாரம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது.

உமாசுதன் 75 ஓட்டங்களையும் டிரைலன் 24 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி வீரர்களான தயாபரன், நிலக்சன், நிரேஷன்,கோமசாந், ஆகியோர் முறையே தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள்.

184 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியினர் 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 123 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

தயாபரன் 41 ஓட்டங்களையும் மனளன் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி வீரர்களான உமாசுதன் 3 விக்கெட்டுக்களையும் டினாலன் 2 விக்கெட்டுக்களையும் தர்சன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

சிறந்த வீரராக தெல்லிப்பழை மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த உமாசுதன் தெரிவு செய்யப்பட்டார். (த-23)

# வடமராட்சியில் அடுத்த மாதம் மாபெரும் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 17

வடமராட்சி இன்பர்சிட்டி கிராம அபிவிருத்திச் சங்கமும், காண்டீபன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் 56 ஆம் ஆண்டு விளையாட்டு விழாவும் கலை நிகழ்வும் ஓகஸ்ட் மாதம் 20ஆம்,21ஆம்,22 ஆம் திகதிகளில் இன்பர்சிட்டி காண்டீபன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கடல் நிகழ்வுகளாக நீச்சல் (ஆண்கள், பெண்கள்), கட்டுமரம் வலித்தல், படகோட்டம் ஆகியனவும் வீதி நிகழ்வுகளாக மரதன் ஓட்டம், (ஆண்கள், பெண்கள்), மைதான நிகழ்வுகளாக கபடி (ஆண்கள், பெண்கள்), கயிறு இழுத்தல் (ஆண்கள், பெண்கள்), கிறிஸ் கம்பம் ஏறுதல், தலையணைச் சண்டை (ஆண்கள், பெண்கள்) மல்யுத்தம், குத்துச் சண்டை, கராத்தே(ஆண்கள், பெண்கள்), பாரம் தூக்குதல், விநோத உடைப்போட்டி, நடனப் போட்டி (பாட்டுக்கேற்ற நடனம், பரதம்) ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இவற்றில் பங்குபற்ற விரும்பும் வீரர்கள் தங்கள் பெயர்களை 01.08.2011 இற்கு முன்னர் இன்பர்சிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பதிவு செய்யவும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்பு விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் விழா அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-78)

# வெற்றி பெற்ற அணி



மன்னார், ஜூலை 17 மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையில் வைத்தியசாலையின் பொது சுகாதார சேவை ஊழியர்களுக்குஇடையே நடத்தப்பட்ட கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிஆட்டத்தில் வெற்றிபெற்ற வேளாங்கண்ணி விளையாட்டுக்கழக அணியினர் விருந்தினர்களுடன். (ம-601)



ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 24 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்றுக் காலை நிறுவன முன்றலில் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் இடம்பெற்றன. ஆண்களுக்கான முச்சக்கரவண்டி, பெண்களுக்கான சைக்கிள் ஓட்ட நிகழ்வு என்பன இடம்பெறுகின்றன. (ம-23)

# 24 ஆவது கிரிடா சக்தி பயிற்சி முகாம் கிளிநொச்சியில் விமரிசையாக ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

கிளிநொச்சி மாவட்டத்துக்கான 24 ஆவது கிரிடசத்தி பயிற்சிமுகாம் நேற்று முன்தினம் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் வெகு விமரிசையாக ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வில் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுடன் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் றொஹான் ரத்வத்த ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தப் பயிற்சி முகாமில் 12 விளையாட்டுப் போட்டிகள் தொடர்பாகப் பயிற்சிகளை சிறப்புத் தேர்ச்சி பெற்ற விளையாட்டுத்துறையைச் சேர்ந்தோர் வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கொழும்பு விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் றஞ்சினி ஜெயக்கொடி, வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் சி.அண்ணாத்துரை, கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி சதானந்தன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சீனிவாசன், பொலிஸ் இராணுவ உயர் அதிகாரிகள், விளையாட்டு உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தப் பயிற்சி முகாமில் கிளிநொச்சி, கண்டாவளை, பூநகரி, பளை பிரதேசங்களிலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பயிற்சி முகாமில் பங்கு கொண்டனர். (ம-23)

# நெஸ்லே நிறுவனத்தின் ஆதரவுடன் பாடசாலைகளிடையே வலைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

அகில இலங்கைப் பாடசாலைகள் வலை பந்தாட்டச் சங்கம் 'நெஸ்லே' நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே வலைபந்தாட்டப் போட்டிகளை நாளை மறுதினம் காலை 8.30 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடத்தவுள்ளது.

12,14,16,18 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் பாடசாலைகள் தமது விண்ணப்பங்களை 19 ஆம் திகதி காலை மைதானத்தில் சமர்ப்பித்து கலந்துகொள்ள முடியுமென வடமாகாண உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-86)

# 108 ஓட்டங்களால் வென்றது சென்.ஜோன்ஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 17

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 15 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணிகளுக்கான கிரிக்கெட் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும், சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 108 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்று துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 49.5 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 243 ஓட்டங்களைப் பெற்றது.

கி.சாந்துஜன் 65 ஓட்டங்களையும் துவாரகசீலன் 57 ஓட்டங்களையும் லோகதீஸ்வரன் 32 ஓட்டங்களையும் சிந்துஜன் 24 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணி வீரர்களான அஜிந்தன் 10 ஓவர்கள் பந்து வீசி 44 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டையும் தனஞ்சயன் 8 ஓவர்கள் பந்து வீசி 31 ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

244 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணி 48 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

விதுஷன் 27 ஓட்டங்களையும் தனஞ்செயன் 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர்களான கிஷாந்துஜன் 8 ஓவர்கள் பந்து வீசி 6 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கஜுஷன் 7 ஓவர்கள் பந்துவீசி 23 ஓட்டங்களுக்கு துவாரதீபன் 7 ஓவர்கள் பந்து வீசி 6 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள். (த-23)

# பாடசாலைகளின் உதைபந்தாட்டம்; சென்.சாள்ஸ் சம்பியன் வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 17

கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவையொட்டி பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் சென். சாள்ஸ் வித்தியாலயம் சம்பியனைத் தட்டிச் சென்றது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்.சாள்ஸ் வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இரு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.


இதில் சென்.சாள்ஸ் வித்தியாலயம் 4:1 என்ற கோல் கணக்கில் சென்.ஜோன்ஸ் கல்லூரியை வெற்றி பெற்றது.



இறுதியாட்டத்துக்குப் பிரதம விருந்தினராக கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் உப செயலாளர் ஹெமில்ரன் கலந்து கொண்டார். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல்.
## என் வளர்ச்சிக்கு உறுதுணை



இங்கிலாந்து அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் மோர்கன். இலங்கைக்கு எதிரான 20 ஓவர் ஆட்டத்தில் இவர் சிறப்பாக விளையாடினார். இதன் மூலம் டெஸ்ட் அணியில் அவருக்கு இடம் கிடைத்தது. இதற்கு ஐ.பி.எல் போட்டித்தான் காரணம் என்று அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக மோர்கன் கூறியதாவது:

ஐ.பி.எல் போட்டியில் இருந்து நான் ஏராளமான பாடம் கற்றுக் கொண்டேன். ஐ.பி.எல் போட்டியில் தான் என்னால் தற்போது சிறப்பாக விளையாட முடிகிறது. ஐ.பி.எல் போட்டியில் ஆடிய போது டிராவிட்டிடம் இருந்து பல நுணுக்கங்களை கற்றுக் கொண்டேன். மோர்கன் இந்த ஐ.பி.எல் போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது. (15)

# வெல்லுவோம்
## இது கபிலின் கணக்கு



இங்கிலாந்துக்கு எதிரான தொடரை டோனி தலைமையிலான இந்திய அணி கட்டாயம் வெல்லும் என்று கபில் தேவ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி நான்கு டெஸ்ட், ஒரு 'ரி-20', ஐந்து ஒரு நாள் ஆட்டங்களில் விளையாட உள்ளது. இந்தத் தொடர் குறித்து இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் கபில்தேவ் கூறியதாவது:

மேற்கிந்தியத்தீவுகள் மண்ணில் இந்திய வீரர்கள் 2-0 என்று தொடரை கைப்பற்றி இருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். ஆனால் 1-0 என்ற முன்னிலையில் தொடரை கைப்பற்றியுள்ளனர். இங்கிலாந்துக்கு எதிரான தொடரையும் நிச்சயமாக வெல்வார்கள். இங்கிலாந்தில் நடைபெறும் போட்டி என்பதால், இந்திய வீரர்கள் சாதிக்க முடியாது என்று சொல்வதற்கு எந்த காரணமும் இல்லை - என்றார். (15)

# எரிச்சலூட்டும் அணுகுமுறை

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் உள்ள மூத்த வீரர்களின் அணுகுமுறை எரிச்சல் ஏற்படுத்துவதாக இருக்கிறது என்று முன்னாள் அணித் தலைவர் வாசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் தலைவர் யுனிஸ் கான் குறித்து அக்ரம் கூறுகையில், அவர் இரு முறை தலைமை பொறுப்பிலிருந்து விலகினார். இது சரியல்ல. ஒரு தலைவராக இருந்து கொண்டு சிறு சிறு விடயங்களையெல்லாம் பெரிது படுத்துவதா? பிரச்சினையை எடுத்துக் கூறி எதிர்கொள்ள வேண்டும், அதனைக் கொண்டு அஞ்சி ஒளியக்கூடாது.

ஓய்வு பெறுவது பிறகு மீண்டும் வருவது என்பது நகைச்சுவை அல்ல. சில மூத்த வீரர்களின் அணுகுமுறை எனக்கு அலுப்பூட்டுகின்றது. இதனால் சபையும் எரிச்சலடைகிறது. பாகிஸ்தான் கிரிக்கெட்டில் பிரச்சினை என்னவெனில் பயிற்சியாளர் அதிகாரம் வேண்டும் என்று கேட்கிறார். அவர் அணிக்கு பயிற்சி அளித்து அணித் தலைவருக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டும். அணித்தலைவருக்கு மேல் தன்னை பயிற்சியாளர் நினைக்கலாகாது.

இந்திய அணிக்கு ஹரி கிறிஸ்டன் 3 ஆண்டுகள் பயிற்சியாளராக இருந்தார். அவர் எப்போதும் பின்னால் இருந்து தான் செயல்பட்டார். அவ்வாறு தான் ஒரு பயிற்சியாளர் இருக்க வேண்டும். அணித்தலைவர்தான் அணியை களத்தில் வழி நடத்துகின்றார். இவ்வாறான நிலையில் பயிற்சியாளர்கள் ஏன் அதிகாரத்தை நோக்கி விழைகின்றனர் என்பது எனக்குப் புரியவில்லை என்று தெரிவித்துள்ளார் வாசிம் அக்ரம். (15)

# சச்சினின் சதம்;
## சதம் கடக்க வரவேற்கிறேன்
### - ஸ்ரோரஸ்



இந்திய அணியின் 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின், 100 ஆவது சதம் அடிப்பதை தலை வணங்கி வரவேற்கிறேன். சர்வதேச டெஸ்ட் அணிகள் தரசவரிசையில் முதலிடத்தை பிடிக்க, இந்திய அணியின் சவாலை சந்திக்கத் தயாராக உள்ளோம், என்று இங்கிலாந்து அணியின் தலைவர் ஸ்ரோரஸ் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கின்றது. இந்தத் தொடரில் இந்திய அணியின் மூத்த வீரர் சச்சின், சர்வதேச கிரிக்கெட் அரங்கில் 100 ஆவது சதம் அடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இது குறித்து ஸ்ரோரஸ் கூறியதாவது:

எந்த ஒரு தொடராக இருந்தாலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும் சச்சின்தான், எங்களுக்கு முன்மாதிரி. கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக கிரிக்கெட்டில் நீடித்து இருக்கும் இவர், எங்களுக்கு எதிரான தொடரில் நிச்சயம் சாதிப்பார் என்று நம்புகிறேன். இங்கு சச்சின் 100 ஆவது சதம் அடிப்பதை வரவேற்கின்றேன்.

இது உண்மையில் வியக்கத்தக்க சாதனை. இந்த இலக்கை எட்டியது மட்டுமல்லாமல், இவர் தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட்டில் நீடித்திருக்க விரும்புகிறார். எவ்வித நெருக்கடியான நிலையிலும், மனவலிமை உதவியுடன் துடுப்பாட்டத்தில் மீண்டு விடுவார். மிகவும் பணிவான குணமுடைய சச்சின், மற்றவர்களிடமும் மரியாதை காட்டுவார்.

டெஸ்ட் அரங்கில் 'நம்பர்-1' இடத்தில் உள்ள இந்திய அணி, கடந்த சில ஆண்டுகளாக வெற்றி, தோல்வி கலந்த கிரிக்கெட்டை வெளிப்படுத்தி வருகின்றது. தற்போதைய பயிற்சியாளர் டங்கன் பிளட்சர், இதற்கு முன்னர் இங்கிலாந்து அணிக்காக செயற்பட்டுள்ளார். இப்போது இந்திய அணிக்கு பயிற்சி. தரும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இதனால் எங்களது பலம், பலவீனங்கள் நன்கு தெரியும்.

இருப்பினும் ஒட்டுமொத்தமாக பார்க்கும்போது இந்திய அணியை முந்துவது என்பது கடினம். இந்த நிலையில் இந்திய அணியின் சவாலை சந்திப்பது முதலிடத்தை பெறவுள்ள எங்களை, சிறப்பான அணியாக மாற்றும். தவிர சொந்தமண் பலமும் எங்களுக்கு சாதகமாக இருக்கும்.

எங்களைப் பொறுத்தவரையில், 'நம்பர்-1' இடத்தை பெறுவது தான் எங்கள் லட்சியம். இதைத் தான் வீரர்கள் எப்போதும் சொல்லிக் கொண்டு இருப்பார்கள். அதே நேரம் இந்த தரவரிசை குறித்து அதிகம் கவலைப்படாமல், தொடர்ந்து சிறப்பான கிரிக்கெட்டை வெளிப்படுத்துவதில் மட்டும் கவனம் செலுத்தி வருகின்றோம்.

தற்போது இதற்கான வாய்ப்பு கூடி வந்துள்ளது. இந்தத் தொடரில் இந்தியாவை வென்று, 'நம்பர்-1' இடத்தை பெற்றால், மிகச் சிறப்பாக இருக்கும். ஒரே அணியாக அசத்தும் எங்களுக்கு இது அபாரமான முன்னேற்றம். ஆனால் இத்துடன் வேலை முடிந்து விட்டது என்று சொல்லமுடியாது. ஏனெனில், இது போன்ற எண்ணங்கள் எப்போதும் அபாயமானது.

மற்றபடி தொடரின் முடிவில் எது நடந்தாலும் கவலையில்லை. கடந்த 6 முதல் 12 மாதங்களாக முயற்சித்து வந்த எங்கள் லட்சியத்தை, மீண்டும் தொடருவோம். ஏனெனில் இந்த சவால் எப்படிப்பட்டது என்று எங்களுக்கு நன்றாகத் தெரியும்.

இந்திய துணைக் கண்டத்து அணிகள் கடந்த சில ஆண்டுகளாக 'ஷோர்ட் பிட்ச்' பந்துகளை நன்கு சமாளிக்க கற்றுக்கொண்டு விட்டனர். இந்தத் தொடரிலும் அணியின் மூத்த வீரர்களுக்கு, இது ஒரு தொல்லையாக இருக்காது என்பது உறுதி.

மற்றப்படி, இந்திய அணியினருக்கு குறிப்பிடத்தக்க வகையில் எந்த பலவீனமும் இருப்பதாக தெரியவில்லை. இருப்பினும், கடந்த முறை டிரம்லட் இந்திய அணிக்கு பெரிதும் சிரமம் கொடுத்தார். இப்போது நல்ல அனுபவம் பெற்ற நிலையில், தொடர்ந்து அசத்துவார் என்று நம்புகிறேன் - என்றார். (15)

# ஸ்மித்துக்கு சிகிச்சை

தென்னாபிரிக்காவின் முன்னாள் அணித் தலைவர் ஸ்மித் முழங்கால் காயத்திற்கு கேப்டவுனில் அறுவை சிகிச்சை மேற்கொண்டார்.

கடந்த உலகக் கிண்ணத் தொடருடன் அணித்தலைவர் பதவியை ஸ்மித் ராஜினாமா செய்தார். நான்காவது ஐ.பி.எல் தொடரில் அறிமுக அணியான புனேவாரியர்ஸ் அணியில் இடம் பெற்றிருந்தார். இந்த ஆட்டத்தின் போது முழங்காலில் காயம் ஏற்பட்டது. இதற்குப் கேப்டவுனில் சிகிச்சை மேற்கொண்டார். சமூக வலைத் தளமான 'ருவிட்டரில்' அறுவை சிகிச்சைக்காக மருத்துவமனை செல்வதாக குறிப்பிட்டுள்ளார். (15)



# ருமேஸ் ரத்னாயக்க
## பயிற்சியாளராக நியமனம்

இலங்கை அணியின் புதிய பயிற்சியாளராக ருமேஷ் ரத்னாயகே நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணியின் பயிற்சியாளராக டிரவர் பெய்லிஸ் இருந்தார். கடந்த உலகக் கிண்ணத் தொடருடன் பயிற்சியாளர் பதவியிலிருந்து விலகினார். அடுத்து ஆஸ்திரேலியாவை சேர்ந்த ஸ்டூவர்ட் லோ பயிற்சியாளராக இருந்தார். தற்போது இவரும் விலகி உள்ளதால் இலங்கை அணியின் தற்காலிக பயிற்சியாளராக ருமேஷ் ரத்னாயகே நியமிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து இலங்கை கிரிக்கெட் சபையின் தலைமை அதிகாரி தர்மதாசா கூறியதாவது:

புதிய பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள ருமேஷ் இலங்கையைச் சேர்ந்தவர். இவர் ஒரு முன்னாள் கிரிக்கெட் வீரர். இலங்கை அணிக்காக 23 டெஸ்ட் மற்றும் 70 ஒரு நாள் ஆட்டங்களில் பங்கேற்றுள்ளார். அடுத்த மாதம் தொடங்கும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்று டெஸ்ட், ஒரு 'ரி-20', மற்றும் ஐந்து ஒரு நாள் ஆட்டங்களுக்கு மட்டும் பயிற்சியாளராக செயற்படுவார்.

### யு.டி.ஆர்.எஸ். இல்லை

போட்டிகளின் போது நடுவரின் முடிவை மறுபரிசீலனை (யு.டி.ஆர்.எஸ்.) முறையைப் பயன்படுத்தினால் அதிகமாக செலவாகும். தற்போது எங்களுக்கு அந்தளவு 'ஸ்பொன்சர்' கிடைக்கவில்லை. இதனால் யு.டி.ஆர்.எஸ். முறையை இந்தத் தொடரில் பயன்படுத்த போவதில்லை - என்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
17 ஜூலை 2011 ஞாயிற்றுக்கிழமை

## சுதுமலை வடக்கு ஈஞ்சடி அருள்மிகு ஸ்ரீ சாமுண்டாம்பிகா சமேத ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானத்தின் தேர்த் திருவிழா

இன்று (17.07.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு அபிஷேகம், அதனைத் தொடர்ந்து முற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று, நண்பகல் 12.00 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணிப்பார். தொடர்ந்து பிற்பகல் 2.00 மணிக்கு பச்சை சாத்துதல் இடம்பெறும்.

நாளை (18.07.2011) திங்கட்கிழமை தீர்த்த உற்சவம் இடம்பெறும். 7.00 மணிக்கு அபிஷேகம் முற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை, தீர்த்தோற்சவம், மாலை திருவூஞ்சல், மௌன உற்சவம், ஆச்சார்ய உற்சவம் நடைபெறும். மறுநாள் (19.07.2011) 6.00 மணிக்கு முருகனுக்குத் திருக்கல்யாணம் நடைபெறும் என்பதனை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

உபயகாரரும், ஈஞ்சடி ஸ்ரீ ஞான வைரவர்
(5931) (34) தர்மகர்த்தா சபையும்.

## வேலை வாய்ப்பு

1. சிட்டை எழுதுனர்
2. கணக்காளர்
3. மில் வேலை
4. சமையல் வேலை

சமையல் வேலைக்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பெண்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

மற்றைய வேலை ஆள்களுக்கும் விரும்பின் தங்குமிட வசதி, உணவு வசதி உண்டு.

**ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்ஸ்**
பலாலி வீதி, திருநெல்வேலி.
தொடர்பு: 0777769231

## மோட்டார் சைக்கிள் மோதி யுவதி படுகாயம்

மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் யுவதி ஒருவரை மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளார். இதனால் கடும் உட்காயங்களுக்குள்ளான அவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெறுகிறார்

இந்தச் சம்பவம் சுன்னாகத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் துர்க்காபுரம், தெல்லிப்பழையைச் சேர்ந்த எஸ். சிரோஜினி (வயது-17) என்ற யுவதியே கடும் உட்காயங்களுக் குள்ளானார். மோட்டார் சைக்கிளால் மோதிவிட்டுச் சென்ற நபர் அரச உத்தியோகத்தர் என இவரது உறவினர்கள் தெரிவித்தனர். (ஐ-4)

## விபத்தில் காயம்

மோட்டார் சைக்கிள் விபத்தில் தலையில் படுகாயமடைந்த நபர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விபத்துச் சம்பவம் கோப்பாய் சந்தியை அண்மித்து நேற்று மு.ப இடம் பெற்றது. இந்தச் சம்பவத்தில் அள்வெட்டியைச் சேர்ந்த ஏ.கில்டன் (வயது30) என்பவரே படுகாயமடைந்தவராவார்

## Vacancy

யாழ் நகரில் இயங்கிவரும் கணனி நிறுவனத்திற்கு MS Office, DTP, Web Designing, Hardware Technology, Internet & E-Mail, கற்பிக்கக் கூடிய ஆண்/பெண், கணனி விரிவுரையாளர்கள் தேவை.

Computer Typesetting, Designing, தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை குறைந்தது 2 வருட அனுபவம் விரும்பத்தக்கது.

Contact : 021-2224459/ 0774192275

## வீடு வாடகைக்குண்டு

45/1, முதலாவது ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் இடத்தில் இரண்டு மாடி வீடு வாடகைக்குண்டு. ஒவ்வொன்றும் 3 அறையும், சமையல் அறையும், நவீன வசதிகளுடன் கூடிய குளியலறை என்பன உண்டு.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் விரும்பத்தக்கது, தரகர் தேவையில்லை.
தொடர்பு- 0774530774

UK, USA, AUSTRALIA, CANADA, FRANCE, SWITZERLAND, NEW ZEALAND
ஆகிய நாடுகளிற்கான

## பண வைப்புகள்

(FINANCIAL SPONSORSHIP)
வங்கிகளினூடாக செய்து கொடுக்கப்படும்.

இந்தியா, பாங்கொக், டுபாய், துருக்கி, கிறீஸ், இத்தாலி, பிரான்ஸ், மலேசியா ஆகிய நாடுகளுக்கான விசா ஒழுங்குகள்

ஐரோப்பிய நாடுகளுக்கான மாணவ, சுற்றுலா விசா ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

Foresight

RACAS TRAVELS & TOURS (Pvt) Ltd.
NO. 7/1, W.A. SILAVA MAWATHA, COLOMBO 06.
TEL: 0773 152327 (SARANGAN)
0778 885903 (NIZRINA) 011 2583575

## அறிந்து கொள்வோம் ஆரோக்கிய வாழ்வை!

பெரும் வியாதிகளிலிருந்து விடுபடுங்கள். ஆரோக்கியத்தை இலவசம் ஆக்கிக் கொள்ள ஓர் அரிய வாய்ப்பு!

காலம்: 18.07.2011
மாலை 3 மணி
இடம்: இல.33, அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
தொடர்பு: 0714871379

தீராத நோயால் அவதிப்படுகிறவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம்! (சி/1810)

## மனமார்ந்த நன்றிகளும் பாராட்டுக்களும்



எமது நுண்கலைப் பட்டதாரிகளுடைய ஆசிரியர் நியமனத்தில் ஆரம்பம் முதலே மிகவும் அக்கறையுடனும் சிரத்தையுடனும் நியமனம் கிடைக்கும் வரை தளர்வுறாது செயற்பட்ட எம் உடன்பிறவாத சகோதரர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளர், யாழ். மாவட்ட இளைஞர் அணி ஸ்தாபகர்

கௌரவ

**திரு. அங்கஜன் இராமநாதன்**

அவர்களுக்கு எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இவரது சேவைகள் மேன்மேலும் எம் மக்களுக்குத் தொடர எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

என்றென்றும் நன்றிகளுடன்
அழகியல் கலைப் பட்டதாரிகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலக கட்டட உரிமையாளர்
**சிற்றம்பலம் சுப்பிரமணியம்**
அவர்களின் துணைவியார்

**திருமதி சுப்பிரமணியம் ராஜராஜேஸ்வரி**
(மணியக்கா)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.
கூட்டுறவுச் சங்கம்,
பிரதான வீதி, பண்டத்தரிப்பு. (சி/1817)

பணிப்பாளர்,
பணியாளர்கள்.

## கடைகள் வாடகைக்கு

பிறவுண் வீதி, ஆடியபாதம் வீதி ஆகியவைகள் சந்திக்கும் இடத்தில் நல்லூர் பிரதேச சபையின் உப அலுவலகத்துக்குப் பின்னால் யாழ்.தொழில் நுட்பக் கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு அருகில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியில் 300 சதுர அடி விஸ்தீரணமும் வாகனத் தரிப்பிடவசதியும் கொண்ட (காரியாலய பாவனைக்கு உகந்தது) இரண்டு கடைகள் வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0777743334, 0773502612

## கார் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள சுசுக்கி லியானா JV 27-- கார் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு-
0713267826, 0771673393

## கண்ணீர் அஞ்சலி



14.07.2011 இல் காலமான, எமது பிரதி அஞ்சல்மா அதிபர் (வடக்கு) நல்லதம்பி இரத்தினசிங்கம் அவர்களின் துணைவி

**இரத்தினசிங்கம் சித்திறரபா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அஞ்சல் அதிபர், உதவி அஞ்சல் அதிபர், உப அஞ்சல் அதிபர்கள், ஊழியர்கள்,
அஞ்சல் குடும்பம்,
பளை.

## மரண அறிவித்தல்

### திருமதி வேலாயுதம் சின்னத்தங்கம்



நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதம் சின்னத்தங்கம் (15.07.2011)வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் (ஆசாரி) அன்பு மனைவியும், நாகேஸ்வரி, புவனேஸ்வரி, துரைராசா, சிவராசா(கனடா), கனகராசா(கனடா), மங்களேஸ்வரி, சுசிலாதேவி(கனடா), மகேந்திரராசா ஆகியோரின் அன்புத் தாயும், முத்தையா, சாம்பசிவம், மங்கையர்க்கரசி, நந்தினி, புவனேஸ்வரி, பாலச் சந்திரன், நாகநாதன், கௌரி ஆகியோரின் அன்பு மாமியும், இராமலிங்கம் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, செல்லமுத்து, வள்ளியம்மை, பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2011) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (5982)

தகவல்:
குடும்பத்தினர்.

## கிருபா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

சாவகச்சேரியில்
A.9வீதி சாவகச்சேரி,
0214923202, 0213201818

பெண்களுக்கு நவீன காரில் பயிற்சி வழங்கப்படும்.
021 4923200
(கவிதா)

- குறிப்பிட்ட காலப் பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்
- எழுத்துப் பரீட்சையில் சித்தி அடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
- தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
- சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான மருத்துவ சான்றிதழ் (மெடிக்கல்) எமது காரியாலயங்களிலே பெற்றுக்கொள்ளலாம்.
- சாவகச்சேரியில் பதிவுகளை மேற்கொள்வோருக்கு அழகிய குடை ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படும். (கையிருப்பு உள்ளவரை)

யாழ்ப்பாணம். 0212224353 | கிளிநொச்சி 0212285505 | நெல்லியடி 0213006550 | விசுவமடு 0213201515

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பந்தன், மனோகணேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
னர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வினோநோதராதலிங்கம் ஆகியோரும் உரையாற்றுகின்றனர்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோரும் உரையாற்றுவர்.

இக்கூட்டத்தில் வேட்பாளர் அறிமுகமும் இடம்பெறவிருக்கிறது. (ஐ)

## முடிந்தால் 6 மாதத்துள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வலிகாமம் மேற்கு பிரதேச சபைப் பிரிவில் உள்ள குளத்தடி நாச்சிமார் கோயில் முன்றிலில் நடந்த அரச நிகழ்வில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ஆற்றிய உரைக்குப் பதிலளிக்கும் விதத்தில் அவர் இந்த ஊடக அறிக்கையை விடுத்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தேர்தல் விதிமுறைகளை தெற்கின் சிங்கள அரசுகள்தான் ஏற்படுத்துகின்றன. அவற்றில் தமிழர்களின் பங்களிப்பு ஏதுமில்லை. ஆனால், இங்கே வந்து அந்த விதிமுறைகளை அமைச்சர்களாகிய நீங்கள்தான் அப்பட்டமாக மீறுகிறீர்கள். அரச வளங்களைத் துஷ்பிரயோகம் செய்கிறீர்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஒழுக்கம் பற்றி தனது ஒவ்வொரு பேச்சிலும் நாட்டுக்குப் போதிக்கிறார். ஆனால் அவரது சகோதரரான நீங்களோ தேர்தல் விதிமுறைகளை இங்கு அடியோடு மீறுகிறீர்கள். அரச வளங்களை முறைகேடாகப் பயன்படுத்துகிறீர்கள்.

இப்படிச் சொல்வது ஒன்று செய்வது ஒன்று என்று எந்த மானமுள்ள தமிழ்க் கட்சியும் செயற்பட்டதில்லை. நாங்கள் அன்றும் இன்றும் என்றும் எமது மக்களின் உரிமைகள் பற்றித்தான் பேசுகின்றோம். அவற்றைக் கொடுப்பதற்கு நீங்கள்தான் தொடர்ந்து மறுத்து வருகிறீர்கள். அதன் மூலம் இனப்பிரச்சினையை நீடிக்கிறீர்கள்.

ஜனாதிபதி நினைத்தால் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அடுத்த 6 மாதங்களில் தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய ஒரு தீர்வை முன்வைக்க முடியும். உங்களால் அதனைச் செய்ய முடியுமா? நான் சவால் விடுகிறேன், நீங்கள் அப்படிச் செய்தால் அரசியலைவிட்டே நான் ஒதுங்குகிறேன்.

காலம் காலமாகத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைக்கத் துணிவற்ற இனத்தின் அமைச்சராக இருந்து கொண்டு தமிழ்க் கட்சிகள் தேர்தலுக்காகக் குற்றஞ் சுமத்தாதீர்கள். அது உங்களுக்கு வெற்றியைப் பெற்றுத் தராது.

இறுதிப் போரில் உங்கள் படையினர் செய்தார்கள் என்று சொல்லப்படும் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தும்படி உலகம் முழுவதும் கேட்கிறது. நிகழ்த்தப்பட்ட அநீதிகள் நீதியை நிலைநிறுத்தும்படி உலகம் சொல்கிறது. ஆனால், நீங்கள் அது பற்றி எமது மக்கள் முன் எதுவும் வாயே திறக்கவில்லை.

போரில் கொல்லப்பட்டவர்களைக் கணக்கெடுக்கக்கூட இன்னும் நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. கொன்றவர்களை அடையாளம் கண்டால்தானே கொலை செய்தவர்களை அடையாளம் காணமுடியும். ஆனால் அவற்றை நீங்கள் தவிர்க்கிறீர்கள். ஏன் என்றால் பயம்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க இதுவரை என்ன செய்திருக்கிறீர்கள். இங்கே தங்கள் உறவுகளைக் காணோம் என்று மனைவியரும் தாய்மாரும் பிள்ளைகளும் புலம்பித் தவிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு தீர்வு சொல்வதற்கு வக்கற்ற உங்களால் எப்படி தமிழர்களுக்கு நீதியான தீர்வை முன்வைக்க முடியும்?

முதலில் நீங்கள் நேர்மையாக இருங்கள், அதன் பின்னர் மற்றவர்கள் மீது குற்றஞ் சாட்டலாம். நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்று காலத்தை இழுத்தடிக்காமல் தமிழர்களுக்கு என்ன தீர்வைக் கொடுப்பீர்கள் என்று இந்தத் தேர்தலிலேயே மக்களுக்குச் சொல்லுங்கள்.

அது முடியாது என்றால், இனிமேல் தமிழ் மக்களிடம் வராதீர்கள். - இப்படி அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## போர்க்குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுப்பினர்களும் மனித உரிமை ஆர்வலர்களும் அழுத்தமாகக் குரல் கொடுத்துள்ளனர்.

"இந்த ஆவணப்படம், போர்க் குற்றங்கள் தொடர்பிலான அனைத்துலக விசாரணைக்கு அமெரிக்காவில் ஏற்கனவே எழுப்பப்பட்டு வரும் குரல்களுக்கு மேலும் வலுச் சேர்த்துள்ளது'' என்று ஏ.எவ்.பி. செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

அமெரிக்க காங்கிரஸ் வளாகத்துக்குள் நேற்றுமுன்தினம் 'சிறிலங்காவின் கொலைக்களம்' திரையிடப்பட்டது. அதனைப் பார்த்த அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினரும் காங்கிரஸின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமைக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளவருமான ஜேம்ஸ் மக்கோவென், "மோசமான நடத்தையால் கொடூரமான மனிதர்களுக்கான எடுத்துக் காட்டா இவர்கள் இருக்கிறார்கள்'' என்று தெரிவித்தார்.

"இந்தக் காட்சிகள் சாதாரணமாக அதிர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் மேலான உணர்வுகளை ஏற்படுத்துகின்றன. அத்துடன், இந்தக் குற்றங்களைப் புரிந்தவர்களைப் பொறுப்புக்கு உள்ளாக்குவதற்கான அனைத்துலக விசாரணையைக் கோருவதற்கான சக்தி மிக்க ஆதாரங்களாவும் இவை விளங்குகின்றன'' - என்றும் மக்கோவென் கூறினார். அவர் அமெரிக்க அதிபர் ஒபாமாவின் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்.

"இலங்கை அரசு இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்குத் தவறும்பட்சத்தில் அல்லது அதற்கு விரும்பாத நிலையில் அனைத்துலக சமூகம் நிச்சயம் எதிர் வினையாற்றும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

போர்க் குற்றங்களில் ஈடுபட்டார்கள் என்று நிரூபிக்கப்படுபவர்கள் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்திய மக்கோமென், அவர்கள் அரச சார்பார்களானால் என்ன புலிகள் சார்பானவர்களாக இருந்தால் என்ன நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும் என்றார். (உ)

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதாவது சட்டம், நீதி ஆகிய அனைத்தும் அவர்களுக்கு ஏற்றவகையில் மாற்றப்பட்டிருக்கின்றன. அதனைப் பயன்படுத்தி அரசு தவிர்ந்த ஏனைய கட்சிகளுக்கு அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலேயே எமது கட்சி மீது பல வன்முறை சம்பவங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் இதுவரை எமது கட்சிக்கு எதிரான 4 வன்முறைச் சம்பவங்களுக்கு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளோம். சில முறைப்பாடுகளை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கின்றனர் - எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள ஜே.வி.பி. அலுவலகத்திலிருந்து ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மற்றும் கட்சித் தொண்டர்கள் கிளிநொச்சி நகரை நோக்கி நடைபயணமாக பயணித்து தமது தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டனர். (ஐ-15-6)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்கான திட்டம் தயாரிக்கப்பட்டது. இதனடிப்படையில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா யாழ்ப்பாணத்துக்கு வந்து அரியாலை நாவலடியில் அடிக்கல் நட்டார்.

இதன் பின்னர் கடந்த 7 மாத காலமாக எந்தவிதமான வேலைக்களும் மேற்கொள்ளப்படாமல் அந்தத் திட்டம் கைவிடப்பட்ட நிலையில் இருந்தது. தற்போது மீண்டும் அந்தச் செயற்றிட்டம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் முன்னோடியாக 150 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இதனடிப்படையில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 50 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இதில் இந்திய வெளிவிவகார அமைச்சர் அடிக்கல் நட்ட அரியாலை நாவலடியில் முழுவீச்சில் வீடமைப்புத் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான ஒப்பந்தகாரர் இந்திய அரசினாலேயே நியமிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலும் அடுத்த மாத ஆரம்பத்தில் முன்னோடி வீட்டுத் திட்டப் பணிகள் நிறைவடையும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-15)


### விற்பனைக்கு

தட்டார் தெரு, சங்கத்தானை, சாவகச்சேரியில் இத்தியடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் (சாவ. ஆரம்பப் பாடசாலைக்கு பின்பகுதி) 4½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. A-9 றோட்டில் இருந்து 250M தூரத்தில் உள்ளது.
தொடர்பு : 0774071551

### தேவை

அரைக்கும் ஆலை, மோட்டார் வாகன சுத்திகரிப்பு நிலையம் என்பவற்றில் அனுபவம் உள்ள வரும் பழக விரும்புபவரும் தேவை. தொடர்பு பிருந்தா மில்ஸ், இல. 18, நக்கா றோட், யாழ்ப்பாணம். T.P.0772231096

### ஆள் தேவை

முன்அனுபவம் உள்ள (வானில் பொருள்கள் விநியோகம் செய்ய) வேலை ஆள் தேவை. ஆங்கில அறிவு அவசியம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு : 0773923036

### விற்பனைக்கு

36-1XXX இலக்கமுடைய உழவு இயந்திரம் பெட்டியுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு :0777804493

### நாய்கள் விற்பனைக்கு

கிறேடன் ஆண், பெண் கலர் பிறவுண் 2 வயது 1½ வயது பிளாக்கன்டேன் அல்சேசன் ஆண், பெண் கலர் கறுப்பு வயது 2, டோமன் ஆண் கலர் கறுப்பு வயது 1½, அல்சேசன் ஐரிஸ் பெண் வயது 1½ அல்சேசன் செப்பேட் ஆண், வயது 2 ½
48/11, தேங்காய்மூலை, கொக்குவில் மேற்கு. தொ.பே. :021 490 3565, 0779185723

### காணி விற்பனைக்குண்டு

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்குப் பின்புறமாக குருமகாராஜி பஜனை நிலையத்துக்கு அருகில் 1½ பரப்புக் காணி கிணற்றுப் பங்குடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு-0772968879

### வேலையாள்கள் தேவை

போன் சொப் ஒன்றுக்கு கணினி அறிவுள்ள பெண் பிள்ளைகள் தேவை. சுயவிவரங்களுடன் நெரில் வரவும்.
தொடர்பு:- தான்ஜா போன் அன் வோச்,
274, K.K.S. Rd, Jaffna. T.P- 0774540796

### அறைகள் வாடகைக்கு

யாழ்ப்பாணம், கச்சேரி நல்லூர் வீதியில் கச்சேரிக்கு அருகிலுள்ள மாடி வீட்டில் சகல வசதிகளும் கொண்ட அறைகள் வாடகைக்குண்டு. வேலைசெய்யும் பெண்கள் விரும்பத்தக்கது. தொடர்பு- 0778808411


## மரண அறிவித்தல்கள்



### கந்தையா தையல்நாயகி

சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தையல்நாயகி நேற்று (16.07.2011) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், தெய்வானைப்பிள்ளையின் அன்புச் சகோதரியும், சச்சிதானந்தமூர்த்தியின் அன்புத் தாயும், தெய்வநாயகியின் அன்பு மாமியும், சாந்தகுமார், செந்தில்குமார், சசிக்குமார், ஜெயக்குமார், சிவகுமார் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கனகம்மா, காலஞ்சென்ற இராசம்மா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2011) ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு வேம்பிராய் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மருதடி வீதி, சாவகச்சேரி
வடக்கு, சாவகச்சேரி.

தகவல்:
க.சச்சிதானந்த மூர்த்தி (மகன்)



### விசுவலிங்கம் கனகராசா

முன்னாள் உறுப்பினர், நெடுந்தீவுப் பிரதேச சபை)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் கனகராசா கடந்த 14.07.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2011) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

32/11, ஓட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
கா.இராசலிங்கம் (மருமகன்),
நெ.ப.நோ.கூ. சங்கம்.

(5941) (34)

## மரண அறிவித்தல்



### திருமதி சுதாகரன் அகிலா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கச்சேரி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுதாகரன் அகிலா நேற்று முன் தினம் (15.07.2011) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் அருமைராசா - வைகுந்தாதேவி தம்பதியரின் மகளும், சுப்பிரமணியம் - சந்திராணி தம்பதியரின் மருமகளும், சுதாகரனின் அன்பு மனைவியும், அஜிந்தினி, ரங்கன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், துஷியேந்திரன், கார்த்திகா, சுதர்சினி, சுஜீபன், சுதர்சன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூத்த விநாயகர் வீதி,
கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அருமைராசா (தந்தை)

## கண்ணீர் அஞ்சலி



எமது மதிப்புக்குரிய பிரதி அஞ்சல்மா அதிபதி (வடக்கு) நல்லதம்பி இரத்தினசிங்கம் அவர்களின் பாசமிகு துணைவியார்

### திருமதி இரத்தினசிங்கம் சித்திரூபா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருடன் நாமும் துயர் பகிர்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோப்பாய் அஞ்சலகம்,
அச்செழு, கோப்பாய் வடக்கு,
நீர்வேலி, சிறுப்பிட்டி,
உப அஞ்சலகங்கள்.

அஞ்சல் சமூகத்தினர்.

(5942) (34)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சித் தேர்தல்கள் - 2011
வலிமேற்கு பிரதேச சபை

இது எங்களின் தேசம்
இதை நாமே ஆளுவோம்
உணர்வுடன் அளிப்போம் வாக்கை
வீட்டுச் சின்னத்துக்கு
திருமதி நா.ஐங்கரன்
1

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

50% விலைக்கழிவு

21" சொனி 14500/=
25" சொனி 19000/=
29" சொனி 21000/=
1 வருட உத்தரவாதம்
2.1 சப்வூபர் 5000/=
CD, கசட், FM ரேடியோ 2800/=
DVD றெக்கோட் பிளேயர் 5000/=
மேலும் பல பொருள்கள் குறைந்த விலையில்
குளிர்சாதன பெட்டி ரூபா 24000/= இல் இருந்து

NEW SONY ELECTRONICS
இல.220, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
Hot Line : 0774531955

ரூபா 50,000/- க்கு
மேல் மாத வருமானம் பெற
இன்றே முதலீடு செய்யுங்கள்

ஐஸ் கிரீம் இயந்திரம்

கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டின், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரோசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.

- ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிரீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா / வெனிலா / சொக்கலேட்
- சுயமாகவே தயாரிக்கும் திறன்.
- இலவச பயிற்சி
- உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை

BRAND NEW

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(MEMBER OF PLUSS INT.)
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.
Hotlines: 077 391 8870, 077 1066902

# வவுனியா சிறையில் கைதிகள் உண்ணாவிரதம்

வவுனியா சிறைச்சாலையிலுள்ள அனைத்து அரசியல் கைதிகளும் நேற்று சனிக்கிழமை உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர். இவர்கள் தொடர்ந்து உண்ணாவிரதத்தில் ஈடுபடவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா சிறைச்சாலையில் ஏற்கெனவே உண்ணா விரதத்தில் ஈடுபட்ட நான்கு அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து ஏனைய அரசியல் கைதிகளும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறும்அவர்களுக்கான வழக்கு விசாரணையை துரிதப்படுத்துமாறு கோரியும் விடுதலை செய்யப்பட்ட தங்களை மீண்டும் கைதுசெய்யக் கூடாதெனக் கோரி மேற்படி கைதிகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறினார். ஏற்கெனவே உண்ணா விரதத்தில் ஈடுபட்ட நான்கு கைதிகளின் உடல்நிலை மோசமாகி வருவதாகவைத்தியர்கள் மூலம் தெரிய வருவதாகவும் சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டார்.

மேற்படி தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளமை குறித்து நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமுக்குதெரியப்படுத்தியிருந்தோம். அவர்களும் இது குறித்து ஏனைய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியிருந்தனர். இருப்பினும் எந்தவித பதிலும் கிடைக்கவில்லை.

நாட்டில் யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்களாகிவிட்டன. மேற்படி கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கி அவர்கள் சமூகத்துடன் இணைக்கப்பட வேண்டுமெனவும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூறினார். (ம)

VACANCY

மின்சார இலத்திரனியல் பொருள்கள் விற்பனையில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தேவை. நேரில் வரவும்.

JAFFNA ELECTRICAL
94 (6) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0212222353

INFORMATION TECHNOLOGY PARK
UNDER THE PURVIEW OF THE
MINISTRY OF TECHNOLOGY AND RESEARCH
127, K.K.S Road, Jaffna, Sri Lanka
T.P:- 021 - 2223641
Fax:- 021 - 2223643

இடை வரவு விரிவுரையாளர்கள் தேவை

தகவல் தொழில் நுட்பபூங்காவின் கல்விச் செயற்பாடுகளை விரிவுபடுத்த தீர்மானித்துள்ளோம். அதன் பொருட்டு கணினித்துறை சார்ந்த பாடங்களை போதிப்பதற்கு இடை வரவு விரிவுரையாளர்கள் வேண்டப்படுகின்றார்கள். தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகள் 25.07.2011 (திங்கட்கிழமை) க்கு முன்பதாக கீழ்வரும் முகவரிக்கு தமது சுயவிவரக் கோவையை தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் பிரதிகள், தம்மால் விரிவுரையாற்றக்கூடிய கணினித்துறை சார்ந்த பாடங்கள் ஆகியவை உள்ளடங்கலாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும். தபால் உறையின் இடது பக்க மூலையில் "இடை வரவு விரிவுரையாளருக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:-
நிறைவேற்று அதிகாரி,
தகவல் தொழில் நுட்பபூங்கா,
127, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

★விண்ணப்பதாரிகள் கணினித்துறை சார்ந்த பட்டங்களை பெற்றிருத்தல் அல்லது அதற்கு இணையான தகைமைகளையும், போதிய கற்பித்தல் அனுபவத்தையும் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

★நேர்முகப்பரீட்சை மூலம் இடை வரவு விரிவுரையாளர் தேர்வு நடைபெறும் என்பதுடன் விரிவுரையாற்றும் மணித்தியாலங்களின் அடிப்படையில் கொடுப்பனவு வழங்கப்படும்.

-நிறைவேற்று அதிகாரி- (சி/1805)

உள்நாட்டு வெளிநாட்டு துரித கடிதங்கள் பொதிகள் பரிமாற்ற சேவை

Our Agents DHL aramex SriLankan Cargo ups

மஹாராஜா Food நிறுவனத்தினர் யாழ்.நகரில்...!

உங்கள் வெளிநாட்டில் உள்ள உறவுகளுக்கு பொருள்களையும் ஆவணங்களையும் குறைந்த செலவில் பாதுகாப்பாகவும் விரைவாகவும் உத்தரவாதத்துடனும் அனுப்பி உறவை வலுப்படுத்த நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்.

உங்கள் வெளிநாட்டு உள்நாட்டு உறவுகள் அனுப்பும் பொதிகளை எமது யாழ்.கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

G.T.V Enterprises (Pvt) Ltd.
ஜீ.ரீ.வி என்ரர்பிரைஸஸ் (பிறைவேற்) லிமிட்.

11Kg இற்கு அதிகமான பொதிகளிற்கு விசேட கட்டண சலுகை

உள்நாட்டிற்கான பொதிகள், கடிதங்கள் நாட்டின் எப்பாகத்திலும் விநியோகிக்கப்படும்.

யாழ்ப்பாணம்:- #225, Kasthuriyar Road, Jaffna. T.P: 0212224338.
#272, K.K.S. Road, Jaffna. T.P:0212224825.
கொழும்பு: #18/3,Dr.E.A Cooray Mawatha, Wellawatte. T.P: 0112360926, 0112259849.
(49)

Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ். கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட் சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
குறிப்பு:-ஜேர்மன் மொழி Deutsch புதிய வகுப்புக்கள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.
GOV.Reg.No W/A 76795 T.P : 0774842464, 0213216928, 0779927117

வீடு/ அறை வாடகைக்குத் தேவை

தனியார் நிறுவனமொன்றில் முகாமை யாளராகக் கடமையாற்றும் ஒருவருக்கு நவீன தளபாட உபகரண வசதிகளுடன் இரண்டு அறைகளுடன் கூடிய ஒரு வீடு அல்லது அறை உடனடியாகத் தேவை.
தொடர்புகளுக்கு: T.P-0777360522

Personal Class (கணினி)

★கற்கைநெறிகள் யாவும் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
★Ms office 2007, DTP, Internet and E- mail, Wep Design, Graphic Design.
★பயிற்சியின் பின் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
★குறிப்பு:-கணினி இல்லாதவர்களுக்கு எனது LapTop மூலமாகப் பயிற்சியளிக்கப்படும்.
T.P- 0779672038, ஆசிரியர்:- KRC

யாழ்.தளபாட மாளிகை
Jaffna Furniture Palace

நவீனமுறையில் வடிவமைக்கப்பட்ட வீட்டுத் தளபாடங்கள், காரியாலய தளபாடங்கள் மற்றும் வீட்டு நிலை, கதவுகள், ஜன்னல்கள் வாடிக்கையாளர்களின் விருப்பத்துக்கு அமைய வேம்பு, முதிரை, தேக்கு போன்ற மரங்களில் வாழ்நாள் முழுவதும் நம்பிக்கையுரியதும் உத்தரவாதத்துடனும் செய்து கொடுக்கப்படும். அத்துடன் 15/- வீத விசேட கழிவு வழங்கப்படும்.

296, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 7662, 0772395000
E-mail: jfphnh@gmail.com

DHL
உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான
துரித கடிதங்கள் பொதிகள் சேவை

வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர்

London Rs750
CANADA, U.S.A, FRANCE, DENMARK, GERMANY, ITALY, NORWAY, SWISS Rs900

220 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு ஆகாய கடல் மார்க்கமாக உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புபொருட்கள், DVD, VCD போன்ற பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்

10 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு

குறிப்பு
DHL கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. போலி முகவர்களுக்கு கூடுதலான கட்டணத்தைச் செலுத்தி ஏமாற்றமடையாதீர்கள்.
ரூபாவிலோ அன்னிய நாட்டுச் செலாவணி முறையிலோ செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் பொதிகளை செலுத்தி உங்களுக்கான DHL Tracking Number களை பெற்றுக்கொள்ளலாம்.

வடமாகாணத்தில்
DHL
வலைப்பின்னலுடன் முதல் முதலாக
திருமுருகன் கொம் நெற் இணைக்கப்பட்டுள்ளது.
DHL Online Tracking

TCN Express,
2B,Nelsan place,Colombo-06.
Customer service No.021 222 7835

திருமுருகன் கொம்நெற்

இல.259,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம். இல.18,பிரதான வீதி, ... வீதி,கிளிநொச்சி. இல.46,ஆடியபாதம் வீதி,திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

TVS






Body Balance தொழில்நுட்பம்

மத்தியில் அமைந்த புவியீர்ப்பு மையம்

12" பாரிய சக்கரங்கள்

சேவை மேற்கொள்ளத் தேவையற்ற பற்றரி

# TVS wego - பயணம் Balance

- BODY BALANCE தொழில்நுட்பத்துடன் கூடிய 110cc ஸ்கூட்டர்.
- சொகுசான, வசதியான பயணத்திற்காக சிறந்த தொழில்நுட்பத்தைக் கொண்ட ஷொக் அப்ஸோபர் பாகம்.
- உங்கள் வசதிக்கென 15 இற்கும் மேற்பட்ட விசேட அம்சங்கள்.

அறிமுக விலை ரூ. 142,768/- + vat.

துரித அழைப்பு: 0770 777888

BODY BALANCE

wego

TVS MOTOR CO. GENUINE PARTS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TVS லங்கா (தனியார்) நிறுவனம். 757, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 14 தொ.பே: 0114 605200 பெக்ஸ்: 0114 614909

பிரதான காட்சியறை: தொ.பே: 0114 605246 நகர காட்சியறை: தொ.பே: 0114 710416 கிருளப்பனை காட்சியறை: தொ.பே: 0114 954375 ஜா-எல காட்சியறை: தொ.பே: 0114 979189 மற்றும் நாடுமுழுவதும் விநியோகஸ்தர்கள்.

# இரண்டு தலைப் பாம்புகளின் வாழ்க்கைப் போராட்டம்

இதுவரை நாம் காணாவிட்டாலும் உலகில் அதிகமாக இரண்டு தலையுடன் கூடிய பாம்புகள் உள்ளன. இதற்கு இரண்டு தலை இருந்தாலும் ஏனைய உறுப்புகள் யாவும் ஒன்றே.

கரு உருவாகும் போதே இரண்டும் தனி தனியாகவே பிறப்பதற்கு முயற்சிக்கும் ஆனால் இரண்டாகப் பிரிவதற்கு முன்பாகவே பிறந்துவிடும் ஆகவே இரண்டு தலையும் ஒரு உடலும் இருக்கும்.



இரண்டு தலைகளும் ஒரு உடலை பெற்றிருந்தாலும் இரண்டு தலைகளுக்குமே தெரியாது தாங்கள் இரட்டையர்கள் என்று.

உணவு உண்ணும் போது ஏதேனும் ஒரு தலையால் மட்டுமே உண்ணமுடியும், ஆனால் மற்றத் தலையின் பசியும் காணமல் போய்விடும் அதனால் உணவு உட்கொள்ளாத தலைக்கு குழப்பம் ஏற்படும் போது உணவுக்காக இரண்டு தலையும் வேட்டையாடும்.

இவ்வாறான குழப்பங்கள் உணவு உண்ணும் பொழுது மட்டுமல்ல, தான் போகும் பாதையை முடிவு செய்வதிலும் கூட ஏற்படும், அதில் எது பலமானதாக இருக்கிறதோ அதன் திசையில் சென்றுவிடும்.

தனக்கு எதிரியான பாம்புகள்ளக் காணும் பொழுது பாம்பின் ஒரு தலை தப்பித்துக் கொள்ள நினைத்தாலும், மற்ற தலையானது சண்டையிடவே முயற்ச்சித்து இறுதியில் மரணத்தைச் சம்பாதிக்கின்றது. எனவே தான் காடுகளில் இரண்டு தலைப் பாம்புகளைக் காண்பது அரிது.

இரண்டுதலை பாம்புகள் சுமார் இருபது வருடம் வரை வாழும் திறனுடையன. அதைபோன்று இரண்டு தலை பாம்புகளின் வலது தலை தான் முடிவுகளை எடுக்கும் திறனுடையது, அதாவது எந்த உணவை உண்பது, எந்த பாதையில் செல்வது போன்ற முடிவுகளை எடுக்கின்றது.




## மாயமான நிலப்பகுதிகள் அட்லாண்டிக் கடல் படுகையில் கண்டுபிடிப்பு

5 கோடியே 60 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் மாயமான மலைகள், நிலப்பகுதிகள் வடக்கு அட்லாண்டிக் கடல்படுகையில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இந்த மாய உலகம் ஓர்க்னே ஷெட்லேண்ட் தீவுப் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பழைய நிலபரப்பு 1.2 மைல் ஆழம் உடையதுடன் மலைகளையும் 8 பெரும் நதிகளையும் கொண்டதாக இருந்துள்ளது.

இந்தப் பகுதி தற்போதைய ஸ்கொட்லாந்துப் பகுதிக்கு அருகாமையில் அமைந்துள்ளது. இந்த மறைந்த நிலபரப்புக் குறித்து

(V ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# U-coat

WOOD COATING
WATER BASED

Water Based
DIY Coatings For Wood



யு-கோட் தண்ணீர் தன்மையுடையது

பெறக்கூடிய விலையில் மிக உயர்ரக தண்ணீர் தன்மையையுடைய மரப்பூச்சு.

எமது முன்னேற்றகரமான தொழில்நுட்பவியலால் விசேடமாக யு-கோட் தண்ணீர் தன்மையையுடைய பூச்சு எமது உள்ளூர் காலநிலைக்கேற்பத் தயாரிக்கப்பட்டது. கடுமையான சூரிய ஒளி வரட்சியையும், ஈரலிப்பையும் எதிர் கொள்ளக்கூடிய மேல்பூச்சாகும்.

எந்தவொரு மரத்திலும் யு-கோட் தண்ணீர் தன்மையையுடைய மரப்பூச்சு பலவகையான இயற்கை நிறமுடைய மரப்பூச்சுகளையுடைய அதி உன்னத வேலைப்பாட்டை வழங்கும்.

யு-கோட் தண்ணீர் தன்மையையுடைய மரப்பூச்சு இலகுவான பாவனைக்கு உகந்ததும், சுற்றுச்சூழலை மாசுபடுத்தாததுமாகும்.

உற்பத்தியாளர்

UCL

யூனியன் கெமிக்கல்ஸ் லங்கா பி.எல்.சி.
4வது மாடி, சரதி கட்டிடம்,
50, ஹைட்பார்க் கோனர்,
கொழும்பு-02, இலங்கை.
தொலைபேசி: +94 11 2472921/3
தொலைநகல்: +94 11 2472926
மின்னஞ்சல்: ucl@ucl.lk
இணையத்தளம்: www.ucl.lk

யாழ்ப்பாணத்தில் விநியோக முகவர்களை எதிர்பார்க்கின்றோம். விபரங்களுக்கு மேலுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# HERO HONDA

Hunk

## டபிள் டிஸ்க் உடன்



விலை ரூ.195,982/- (வரிகள் உள்ளடக்கப்படவில்லை) சிங்கிள் டிஸ்க் கொண்டது ரூ.182,589/- (வரிகள் உள்ளடக்கப்படவில்லை) ஜக்கட் & ஹெல்மெட் இலவசம்






ஒப்பற்ற உத்தரவாதம் 3 வருடங்கள்/40,000கி.மீ | முன்பக்க பின்பக்க டிஸ்க் பிரேக் | ரியூப் இல்லாத டயர்கள் | டிஜிட்டல் / அனலொக் மீட்டர் பனல்

இலங்கையில் அனைத்து ஹீரோ ஹொன்டா உற்பத்திகளுக்கும் அங்கீகாரம் பெற்ற ஏக விநியோகஸ்தர்கள்

## ஸ்டபர்ட் மோட்டர் கம்பனி லிமிட்டட்

தலைமை அலுவலகம்: 718/7 மருதானை வீதி, கொழும்பு 10. 011 7607200
மோட்டார் சைக்கிள் கொம்பிளக்ஸ்: 161, கொழும்பு வீதி, களனி. 011 7607450
மற்றும் நாடு முழுவதுமுள்ள சகல அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்களிடமும்



அவசரமான CALL க்கு பதிலாக ஒரு நிமிட

# IDD கூல் CALL

| | | | FIXED | MOBILE |
|---|---|---|---|---|
| INDIA | ~~8/-~~ | ▶ | 2/- | 2/- |
| UK | ~~28/-~~ | ▶ | 2/- | 15/- |
| CANADA | ~~14/-~~ | ▶ | 2/- | 2/- |
| MALAYSIA | ~~14/-~~ | ▶ | 3/- | 3/- |
| ITALY | ~~25/-~~ | ▶ | 3/- | 18/- |
| AUSTRALIA | ~~28/-~~ | ▶ | 3/- | 13/- |
| KUWAIT | ~~30/-~~ | ▶ | 10/- | 14/- |
| SAUDI ARABIA | ~~30/-~~ | ▶ | 10/- | 14/- |
| UAE | ~~30/-~~ | ▶ | 14/- | 14/- |
| QATAR | ~~30/-~~ | ▶ | 18/- | 18/- |

அனைத்து நாடுகளுக்குமான கட்டண விபரங்களுக்கு #107# ஐ அழையுங்கள்

இலாபகரமான IDD Per Minute பக்கேஜினுள் #678# டயல் செய்து நுழைந்திடுங்கள்

பொருத்தமான வரிகள் உள்ளடக்கப்படும்.
நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
www.dialog.lk/idd

Dialog


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதியவகை கைக்கடிகாரம்



கடிகாரம் என்பது அத்தியாவசியமான ஒன்று. அவசரமான உலகின் வேகத்தை அளவிடுகின்ற அற்புத கருவியாக கடிகாரம் விளங்குகிறது என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு இருக்கையில் கடிகாரங்களின் வடிவங்களும் புதிது புதிதாக வெளிவருகின்றன. ஜப்பானின் ''டோக்கியோ பிளாஸ்'' என்னும் கடிகார வடிவமைப்பு நிறுவனம் அண்மையில் புதிய வகை கடிகாரம் ஒன்றை அறிமுகப்படுத்தியிருக்கிறது.

பார்ப்பதற்கு கைச்சங்கிலி போலிருக்கும் இந்தக் கடிகாரத்தைப் பார்ப்பவர்கள் கையை அழகுபடுத்தும் கைச்சங்கிலி என்றே நினைப்பார்கள்.

ஆனால் அது கடிகாரமாகவும் செயற்படும். அந்த கைச்சங்கிலியில் இரண்டு பொத்தான்கள் இருக்கின்றன. அதில் ஒரு பொத்தானை ஒருதடவை அழுத்தினால் நேரத்தைக் காட்டும். இன்னொரு முறை அழுத்தினால் மாதத்தையும் திகதியையும் காட்டும்.

சங்கிலிக் கோர்வையின் இடையில் பொருத்தப்பட்டிருக்கின்ற சிறிய LED திரைகளிலேயே இந்த நேரம் தென்படும் விதத்தில் வடிவமைத்திருக்கிறார்கள்.

130 அமெரிக்க டொலர்கள் பெறுமதியில் இந்த கடிகாரங்கள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### மாயமான....

(II ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேம்பிரிட்ஜ் பல்கலைகழக ஆய்வாளர் நிக்கிவொயிட் ஆய்வு செய்துள்ளார்.

கண்டுபிடிக்கப்பட்ட நிலப் பகுதி பழங்காலப் படிவம் உடைய நிலப்பகுதியாக 1.2 மைல் அளவு கடல்படுகைக்கு அருகே பாதுகாக்கப்பட்டுள்ளது.

கண்டுபிடிக்கப்பட்ட நிலப் பரப்பில் சிறு படிவங்கள் இருப்பதால் அந்தப் பகுதி கடல்சார் சுற்றுச் சூழலுடன் அமைந்திருக்கும் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

பல கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த மிக அபூர்வமான நிலப்பகுதி கண்டுபிடிப்புக் குறித்து நேச்சர்ஜியோ சயின்ஸ் ஆய்வு இதழில் வெளியாகியுள்ளது.

கடலுக்கு அடியே உள்ளே கற்களில் இருந்து சேகரிக்கப்பட்ட முக்கிய ஆதாரங்கள் மூலம் அந்தப் பழைய பூமியில் குடியிருப்புகளும் இருந்துள்ளதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.


# நாயகர்களின் நாயகன்
# ரூ. 99,000/- வுக்கு
# சென்றல் பினான்ஸ் மூலம்*

காப்புறுதி இலவசம்




WORDS

விசேட லீசிங் வசதிகளையும் பெற்றுக்கொள்ளலாம்

- 25 குதிரை வலு கொண்ட சக்தி மிக்க டீசல் எஞ்ஜின்
- விலை ரூபா 855,000/- (அனைத்து வரிகள் அடங்கலாக)
- சுமக்கக்கூடிய மொத்த எடை 850 கி.கி
- ஒரு வருட / 40,000 கி.மீ உத்தரவாதம்*

CF

சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சீ

நேரடி தொலைபேசி இல. 011 2315315

*நிபந்தனைகளும் அடங்கும்

புத்தம் புதிய வாகனம் டீசல் சிறந்த எரிபொருள் சிக்கனம்

அயிடியல் வாகனம் - CF லீசிங் சக்தி - வெற்றிக்கு வழி

Mahindra MAXXIMO

Mahindra Rise.

அயிடியல் மோட்டர்ஸ் தனியார் நிறுவனம்
271, காலி வீதி, கொழும்பு 3

IDEAL Motors 011 7755555


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

மீண்டும் காப்புறுதியின்
பெரிய
போனஸ்

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
ஆயுள் காப்புறுதியாளர்களுக்கு
ரூ. 340 கோடி



தி.எம். தில்ஷான்
இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர்

"ஆயுள் காப்பீடு என்பது முழு எதிர்காலத்திற்குமான முதலீடாகும். நிறுவனத்தின் மூலதன ஸ்தீரதன்மை காரணமாகவே நான் ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸினை தெரிவு செய்தேன். இதனை சர்வதேச தரக் கட்டுப்பாடுகளும் உறுதி செய்துள்ளன"

TRIAD 24170

AAA RAM RATINGS
AA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org